# செம்மணி

நிலம் 2 துகள் 92 வள்ளுவர் ஆண்டு 2052, 23 - 29 சித்திரை 2022 வாரமலர் பக்கங்கள் 20 விலை ரூபா 50/-

# உயிர்த்த ஞாயிறு தாக்குதலால் பாதிக்கப்பட்டோர் பாப்பரசரிடம் முறையிட வத்திக்கானுக்கு பயணம்

## பேராயர் கர்தினால் ரஞ்சித்துடன் கூடச் சென்றனர்

இலங்கையில் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் நடந்து மூன்று ஆண்டுகள் கடந்துள்ள நிலையிலும் அந்தத் தாக்குதலைத் தடுக்கத் தவறிய அரசியல் தலைவர்கள் பொறுப்புக் கூறலுக்கு உள்ளாக்கப்படாதமை குறித்து முறையிடுவதற்காக தாக்குதலால் பாதிக்கப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த உறுப்பினர்கள் வத்திக்கான் சென்றுள்ளனர்.

பேராயர் கர்தினால் மல்க்கம் ரஞ்சித் தலைமையில் வெள்ளிக் கிழமை புறப்பட்ட 60 பேர் கொண்ட குழுவில் பாதிக்கப்பட்ட மக்களின் பிரதிநிதிகளும் உள்ளடங்கியுள்ளனர். பாப்பரசரின் அழைப்பின் பேரில் இவர்கள் வத்திக்கான் செல்கின்றனர் என்று கொழும்பில் உள்ள கத்தோலிக்க தலைமைப்பீடம் தெரிவித்தது.

உயிர்த்த ஞாயிறு பக்கம் 02





# மு.காவிலிருந்து ஹாபீஸ் நீக்கம்!

அரசுக்கு ஆதரவளித்து அமைச்சுப் பொறுப்பை ஏற்ற ஹாபீஸ் நஸீர் அஹமட்டைக் கட்சியின் உறுப்புரிமை மற்றும் அனைத்துப் பதவிகளில் இருந்தும் நீக்க ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உயர் பீடம் தீர்மானித்துள்ளது.

தாருஸ்ஸலாமில் கட்சித் தலைவர் ரவூப் ஹக்கீம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

முன்னதாக அரசுக்கு ஆதரவளித்து பின்னர் அதிலிருந்து வெளியேறிய இதர எம்.பிக்களுக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணைகளை முன்னெடுக்கவும் இங்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கு வசதியாக அவர்கள் மூவரும் கட்சியிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளார்கள்.

# நாணய நிதியத்துடன் பேச்சு உடன் உதவிக்கு வழியில்லை

இலங்கையின் தற்போதைய நிதி நெருக்கடியில் இருந்த மீள்வதற்கான உதவிகளை எதிர்பார்த்து பன்னாட்டு நாணய நிதியத்துடன் நாட்டின் நிதி அமைச்சர் தலைமையிலான குழுவினர் நடத்திய பேச்சுக்களின் அடிப்படையில் உடனடி உதவிகள் எவையும் கிடைப்பதற்கான சாத்தியக்கூறுகள் வெளிப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

கடன்களைத் திருப்பிச் செலுத்துதல் தொடர்பான பேச்சுக்களில் இரு தரப்பின பக்கம் 02

# இந்த ஆட்சி மீதான நம்பிக்கையில்லா தீர்மானத்தை தாமதிக்கக் கேட்கிறார் ரணில்

ராஜபக்சக்கள் தலைமையிலான ஆட்சியின் மீது நம்பிக்கையில்லா தீர்மானத்தை நிறைவேற்றும் நோக்கத்தோடு எதிர்க்கட்சியினால் நடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ள வரைபை வாக்கெடுப்புக்கு விடுவதைத் தாமதிக்கும்படி கேட்டிருக்கிறார் ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க.

பன்னாட்டு நாணய நிதியத்துடன் நிதி அமைச்சர் அலி சப்ரி நடத்திய பேச்சுக்களின் விவரங்களை அவர் நாடாளுமன்றத்திற்கு அறிக்கையிட்டதன் பின்னர் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீது வாக்கெடுப்பு நடத்தலாம் என்று அவர் தெரிவித்திருக்கிறார். பக்கம் 02

# ரம்புக்கண சமிந்தவின் சாவு ஒரு கொலை குற்றவாளிகளுக்கு தண்டனை வேண்டும்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் வலியுறுத்து



மண்எண்ணெய் வாங்க வந்த சமிந்த லக்சானைக் கொடூரமாகக் கொலை செய்த அனைவரையும் சட்டத்தின் முன் நிறுத்தி கடுமையான தண்டனை வழங்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தினார் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ.

ரம்புக்கணையில் மக்களின் போராட்டத்தின் மீது காவல்துறையினர் துப்பாக்கிச் சூடு நடத்தியதில் கொல்லப்பட்ட சமிந்த லக்சனுக்கு இறுதி மரியாதைச் செலுத்திய பின்னர் சஜித் இதனைத் தெரிவித்தார். சமிந்தவின் இறப்பு தற்செயலானது அல்ல அதுவொரு படுகொலை என்றும் அவர் சாடினார்.

இரு பிள்ளைகளின் தந்தையாரான கரந்தகஸ்தென்ன - நாரம்பந்த பகுதியைச் சேர்ந்த சமிந்தவின் வீட்டுக்குச் சென்ற எதிர்க்கட்சித் தலைவரும் அவரது பாரியாரும் புகழுடலுக்கு நேரில் இறுதி அஞ்சலியைச் செலுத்தினர். தனது கணவரின் இறப்பால் பரிதவித்துப் போயுள்ள திருமதி சமிந்தக்கும் அவருடைய இரு பிள்ளைகளுக்கும் ஆறுதல் தெரிவித்தனர்.

இந்தக் கொலைச் சம்பவம் குறித்து உரிய விசாரணை நடத்த அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டுவர சாத்தியமான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என பக்கம் 18

# மகிந்தவும் அமைச்சரவையும் விலகி வழிவிடவேண்டும்

## முன்னாள் அமைச்சர் டலஸ் வலியுறுத்து

தலைமை அமைச்சர் மகிந்த ராஜபக்சவும் தற்போதைய அமைச்சரவையும் பதவி விலகி அனைத்துக் கட்சி அமைச்சரவை ஒன்று பதவியேற்பதற்கு வழிவிடவேண்டும் என்று வலியுறுத்தியிருக்கிறார் முன்னாள் அமைச்சர் டளஸ் அழகப்பெருமா.

அவர் இது தொடர்பில் அரச தலைவர் கோட்டாபய ராஜபக்சவுக்கு கடிதம் ஒன்றையும் எழுதியுள்ளார்.

பொருளாதார நெருக்கடிக்குள் இலங்கை சிக்கிக் கொண்டதை அடுத்து பக்கம் 02

# மின்சார விநியோகத்திற்கு மேலும் ஆபத்து காத்திருப்பு

இலங்கையில் மின்சார விநியோகம் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக ஏற்கனவே சீர்குலைந்துள்ள நிலையில் அதற்கு மேலும் ஒரு ஆபத்துக் காத்திருப்பதாக எச்சரிக்கப்படுகின்றது. மின்சார விநியோகத்தில் கணிசமான பங்கைக் கொண்டிருக்கும் கரியை மூலப்பொருளாகக் கொண்ட மின் உற்பத்தி நிலையங்களைப் பராமரிப்பதற்கு வேண்டிய உதிரிப்பாகங்கள் கடந்த இரண்டு வருடங்களாகக் கிடைக்காமையால் இந்த நிலையங்கள் எப்போது வேண்டுமானாலும் செயலிழந்துபோகும் அபாயம் ஏற்பட்டுள்ளது என்று அந்த நிலையங்களின் எந்திரிகள் எச்சரித்துள்ளனர்.

இலங்கையில் உள்ள மூன்று முக்கிய கரி மின் உற்பத்தி நிலையங்கள் இந்த அபாயத்தை எதிர்கொண்டுள்ளன. புத்தளம் லக்விஜயா வளாகத்தில் மூன்று 300 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் நிலையங்கள் உள்ளன. இவற்றின் மூலம் நாட்டின் மின்சாரத் தேவையின் 40 சதவீதம் பக்கம் 18

செம்மண்

வாரப் பத்திரிகை
551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
மின்னஞ்சல்: shemman.redsoil@gmail.com
தொடர்பு எண்: 021 492 7781
உரிமை மற்றும் வெளியீடு: கிறீன் மீடியா கவுஸ் பிரை. லிட்

**ஆசிரியர்: தே.பிரேமானந்த்**

# திரிசங்கு நிலை பயன் தராது

நாடு பொருளாதார நெருக்கடியில் இருந்து மீளுமா? உடனடியாக இல்லை. நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு ஆட்சியாளர்களிடம் ஏதாவது திட்டம் இருக்கிறதா? கடனை அடைப்பதற்கு அண்டை நாடுகளிடமும் நட்பு நாடுகளிடமும் குறுங்காலக் கடன் பெறுவதும் பன்னாட்டு நாணய நிதியம், உலக வங்கி, ஆசிய வங்கி போன்றவற்றிடம் நீண்டகாலக் கடன் பெறுவதுமே இருக்கின்ற யோசனை. ஆட்சி மாற்றம் ஏற்படுமா? எதிர்க் கட்சிகளிடம் ஒற்றுமையில்லை என்பதால் அது உடனடிச் சாத்தியமில்லை. அரச தலைவர் பதவி விலகுவாரா? அவருக்கு எதிராக நாடாளுமன்றத்தில் குற்றவிசாரணைத் தீர்மானம் நிறைவேறினால் அது நடக்கக்கூடும். அந்தத் தீர்மானம் நிறைவேறுமா? ஆளும் தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களில் சிலராவது ஆதரித்தால் அது நடக்கலாம்.

இப்படி இலங்கையின் அரசியல், பொருளாதார நிலைமைகளில் எதுவும் திட்டவட்டமானதாக, உறுதியானதாக இல்லாமல் திரசங்கு நிலையிலேயே தவிக்கின்றது. இதனால் ஆட்சியாளர்களுக்கோ பணக்காரர்களுக்கோ எந்தப் பாதிப்புமில்லை. ஆனால் மக்களும் ஏழைகளும்தான் கடும் பாதிப்பை எதிர்நோக்குகின்றார்கள். நாடு உறுதியான திடமான அரசியல் நிலையை அடையாமல் பொருளாதாரத்தைச் சீர்ப்படுத்த முடியாது. பொருளாதாரச் சீரழிவுக்கு மத்தியில் அரசியல் நிலைத்தன்மை அவ்வளவு இலகுவானதல்ல என்கிற காரணத்தையும் ஏற்றுக்கொண்டாகவேண்டும். அவ் வாறான நிலையில் இரண்டுமே சமாந்தரமாக நடந்து முடிய வேண்டியவைகளாக இருக்கின்றன.

இதனை உணர்ந்துகொண்டு அரசியல்வாதிகள் செயற்படுபவர்களாகத் தெரியவில்லை. மக்கள் வீதிக்கு இறங்கி போராட்டங்களைத் தீவிரப்படுத்தி வாரங்கள் பல கடந்துவிட்டன. உயிர்க் காவு எடுக்குமளவிற்கு அந்தப் போராட்டங்கள் தீவிரமடைந்துவிட்டன. ரம்புக்கணையில் ஒருவர் உயிரிழக்க மேலும் மூவர் படுகாயங்களுக்கு உள்ளாகியுள்ளனர். ஆனாலும் அதிகாரத்தில் உள்ளவர்கள் அதை இறுக்கப்பிடித்தபடி மக்களின் மண்டையோடுகளுக்கு மேல் தமது ஆட்சிக் கதிரையை நிலைநிறுத்துவதில் உறுதியாகப் இருக்கிறார்கள். மறுபுறத்தில் இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி தமது அரசியல் தேவைகளை நிறைவேற்றிக்கொள்வதில் எதிர்க்கட்சிகள் மும்முரமாக நிற்கின்றன.

நிறைவேற்று அரச தலைவர் ஆட்சிமுறையை ஒழித்துக் கட்டி நாடாளுமன்றத்திக்கு அதிகாரங்களைக் கைமாற்றும் நடவடிக்கையில் எதிர்க் கட்சிகள் தீவிரம் காட்டி வருகின்றன. பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கான வழிவரைபடமோ, திட்டமோ அவற்றிடமும் இருப்பதாகத் தெரியவில்லை. எனவே எரிகறி வீட்டில் பிடுங்கியது இலாபம் என்பதைப் போல இந்த அரசியல் நிலைமையைப் பயன்படுத்தி தமது அரசியல் தேவையைப் பூர்த்தி செய்துகொள்வதற்கு அவை முன்னிற்கின்றன.

நிறைவேற்று அதிகார முறைமையை ஒழிப்பது பொருளாதாரச் சீரழிவைத் தடுக்கக்கூடியதல்ல. அதேநேரத்தில் சீரழிந்த அரசியல் தலைமைகளை வைத்துக்கொண்டு பொருளாதாரத்தைச் சீர்ப்படுத்துவதும் நடக்கக்கூடியதல்ல. இவையிரண்டையுமே தூய்மைப்படுத்தவேண்டியதொரு திட்டம் நோக்கி நகரவேண்டியது இந்தக் கட்டத்தில் முக்கியமானது.

மோசமான அரசியல் சிந்தனைகளாலும், முறைகேடுகள், ஊழல்களாலும் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கும் அரசியல் கட்சிகளின் கைகளில் மாறி மாறி ஆட்சியைக் கையளித்தன் காரணமாகவே நாடு இன்றைய நிலைக்கு வந்து சேர்ந்தது. கடைசியில் கழுவேற்றியது ராஜபக்சக்கள்தான் என்றாலும் அவர்களால் மட்டுமே வந்ததல்ல இந்த நிலை. பிரிட்டிஷாரிடமிருந்து விடுதலை பெற்றது முதல் நாட்டை ஆண்ட அரசியல்வாதிகள் அனைவருமே இதற்குக் காரணகர்த்தாக்கள். அந்த வழித்தோன்றல்களான இன்றைய அரசியல்வாதிகளால் தற்போதுள்ளதைவிட மேம்பட்டதொரு அரசியல், பொருளாதார நிலையை நாட்டுக்குத் தர முடியப் போவதில்லை.

எனவே நாட்டை பொருளாதார நிலையிலிருந்தல்ல செல்லரித்துப்போன இன்றைய அரசியல்வாதிகளிடமிருந்தும் மீட்பது மிக முக்கியம். இன்றைய மக்கள் போராட்டங்கள் அதற்கானதாக வழிநடத்தப்படுவது அவசியம். இல்லையேல் இன்றைய திரிசங்கு நிலையால் கிட்டப்போகும் பயன் ஏதுமில்லை.

## உயிர்த்த ஞாயிறு....

தாக்குதலால் பாதிக்கப்பட்டவர்களை வத்திக்கானின் சென். பீற்றர்ஸ் பசிலிக்கா தேவாலயத்தில் வைத்து பாப்பரசர் ஆசீர்வதித்து அவர்களுக்காகப் பிரார்த்தனையையும் நடத்துவார். இலங்கையில் இருந்து சென்றிருக்கும் குழுவினருடன் அவர் உயிர்த்த ஞாயிறு தாக்குதலால் ஏற்பட்ட பாதிப்பு குறித்தும் அரச தரப்பால் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகள் குறித்தும் கலந்துரையாடுவார் என்று பேராயர் அலுவலகப் பேச்சாளர் அருட்தந்தை சிறில் காமினி தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் நடந்து சித்திரை (ஏப்ரல்) 21ஆம் நாள் மூன்று ஆண்டுகள் நிறைவடைந்ததையொட்டி பாப்பரசருடனான சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது. இந்தத் தாக்குதலில் 269 பேர் கொல்லப்பட 500க்கும் அதிகமானவர்கள் காயமடைந்திருந்தனர்.

வத்திக்கான் புறப்படுவதற்கு முன்னதாக உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் மூன்றாமாண்டு நினைவு நிகழ்வில் உரையாற்றிய பேராயர் மல்கம் ரஞ்சித், கோட்டாபய ராஜபக்சவை அரச தலைவர் பதவிக்குக் கொண்டு வருவதற்காக அரச புலனாய்வுப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட சதி நடவடிக்கையாக இது இருக்கும் என்கிற சந்தேகத்தை வெளிப்படுத்தியிருந்தார்.

இந்த நிலையிலேயே அவர் தலைமையிலான 60 பேர் குழு வத்திக்கான் பயணமாகி உள்ளது.

"முறையான விசாரணை ஒன்று நடத்தப்படுவதற்கும் உண்மையை வெளிக்கொண்டு வருவதற்குமான அழுத்தத்தை பன்னாட்டுத் தொடர்பாடல்களுக்கு ஊடாகவும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை போன்ற பன்னாட்டு அமைப்புக்களுக்கூடாகவும் நாம் வழங்குவோம்" என்று அருட்தந்தை காமினி தெரிவித்தார்.

## நாணய...

ருக்கும் இடையில் ஆக்கபூர்வமான முன்னேற்றம் எட்டப்பட்டபோதும், நிதி நெருக்கடியில் இருந்து மீள்வதற்கான உடனடி உதவிகள் தொடர்பான இலங்கையின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதற்கான உத்தரவாதம் ஏதும் நாணய நிதியத்தின் பக்கமிருந்து கிடைக்கவில்லை என்று தெரிகின்றது.

இருப்பினும் நாட்டின் நிதி நிலை தொடர்பில் நாணய நிதியத்தின் அதிகாரிகள் ஆழ்ந்த கரிசனையோடும் அனுதாபத்தோடும் கேட்டார்கள் என்று நிதி அமைச்சர் அமெரிக்கத் தலைநகர் வோஷிங்டனில் இருந்து தெரிவித்தார். அதேநேரம் குறுகிய காலத்திற்கான உடனடி நிதி உதவிகள் நாணய நிதியத்திடம் இருந்து கிடைக்கும் என்கிற நம்பிக்கையையும் அவர் வெளியிட்டார்.

இருப்பினும் இலங்கையைப் பிணை எடுப்பதற்கான உடனடி நிதி உதவித் திட்டங்கள் எவை தொடர்பிலும் நாணய நிதியம் வாக்குறுதிகளையோ இணக்கப்பாடுகளையோ எட்டவில்லை என்று வோஷிங்டன் செய்திகள் தெரிவிக்கின்றன. கடனை மீளச் செலுத்துவதற்கான கால எல்லையை மீள்வரையறை செய்யவதற்கான விடயத்தில் நாணய நிதியத்தின் உதவியை இலங்கை நாடியிருக்கின்றது என்பதை நிதி அமைச்சர் அலி சப்ரி உறுதிப்படுத்தினார்.

இலங்கை ஏற்கனவே வாங்கியிருக்கும் கடன்களுக்குத் திருப்பிச் செலுத்தவேண்டிய தவணைக் கட்டணத்தை செலுத்த முடியாத நிலை ஏற்பட்டிருக்கின்றது. போதிய டொலர் கையிருப்பு இல்லாத காரணத்தால் கடன் தவணைக் கட்டணத்தை செலுத்த முடியவில்லை. எனவே கடனை மீளச் செலுத்துவதற்கான வழிவகைகளை உரிய அமைப்புக்களுடன் பேசி மீள்வரையறை செய்துகொள்வதற்கும் அதனை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான உடனடி மற்றும் நீண்ட கால நிதி உதவிகளை வழங்குவதற்கும் நாணய நிதியத்தின் உதவி இலங்கை ஆட்சியாளர்களுக்குத் தேவைப்படுகின்றது.

## நம்பிக்கையில்லா...

நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு என்ன தீர்வு என்பதைத் தெரிந்துகொள்ளாமல் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை நிறைவேற்றுவதால் எந்தப் பயனும் இல்லை என்றும் அவர் தெரிவித்தார்.

ஆட்சியாளர்கள் தெளிவான நிதிக் கொள்கைத் திட்டத்தை அறிவிக்காமல் அவசர நிதி உதவியை பன்னா ட்டு நாணய நிதியம் வழங்கப்போவதில்லை என்று கூறிவிட்டதாகச் செய்திகள் கிடைக்கின்றன, எனவே நாட் டின் நிதி நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு என்ன திட்டத்தை வைத்திருக்கிறார்கள் என்பதை அரச தலைவரும் தலைமை அமைச்சரும் நாடாளுமன்றத் திற்கும் மக்களுக்கும் அறிவிக்கவேண்டும் என்றும் ரணில் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் 113 உறுப்பினர்களின் ஆதரவைப் பெறும் ஒரு ஆட்சியினால் இந்த நிதி நெருக்கடியைச் சமாளிக்க முடியாது, குறைந்தபட்சம் 175 உறுப்பினர்களின் ஆதரவைப் பெறும் ஆட்சியால் மட்டுமே இத்தகைய நிலையைச் சமாளிக்க முடியும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த ஆட்சியின் மீது நம்பிக்கையில்லை எனத் தெரிவிக்கும் பிரேரணையை ஐக்கிய மக்கள் சக்தி ஏற்கனவே நாடாளுமன்றத்தில் சபாநாயகரிடம் கையளித்துள்ளது. அதேநேரத்தில் அரசமைப்பிற்கான 21ஆவது திருத்த வரைபையும் தனிநபர் பிரேரணையாக ஐக்கிய மக்கள் சக்தி முன்வைத்துள்ளது.

## மகிந்தவும்...

மக்கள் வீதிக்கு இறங்கிப் போராட்டங்களில் ஈடுபட்ட காரணத்தால் அமைச்சரவை கூண்டோடு பதவி விலகியது. எனினும் தலைமை அமைச்சர் மகிந்த ராஜபக்ச தனது பதவியிலிருந்து வெளியேறவில்லை.

அதேநேரம் அமைச்சுப் பதவிகளை ஏற்றுக்கொண்டு அனைத்துக் கட்சி ஆட்சி ஒன்றை அமைப்பதற்கு முன்வருமாறு அரச தலைவர் விடுத்த வேண்டுகோளை எதிர்க்கட்சிகள் ஏற்றுக்கொள்ளவுமில்லை. இந்த நிலையில் மீண்டும் அமைச்சரவை ஒன்றை அரச தலைவர் கோட்டாபய ராஜபக்ச நியமித்துள்ளார்.

புதிதாக நியமிக்கப்பட்ட அமைச்சரவையில் பதவியை ஏற்றுக்கொள்ளுமாறு விடுக்கப்பட்ட அழைப்பை டளஸ அழகப்பெருமா நிராகரித்திருந்தார் என்று கூறப்படுகின்றது. இந்தப் பின்னணியிலேயே தலைமை அமைச்சர் மகிந்தவும் தற்போதைய அமைச்சரவையும் பதவி விலகி அனைத்துக் கட்சி அமைச்சரவைக்கு வழிவிடவேண்டும் என்று அவர் வலியுறுத்தியிருக்கிறார்.

அப்படிச் செய்வதன் மூலம் அவர்கள் ஆற்றும் தியாகம் என்றும் நினைவுகூரப்படும் என்பதுடன் வரலாற்றில் நிலைத்திருக்கும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். குறைந்தபட்சம் ஒரு வருட காலத்திற்காவது அனைத்துக் கட்சி அமைச்சரவை ஒன்றை அமைப்பதன் மூலமே தற்போதைய நெருக்கடியில் இருந்து மீட்சியடைய முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

தலைமை அமைச்சர் மகிந்த ராஜபக்சவின் தலைமைத்துவத்தின் மீது தமக்கு முழு நம்பிக்கை உள்ளதாக ஆளும் பெரமுன கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தீர்மானம் நிறைவேற்றினர் என்று தலைமை அமைச்சர் அலுவலகம் அறிக்கைவிட்டிருந்த பின்னணியிலேயே அதே கட்சியைச் சேர்ந்தவரான டளஸ் தனது கோரிக்கையை முன்வைத்திருக்கிறார்.

# அருந்ததி

இணைய திருமண சேவை

**www.arunthathee.com**
**+94 777 164 524**

## மணமகன் விபரம் (மணமகள் தேவை)

**23701 | வே | 1988**
சதுமலை | இந்து | BSC
Network Engineer
மகம் (சிம்மம்)
177 செ.மீ | செவ்: 01

**23662 | வே | 1991**
மிருசுவில் | MIT, BSC, MBA
Junior Network Engineer
அவுஸ்ரேலியா | கிறிஸ்தவம்
157 செ.மீ

**23671 | வே | 1991**
குரும்பசிட்டி | B.Com
Junior Bank Executive
திருவோணம் (மகரம்)
180 செ.மீ | இந்து

**23584 | வே | 1992**
மல்லாகம் | இந்து
BSC, MBA | Engineer
அனுஷம் (விருச்சிகம்)
170 செ.மீ | செவ்: 01

**23563 | வே | 1993**
உரும்பிராய் | இந்து | BIT
IT Officer | அவுஸ்ரேலியா
திருவோணம் (மகரம்)
171 செ.மீ | செவ்: 02

**23551 | செ.மு | 1993**
முல்லைத்தீவு | இந்து | A/L
Own Business|அவுஸ்ரேலியா
ரோகிணி (ரிஷபம்)
160 செ.மீ | செவ் : 12

**23524 | வே | 1996**
கொக்குவில் | இந்து | B.Eng
Software Engineer
சித்திரை (கன்னி)
168 செ.மீ

**23515 | வே | 1994**
மிருசுவில் | இந்து | B.Eng
Real Estate Agent | கனடா
பூரம் (சிம்மம்)
192 செ.மீ

**23512 | வே | 1991**
இணுவில் | இந்து | A/L
Supervisor | மலேசியா
அனுஷம் (விருச்சிகம்)
170 செ.மீ | செவ் : 12

**23500 | வே | 1986**
திருநெல்வேலி | இந்து | BSC
Quantity Surveyor
மிருகசீரிடம் (மிதுனம்)
188 செ.மீ

**23470 | வே | 1990**
பருத்தித்துறை | BSC
Quanitity Surveyor | ஓமான்
கேட்டை (விருச்சிகம்)
152 செ.மீ | இந்து

**23464 | வே | 1990**
கந்தர்மடம் | இந்து | MBBS
Doctor | லண்டன்
அவிட்டம் (மகரம்)
182 செ.மீ | செவ் : 07

**23452 | வே | 1986**
காங்கேசன்துறை | BD.
Accounts & Finance | Accounts
Manager | லண்டன் | இந்து
ரோகிணி (ரிஷபம்) | 186 செ.மீ

**23419 | வே | 1986**
கைதடி | இந்து | B.Tech
Quality Controller
திருவாதிரை (மிதுனம்)
178 செ.மீ

**23410 | வே | 1992**
கொக்குவில் | இந்து | BSC
Registered Nurse
அனுஷம் (விருச்சிகம்)
172 செ.மீ | அமெரிக்கா

**23377 | வே | 1986**
உடுவில் | இந்து | MBA
Administrator | லண்டன்
ரோகிணி (ரிஷபம்)
170 செ.மீ

**23359 | வே | 1988**
உடுவில் | இந்து
ACCA | Accountant
கேட்டை (விருச்சிகம்)
179 செ.மீ | செவ் : 07

**23356 | வே | 1998**
மட்டக்களப்பு | இந்து | BSC
Intern QA Engineer
பூரம் (சிம்மம்)
178 செ.மீ

**23347 | ந | 1991**
நல்லூர் | இந்து | A/L
Chef | பிரான்ஸ்
அத்தம் (கன்னி)
168 செ.மீ | செவ் : 12

**23332 | வே | 1993**
திருநெல்வேலி | இந்து | A/L
Staff | சுவிட்சர்லாந்து
திருவோணம் (மகரம்)
178 செ.மீ | சு.செவ் : 02

**23305 | வே | 1991**
உரும்பிராய் | B.Eng, MSC,
Reading PHD | Reseacher
நேரர்வே | பூரம் (சிம்மம்)
இந்து | சு.செவ்: 05 | 178 செ.மீ

**23287 | வே | 1990**
காரைநகர் | இந்து | B.Eng
Software Consultant
பூராடம் (தனுசு)
173 செ.மீ

**23266 | வே | 1993**
அரியாலை | கிறிஸ்தவம் | MSC
Cyber Security Engineer
பிரான்ஸ் | பூரட்டாதி (கும்பம்)
170 செ.மீ

**23275 | வே | 1994**
புங்குடுதீவு | இந்து | BSC
Micro Biologist
மகம் (சிம்மம்)
169 செ.மீ | செவ் : 04

**23251 | வே | 1987**
வேலணை | இந்து | BSC
Development Officer
சதயம் (கும்பம்) | செவ்: 08
167 செ.மீ

## மணமகள் விபரம் (மணமகன் தேவை)

**23713 | வே | 1996**
கரவெட்டி | இந்து | BSC
Waiting for Graduation
அனுஷம் (விருச்சிகம்)
160 செ.மீ

**23710 | வே | 1996**
நெல்லியடி | இந்து
BSC | Student
திருவோணம் (மகரம்)
151 செ.மீ | சு.செவ்: 06

**23695 | வே | 1989**
நெல்லியடி | இந்து | A/L
Searching for a Job
உத்திரம் (கன்னி)
156 செ.மீ | செவ்: 01

**23668 | வே | 1988**
திருகோணமலை | Divorced
A/L | Tesco Manager
உத்திரம் (கன்னி) | லண்டன்
செவ்: 07 | 168 செ.மீ | இந்து

**23653 | வே | 1991**
நல்லூர் | இந்து | MBBS
Doctor | நோர்வே
அத்தம் (கன்னி)
154 செ.மீ | சு.செவ் : 06

**23650 | வே | 1991**
பருத்தித்துறை | இந்து
ACCA | Executive Bank
ஆய்யிலியம் (கடகம்)
155 செ.மீ | செவ்: 01

**23638 | வே | 1993**
வெள்ளவத்தை | இந்து
MBBS | Doctor
பூரட்டாதி (மீனம்)
171 செ.மீ | சு.செவ்: 10

**23614 | வே | 1993**
மானிப்பாய் | இந்து | இந்தியா
B.Tec, MBA, M.Phil, B.Ed
Student | சுவாதி (துலாம்)
170 செ.மீ | செவ் : 01

**23596 | வி | 1991**
வண்ணார்பண்ணை | இந்து
AAT | Audit Assistant
சதயம் (கும்பம்)
149 செ.மீ | செவ் : 08

**23599 | வே | 1997**
திருகோணமலை | இந்து | A/L
Searching for a Job
கார்த்திகை (மேடம்)
157 செ.மீ

**23530 | வே | 1998**
உடுப்பிட்டி | B.Eng, MBA
Software QA Engineer
கேட்டை (விருச்சிகம்) | இந்து
160 செ.மீ | செவ்: 07

**23527 | வே | 1994**
நெடுந்தீவு | இந்து | MBBS
Final Year Student
அத்தம் (கன்னி)
168 செ.மீ | சுவிட்சர்லாந்து

**23491 | வே | 1993**
சாவகச்சேரி | B. Fine Arts
Development Officer
திருவோணம் (மகரம்)
170 செ.மீ | இந்து

**23473 | வே | 1984**
வவுனியா | Widowed | BA
Development Officer
பரணி (மேடம்) | இந்து
155 செ.மீ | சு.செவ்: 10

**23458 | வே | 1992**
ஏழாலை | இந்து | BSC
Assistant Civil Engineer
பரணி (மேடம்)
164 செ.மீ

**23353 | வே | 1992**
தெள்ளிப்பளை | இந்து
BSMS | Doctor
சித்திரை (துலாம்)
155 செ.மீ

**23326 | வே | 1994**
உரும்பிராய் | இந்து | BSC
Reading MSC | Lecturer
மூலம் (தனுசு)
163 செ.மீ

**23284 | வே | 1992**
வவுனியா | இந்து
BSC | Engineer
சித்திரை (துலாம்)
172 செ.மீ | செவ் : 07

**23248 | வே | 1994**
ஆவரங்கால் | இந்து | BBA,
ACCA, MBA | Analyst
விசாகம் (துலாம்)
166 செ.மீ | சு.செவ் : 09

**23242 | வே | 1998**
வட்டுக்கோட்டை | இந்து | BSC
Project Manager
பூசம் (கடகம்)
165 செ.மீ

**அருந்ததி பிரைவட் லிமிட்**

**18, ராமகிருஸ்ணா அவினியு, வெள்ளவத்தை | 20 கே.கே.எஸ் வீதி கொக்குவில்**



▌டெட் நார்தௌஸ் பேட்டி

# இரசாயன உரப் பாவனைக்கான தடை இலங்கையில் பேரழிவிற்கு வித்திட்டது



இலங்கையின் பொருளாதார நிலைக் குலைவு உலகம் முழுவதும் பேசப்படுகிறது. கூடவே முன்னெப் போதும் இல்லாத அளவுக்கு இயற்கை விவசாயமும் பேசப்படுகிறது. இதற்கான காரணம், இன்று இலங்கையில் உணவுப் பொருள்களுக்கு நிலவும் தட்டுப்பாட்டுக்கு, உணவுப் பொருட்களின் உற்பத்தி வெகுவாகக் குறைந்திருப்பதும் ஒரு காரணம். இதற்கு, 'இரசாயன உரங்கள் மற்றும் பூச்சிகொல்லிகளைத் தவிர்ப்பது' என்று முடிவெடுத்து தடையை நடைமுறைப்படுத்தியதும் மற்றொரு காரணமாகும். பின்னர் இந்தத் தடையை நீக்கினாலும் உற்பத்தி வீழ்ச்சியைத் தவிர்க்க முடியவில்லை. தான் எடுத்த இந்த முடிவு தவறானது என்பதை நாட்டின் அரச தலைவர் கோட்டாபய ராஜபக்சவும் ஏற்றுக்கொண்டுவிட்டார். இதன் தொடர்ச்சியாக இயற்கை விவசாயத்துக்கு எதிராக உலகெங்கும் குரல்கள் ஒலிக்கத் தொடங்கியிருக்கின்றன. இது எந்த அளவுக்கு உண்மை? இதன் பின்னணி என்ன? 'டெட் நார்தௌஸ்' பேட்டி நமக்கு ஒரு சித்திரத்தை அளிக்கிறது.

அமெரிக்கரான டெட் நார்தௌஸ், 'தி பிரேக்த்ரூ இன்ஸ்டிடியூட்' அமைப்பின் இயக்குநர். 1966இல் பிறந்த இவர் பல நூல்களை எழுதியிருக்கிறார். மைக்கேல் ஷெல்லன்பர்கருடன் இணைந்து 2003இல் இந்நிறுவனத்தை நிறுவினார்.

சுற்றுச்சூழல் விழிப்புணர்வு முக்கியம் என்று பேசும் அதேசமயம், "சுற்றுச்சூழலியலாளர்கள் அச்சுறுத்துகிறபடி உலகம் அவ்வளவு வேகமாக அழிந்தெல்லாம் போய்விடாது!" என்றும் பேசுபவர். இயற்கை வளங்களை நவீனத் தொழில்நுட்பங்கள் உதவியுடன் அளவோடு பயன்படுத்தி வளமாக வாழலாம் என்கிறவர். அணுசக்தியையும் நகரமயமாக்கலையும் இணைத்து வளம் பெற முடியும் என்றும்கூடப் பேசுபவர். அவருடைய பல கருத்துகளைச் சுற்றுச்சூழலியல் ஆர்வலர்கள் கடுமையாக எதிர்க்கின்றனர்.

இத்தகு சூழலில் சமீபத்தில் வெவ்வேறு இதழ்களுக்கு அளித்த பேட்டியில், இலங்கைச் சூழலையும்கூடப் பேசியிருக்கிறார். அவருடைய பேட்டிகளிலிருந்து தொகுக்கப்பட்டவற்றை இங்கே நாம் பார்க்கலாம்.

**பருவநிலை மாற்றத்தை எப்படிப் புரிந்து கொள்வது?**

பருவநிலை மாற்றம் தொடர்பான இப்போதைய கொள்கை யதார்த்தத்தைப் புரிந்து கொள்ளாமல் கடுமையாக இருப்பதால் அதில் மாற்றம் அவசியம். தூய்மையான ஆற்றலைப் பெற உயர் தொழில்நுட்பங்களில் அதிகம் முதலீடு செய்யவேண்டும். தொழில்நுட்பங்களில் அதிகம் முதலீடு செய்வதால் சுற்றுச்சூழல் தரம் மேம்படுவதுடன் பொருளாதார வளர்ச்சி அதிகரிக்கும் மக்களுடைய வாழ்க்கைத் தரமும் அதிகரிக்கும்.

**இயற்கை விவசாயம் நட்டம்தான் தருமா?**

அப்படியெல்லாம் சொல்ல முடியாது. இயற்கை விவசாயத்தைப் பற்றிப் பேசும்போது நீங்கள் அடிப்படையாகப் புரிந்துகொள்ள வேண்டியது என்னவென்றால், அது ஒரு சிறப்பான விவகாரம் என்பதைத்தான். பணக்கார நாடுகளில் இயற்கை விவசாய சாகுபடி லாபகரமானதாக இருக்கலாம். காரணம், தங்களுடைய விளைபொருள்களுக்கு அதிக விலை வைத்து, வாங்க முடிந்த பணக்காரர்களுக்கு அவர்களால் எளிதில் விற்றுவிட முடியும். இதற்காகத் தனிச் சந்தையை உருவாக்கிவிடவும் முடியும். எல்லா இடங்களிலும் அது சாத்தியம் இல்லை.

**ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்?**

இரசாயன உரம், பூச்சிகொல்லிகள் போடாமல் பயிர்ச்செய்கையில் ஈடுபடுவது என்பது செலவு பிடிக்கும் வேலை. அதோடு விளைச்சலும் கொஞ்சம் குறைவாகவே வரும். "இயற்கை முறையில் பயிர் செய்யப்படுகிறது, இரசாயன உரம், பூச்சிகொல்லிகள் போடப்படுவதில்லை, எனவே இதில் நஞ்சு கலப்பதில்லை; ஆகையால் விலை அதிகம்" என்று நீங்கள் கூறி விற்றால் அதற்கேற்ப அதிக விலை கொடுக்க பணக்காரர்களால் முடியும். இதையே நாடு முழுவதும் உள்ள விவசாயிகள் மேற்கொள்ளத் தொடங்கினால், பெரும் நாசமே உண்டாகும்.

**எப்படிச் சொல்கிறீர்கள்?**

இயற்கை விவசாயத்தில் உற்பத்தியாகிற பொருட்களை எல்லோராலும் அதிக விலை கொடுத்து வாங்க முடியாது. விளைச்சல் குறைவாகிவிடும் போது, எல்லோருமே இயற்கை விவசாயம் மூலம்தான் செய்கிறார்கள் என்பதால் சந்தையில் விலையையும் அதிகப்படுத்தி விற்றுவிடமுடியாது. எனவே முதலில் விவசாயிகளுக்குத்தான்

> **இரசாயன உரம், பூச்சிகொல்லிகள் போடாமல் பயிர்ச்செய்கையில் ஈடுபடுவது என்பது செலவு பிடிக்கும் வேலை. அதோடு விளைச்சலும் கொஞ்சம் குறைவாகவே வரும்.**

இழப்பு ஏற்படும். சந்தைக்கு வரும் உணவு தானியங்களின் அளவும் குறையும். இது பிறகு விலையுயர்வுக்கும் பற்றாக்குறைக்கும் வழிவகுக்கும். விவசாயிகளும் பாதிக்கப்படுவார்கள், மக்களும் பாதிக்கப்படுவார்கள்.

**விவசாயிகள் இதனால் எப்படிப் பாதிப்புக்குள்ளாவார்கள்?**

## இரசாயன ...

எப்படியென்றால், இந்த விலையுயர்வு விவசாயிகளுக்குப் பயன் தராது. இதனால் சுற்றுச்சூழலுமே கெடும்! வழக்கமான உரம் - பூச்சி கொல்லி செய்கைமுறையைவிட புதிய முறையும் தன் பங்குக்கு சூழலைக் கெடுக்கும். பசுமை இல்ல வாயுக்களின் வெளிப்பாடு, நைட்ரஜன் வெளியேற்றம், நிலப் பயன்பாடு காரணமாக சூழல் மேலும் கெடும். விளைச்சல் குறைந்தால் ஏற்றுமதியும் குறையும்.

**இலங்கை நிலைமையை எப்படிப் பார்க்கிறீர்கள்?**

கொரோனா பெருந்தொற்றால் நாடு மிகவும் பாதிக்கப்பட்டிருந்த நிலையில் இயற்கை விவசாய முறைகளுக்கு மாறுமாறு அனைவரையும் கட்டாயப்படுத்தியது இலங்கையில் பேரழிவுக்கே இட்டுச் சென்றது. கோட்டாபய ராஜபக்ச சற்றே நிதானத்துடன் இந்த நடைமுறையைக் கடைப்பிடிக்க உத்தரவிட்டிருந்தால் மிகக் குறுகிய காலத்தில் இந்த அளவுக்குப் பேரழிவு ஏற்பட்டிருக்காது. முழுக்க மாறுவதற்குப் பதிலாக, பெருமளவு இரசாயன உரப் பயன்பாட்டையும் தொடர்ந்து அனுமதித்திருந்தால் விளைச்சல் சரிந்திருக்காது. செயற்கை இரசாயன உரங்களின் பயன்பாட்டைக் குறைத்தால் - அதை வேகமாகச் செய்தாலும், நிதானமாகச் செய்தாலும் - விளைச்சலும் ஏற்றுமதியும் நிச்சயம் குறையும்.

**சரி, மாறிவரும் சுற்றுச்சூழல் கேடுகளுக்கு மத்தியில் இவற்றை எப்படி அணுகுவது?**

நிதான அணுகுமுறைதான் நமக்குத் தேவை. கச்சா பெட்ரோலிய எண்ணெய், இயற்கை எரிவாயு ஆகியவற்றின் பயன்பாட்டை நம்மால் ஒரேயடியாகக் குறைக்கவோ கைவிடவோ முடியாது. அப்படிச் செய்வதற்கு நிறையக் காலம் பிடிக்கும். அவ்வாறு செய்து முடிக்கும்போது ஆற்றலுக்காக நாம் அதிகம் செலவிட வேண்டிய நிலையில்தான் இருப்போம். இப்போது உரங்களின் விலை அதிகரிப்புக்குக் காரணம் இயற்கை எரிவாயுவின் விலை அதிகரித்துவிட்டதுதான். மின்சாரம் தயாரிக்கவும் வாகனங்களை இயக்கவும் பெட்ரோல் - டீசல், இயற்கை எரிவாயுவைப் பயன்படுத்துவதைத் தவிர்க்க முடியும் என்ற நிலையை உருவாக்கினாலும்கூட சிமென்ட், செயற்கை உரம், உருக்கு ஆகியவற்றைத் தயாரிக்க இந்த ஆற்றல் வளங்கள் அவசியம்.

**ஆனால், இரசாயன உரங்கள் கொடியவை என்கிறார்களே?**

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஜெர்மானிய அறிவியலாளர்கள் பிரிட்ஸ் ஹேபர் - கார்ல் பாஷ் ஆகியோர் இணைந்து உருவாக்கிய அதிக அழுத்தம் மூலம் வேதி விளைவை ஏற்படுத்தி அம்மோனியா தயாரிக்கும் நடைமுறையால்தான் இன்று உலகின் சரிபாதி மக்கள் பட்டினி கிடக்காமல் வயிறார உணவு தானியங்களைச் சாப்பிட முடிகிறது. இப்போது அது தவறென்றால் இதற்கு மாற்றான தயாரிப்புச் செலவைக் குறைக்கும் புதிய தொழில்நுட்பத்தை உருவாக்கவேண்டும் அல்லது மண்ணில் நேரடியாக நைட்ரஜனை செறிவூட்ட மரபணு மாற்றப்பட்ட நுண்ணுயிரிகளைப் பயன்படுத்த வழிகாண வேண்டும்.

பருவநிலை மாற்றம் மற்றும் சூழல் கேடு நிச்சயமாகக் கவனிக்கப்பட வேண்டிய ஒரு பிரச்சினை. புவி வெப்பமடைவதைக் குறைப்பதும் அவசியம். ஆனால், இதோ உலகம் அழியும் காலம் வந்துவிட்டது என்று அனைவரையும் பீதியில் ஆழ்த்துவதும், இன்ன நாளுக்குள் பெட்ரோல்-டீசல் பயன்பாட்டைக் கைவிடவேண்டும் என்றும் கெடு நிர்ணயிப்பதும் வேண்டாத வேலை. இவற்றுக்குப் பின்னால் அறிவியலைவிட அரசியல்தான் அதிகம் இருக்கிறது.

இப்போதே நவீனத் தொழில்நுட்பங்களாலும் மாற்று உற்பத்தி முறைகளாலும் காற்றில் நஞ்சு கலப்பது குறைந்துகொண்டிருக்கிறது. தூய்மையான சூழலும் உருவாகிறது. இப்படிச் சொல்வதற்காக மானிடர்களைக் கொத்து கொத்தாக கொல்ல நினைக்கும் கொலைகாரன் என்று சூழலியலாளர்கள் என்னைச் சாடியுள்ளனர். இது அபத்தம்.

**சரி, சுற்றுச்சூழலை எப்படித்தான் ஆக்கபூர்வமாக அணுகுவது?**

பருவநிலை மாற்றம் அதிகமாகாமல் இருக்க, புவியின் வெப்பத்தைக் குறைக்க உடனே செயல்பட்டாகவேண்டும், காலம் வேகமாகக் கடந்துகொண்டிருக்கிறது என்று உலக நாடுகளுக்கு இடையிலான அரசுகளின் கூட்டறிக்கை எச்சரிக்கிறது. இந்த எச்சரிக்கைகளும் இலக்குகளும் தான்தோன்றித்தனமானவை, அறிவியல் அடிப்படையிலானவை அல்ல.

புவி வெப்பம் அதிகமானாலும்கூட மக்களை உயிரோடு வாழ வைப்பதற்கான தொழில்நுட்பம் கிடைத்துவிட்டால் கவலைப்பட ஏதும் இல்லை. புவி வெப்பம் குறைந்து, அதேவேளையில் மக்களிடையே பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் அதிகமாகி, நாட்டில் பசி - பட்டினி - பஞ்சம் தலைவிரித்தாடினால் என்ன பயன்? மக்களை வாழவைக்கும் தொழில்நுட்ப முன்னேற்றங்களைக் கண்டுபிடித்துவிட்டால் இந்த எச்சரிக்கைகள் தொடர்பாக அச்சப்படத் தேவையில்லை.

பனிப்போர் காலத்தில் உலக மக்கள் கரிப்புகை வெளிப்பாட்டைக் குறைக்கும் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தினர். இதனால் சூழல் தூய்மை அடைந்தது. இப்போது உக்ரைன் மீது ரஷ்யா நிகழ்த்திவரும் தாக்குதலால் கச்சா பெட்ரோலிய எண்ணெய், இயற்கை எரிவாயுத் தட்டுப்பாட்டை எதிர்நோக்கும் உலகம் இதற்கும் ஒரு மாற்று வழியைக் கண்டுபிடிக்கும்.

புவி அரசியலும் எரிசக்தித் தேவைகளும்தான் நாடுகளை சிந்திக்க வைக்கின்றன. பருவநிலை மாற்றம் என்ற தலைப்பு பேச்சுக் கச்சேரிக்குத்தான் அதிகம் பயன்படுகிறது. புதுப்பிக்கத்தக்க ஆற்றல்களை அதிகம் பயன்படுத்துவது, புதுப்பிக்க முடியாத புதைபடிவ எரிபொருளைத் திட்டமிட்டு சிக்கனமாகப் பயன்படுத்துவது, புவியரசியல் சார்ந்த கொள்கைகளில் கவனமாக இருப்பது ஆகியவற்றின் மூலம்தான் நாடுகள் பருவநிலை மாற்ற பாதிப்புகளைக் குறைக்க முடியும்.




# யாரோடு நோவோம்?

**கதிரேசன் காத்தவராயன்**

சுப்பிரமணியம் மாஸ்ரர் வீட்டுப் பக்கம் கனநாளாப் போகேல்லையெண்ட நினைப்புவர வெளிக்கிட்டன். பாதையிலை முருகேசர் வந்தார். அவரையும் இழுத்துக்கொண்டு போனன். மாஸ்ரர் உற்சாகமாய் "வாங்கோ வாங்கோ..." எண்டு வரவேற்று இருத்தினார். எங்கடை குரலைக் கேட்டுச் சுதனும் வெளியாலை வந்து இருந்துகொண்டான்.

"என்ன மாஸ்ரர்! நாட்டு நடப்புகளைப் பாக்க அழுகிறதோ சிரிக்கிறதோ எண்டல்லே கிடக்குது..." எண்டு தொடங்கினன். "ஓமோம் கதிரேசர்... கஸ்டப்பட்ட சனத்தை நினைக்க அழுகை வருகுது... பெரிய இடங்களை நினைக்கச் சிரிப்பு வருகுது..." எண்டு மாஸ்ரர் பெருமூச்சு விட்டார். "அதிலையும் மிச்சம் பிடிக்கிற சேமிச்சு வைக்கிற பழக்கமில்லாத அண்டாடங்காச்சியளின்ரை நிலைதான் வலு மோசம்" எண்டுது சுதன்.

"அதிலையும் சுதன் சிங்களச் சனம் வலு பாவம்... முன்னைப்பின்னை பழக்கமில்லாத வாழ்க்கையல்லே" இது எண்டார் முருகேசர். "நாங்கள் வருசக்கணக்கிலை எவ்வளவு நெருக்கடியளைத் தாங்கிப் பழகினனாங்களல்லே.." எண்டு நான் முடிக்கயில்லை மாஸ்ரர் ஒருசிரிப்புச் சரிச்சார்... "இஞ்சாரும் கதிரேசர் ஒண்டு சொல்லட்டே... நாங்கள்தானப்பா அப்பிடி வாழந்தமெண்டு சொல்லுகிறம்... அவங்களுக்கு அதுகளொண்டும் தெரியாதல்லே? இப்பவும் பாருங்கோவன் போராட்டக்காறர் எரிவாயுவிலைதானே தேத்தண்ணி போடுகிறாங்கள்..." எண்டார்.

"அதுமட்டுமில்லை மாஸ்ரர் போராடுகிறவைக்கு ஆமி பொலிஸ் எல்லாம் வலு சப்போட்டல்லே... அண்டைக்கதிலை வல்லியம்மான் சொன்ன மாதிரி உதே காலிமுகத்திடலிலைதான் உதே மாதிரிப் போராடின எங்கடையாக்களை உதைச்சு நொருக்கினவங்கள்... இப்ப?" எண்டார் முருகேசர். "வரலாறு எண்டிறது திரும்புமெண்டல்லே சொல்லுறவை" எண்டுது சுதன்.


"உண்மைதான் ஆனால் உந்தப் போராட்டத்துக்குள்ளை ஒருவிசயத்திலை அவங்கள் தெளிவாயிருக்கிறாங்கள். தமிழனை அழிச்சதாய் ஒண்டுரண்டு பேரைத்தவிர மற்றவையொருத்தரும் மூச்சுக்கூட விடயில்லை கவனிச்சனீங்களோ?" எண்டார் மாஸ்ரர். "அவங்கள் பின்னையென்ன எங்கடையாக்கள் மாதிரியே? போர் வெற்றியெண்ட ஒண்டைத்தவிர வேறையொண்டையும் கவனிக்கிறாங்களே?" எண்டார் முருகேசர்.

"எண்பத்தெட்டு எண்பத்தொன்பதிலை ரயறிலை வெந்து ஆத்திலை மிதந்த தலையில்லாத உடம்புகளை நினைச்சாலாவது தமிழனுக்கு எப்பிடி நடந்திருக்குமெண்டு விளங்காதோ?" எண்டான் சுதன். "அதடா தம்பி ஆட்சிவேறையல்லே... அதுகும் போக அந்தளவுக்கு யோசிக்கக்கூடின ஆக்களோ அவங்கள்? குடும்ப ஆட்சியெண்டு தூக்கியெறிஞ்சுபோட்டு அஞ்சாம் வருசமே நிங்களல்லோ எங்கடை மீட்பர் எண்டு கொண்டாடிக் கொண்டல்லே அழைச்சு வந் தவை..." எண்டன்.

"உண்மைதானப்பா கதிரேசு... இப்ப எங்களையும் வாருங்கோ சேந்து கலைப்பமெண்டல்லே கூப்பிடுகினம்" எண்டு சிரிச்சார் மாஸ்ரர். "சரியாய்ச் சொன்னியள் மாஸ்ரர் நாங்களே வோட்டுப் போட்டுக்கொண்டு வந்தனாங்கள்.. நாங்கள் உவர் வேண்டாமெண்டுதானே தெளிவாய் நிண்டனாங்கள்... நீங்கள் முட்டாள்த்தனமா கொண்டந்து இருத்திப்போட்டு இப்ப எங்களையுமல்லே கூப்பிடுகிறயள்? வெக்கமாயில்லையோ?" எண்டார் முருகேசர்.

"உந்தக் காணாமலாக்கப்பட்டதுகளின்ரை சொந்தங்கள் வருசக்கணக்காய் போராடுறது தெரியாத ஆக்களல்லே..." எண்டு சுதன் சொல்ல, "அந்தப் போராட்டத்தை எங்கடையாக்களுக்கே கனபேருக்குத் தெரியாது... அந்தப் போராட்டங்களை வெளிச்சம் போட்டுக்காட்டி வெளியாரக்குத் தெரியப்படுத்த ஆமான மனிசர் எங்களிட்டை இல்லை..." எண்டு கொதிச்சார் மாஸ்ரர்.

"உண்மைதான் மாஸ்ரர்... இப்ப நடக்கிற போராட்டத்துக்குச் சமாந்தரமாய் எங்கடையாக்கள் எங்கடை பிரச்சனையளை வெளியுலகத்துக்கு காட்டலாமல்லே? அரசியல்காறரை விட்டாலும் பொத்துவில்காறர், கம்பஸ்காறர் எங்கடை பேஸ்புக் போராளியளெண்டு ஒண்டாகி வெளிப்படுத்தலாமல்லே? பொலிஸ் ஆமி நெருக்கடியளும் இப்ப தளம்பியல்லே கிடக்குது" எண்டார் முருகேசர். "அதுக்கு தலைமைதாங்கிறதிலை வாற அடிபிடியை என்னண்டண்ணை தீர்க்கிறது?" எண்டுகொண்டு வந்திட்டன்.



**நாட்பட்ட மலச்சிக்கல்தான் முக்கியமான காரணம். மலச்சிக்கலின்போது மலத்தை வெளியேற்றுவதற்கு முக்கவேண்டி இருப்பதால், அப்போது ஆசனவாயில் அழுத்தம் அதிகரித்து மூலநோயை உண்டாக்கும்**

# மூலத்துக்கு முடிவு கட்டலாம்

கணேசன்

மூலநோய் வந்தவர்களில் அநேகம் பேர் வெளியில் சொல்லக் கூச்சப்பட்டு, தொடக்க கட்டத்தில் சிகிச்சை எடுக்கத் தவறுவதால், பின்னாளில் ஆசனவாயில் வலி, வீக்கம், குருதிப்போக்கு ஏற்பட்டு, அறுவைச் சிகிச்சை செய்ய வேண்டிய கட்டாயத்துக்குத் தள்ளப்படுகிறார்கள்.

40 வயதைக் கடந்த ஆண், பெண் இரு பாலருக்கும் ஆசனவாயில் மூன்று பிரச்சினைகள் புறப்படுகின்றன. ஒன்று, மூலம் (PILES). அடுத்தது, ஆசனவாய் வெடிப்பு (FISSURE). மூன்றாவது, பௌத்திரம் (FISTULA). இந்த மூன்றில் முக்கியமானது மூலநோய்.

### எது மூலநோய்?

சாதாரணமாக, உடலில் அசுத்தக் குருதியைக் கொண்டு செல்லும் குருதிக் குழாய்களில் (VEINS) குறிப்பிட்ட இடைவெளிகளில் வால்வுகள் உள்ளன. இவை குழாய்களில் குருதி தேவையில்லாமல் தேங்கி நிற்பதைத் தடுக்கின்றன. ஆனால், நம் உடலமைப்பின்படி ஆசனவாயிலிருந்து மலக் குடலுக்குச் செல்லும் குருதிக் குழாய்களில் மட்டும் இந்த வால்வுகள் இயற்கையிலேயே அமையவில்லை. இதனால் அவற்றில் சாதாரணமாகவே புவி ஈர்ப்பு விசை காரணமாக அழுத்தம் அதிகமாக இருக்கும். இந்த நிலையில் ஏதாவது ஒரு காரணத்தால் இந்த அழுத்தம் கொஞ்சமே அதிகமானால்கூட அவற்றில் குருதி தேங்கி, சிறிய பலூன் மாதிரி வீங்கிவிடும். இப்படியான குருதிக் குழாய் வீக்கத்தைத்தான் 'மூலநோய்' என்கிறோம்.

### என்ன காரணம்?

மூலநோய் ஏற்படுவதற்குப் பல காரணங்கள் உண்டு. அவற்றில், நாட்பட்ட மலச்சிக்கல்தான் முக்கியமான காரணம். மலச்சிக்கலின்போது மலத்தை வெளியேற்றுவதற்கு முக்கவேண்டி இருப்பதால், அப்போது ஆசனவாயில் அழுத்தம் அதிகரித்து மூலநோயை உண்டாக்கும். ஆண்களிடம் காணப்படும் சிறுநீர்த்தாரை அடைப்பு, புராஸ்டேட் வீக்கம் ஆகியவற்றாலும் மூலநோய் உண்டாகிறது. வயிற்றில் உருவாகும் கட்டிகள், மலக்குடல் புற்றுநோய் போன்றவையும் மூலநோயை ஏற்படுத்தும்.

கர்ப்பிணியின் வயிற்றில் குழந்தை வளர வளர அடிவயிற்றில் இருக்கும் உறுப்புகள் கீழ் நோக்கித் தள்ளப்படுவதால், அவை ஆசனவாய் குருதிக் குழாய்களை அழுத்தி வீக்கத்தை ஏற்படுத்தும். இதன் காரணமாக சில பெண்களுக்கு கர்ப்பகாலத்தில் மட்டும் மூலநோய் வருகிறது. சிலருக்குப் பரம்பரை காரணமாக இந்த குருதிக் குழாய்கள் துணி தைக்கும் பருத்தி நூல்போல மெல்லியதாக இருக்கும். இதனாலும் மூலநோய் வரலாம்.

உடல் பருமனாக இருப்பவர்கள், சுமை தூக்குபவர்கள், காலில் சிரை வீக்கம் (VARICOSE VEINS) உள்ளவர்கள், ஒட்டுநர் போன்று உட்கார்ந்தே வேலை செய்பவர்கள், நடத்துநர் போன்று அதிக நேரம் நின்றுகொண்டே இருப்பவர்கள், மூலத்தை எதிர்கொள்வோர் பட்டியலில் முன்னணியில் இருக்கிறார்கள்.

### இரண்டு வகைகள்

மூலநோயில் வெளி மூலம், உள் மூலம் என இரண்டு வகை உண்டு. ஆசனவாயின் உள்ளே சளிப்படலத்தில் உருண்டையாக புதைந்திருப்பது 'உள் மூலம்'. வெளிப்புறத்தில் தோன்றுவது 'வெளி மூலம்'. இரண்டாவதாகச் சொன்னதைக் கையால் தொட்டுப் பார்த்தே தெரிந்துகொள்ள முடியும். ஆனால் உள் மூலம் அப்படியில்லை. இது ஏற்பட்டால் என்ன நடக்கும்?

மலம் கழிக்கும்போது லேசாக குருதி சொட்டுவது அல்லது மலத்தோடு வரிவரியாக குருதி வெளிப்படுவது இதன் தொடக்க அறிகுறி. சில வாரங்களில் அல்லது மாதங்களில், அந்த நபருக்கு மலம் போன பிறகு, ஆசனவாயில் லேசான வீக்கம் தெரியும். ஆசனவாயில் வீக்கமுற்ற குருதிக் குழாய்கள் அங்குள்ள சதையோடு வெளியே தள்ளப்படுவதால் இந்த வீக்கம் தோன்றுகிறது. மலம் போன பிறகு, இதை உள்ளே தள்ளிவிட்டால், மறைந்துவிடும். சிலருக்கு இந்த வீக்கம் பெரிதாகி நிலைத்துவிடும். அப்போது அந்த வீக்கத்தில் புண் உண்டாகி, அரிப்பும், வலியும் தினமும் தொல்லை தரும். இதனால் மலம் போகக் கடுமையாகக் கஷ்டப்படும். முள்ளின் மீது உட்கார்ந்திருப்பதைப் போன்ற அவதி என்று சொல்வது இதற்கு ஏகப்பொருத்தம்.

சிலருக்கு ஆசனவாயில் கண்ணாடியை வைத்துக் கீறியது போல் வெடிப்புகள் (ANAL FISSURE) இருக்கும். அல்லது அந்த இடம் சுண்டுவிரல்கூட நுழைய முடியாதபடி சுருங்கி இருக்கும். அப்போதும் இந்த மாதிரி ஒரு கொடுமையான வலி மணிக்கணக்கில் படுத்தி எடுக்கும். இவர்கள் மலம் கழிப்பதற்கே பயப்படுவார்கள். இதனால் மலச்சிக்கல் ஏற்பட்டு நிலைமை இன்னும் மோசமாகிவிடும்.

### என்ன செய்ய வேண்டும்?

சாதாரணமாக, 40 வயதைக் கடந்தவர்களுக்கு இந்த நோய் வருவதற்கு அதிக வாய்ப்பு இருப்ப தால், அந்த வயதுக்காரர்கள் ஆண்டுக்கு ஒருமுறை குடும்ப மருத்துவரிடம் பரிசோதித்துக் கொள்ள வேண்டும். ஆனால் நடைமுறையில் மூலநோய் இருந்தால்கூட தொடக்கத்தில் வலியோ, சிரமமோ இருக்காது என்பதால் பலரும் அதை அலட்சியப்படுத்தி விடுகின்ற னர்.

எந்த ஒரு நோய்க்கும் பலசரக்குப் பட்டியல்போல பல பரிசோதனைகள் செய்ய வேண்டும் என்று சொல்லப் படும் இந்தக் காலத்திலும், மூலத்துக்கு மட்டும் எந்தப் பரி சோதனையும் தேவையில்லை! நோயாளியின் ஆசனவாயில் மருத்துவர் விரலால் பரிசோதித்துப் பார்த்துத்தான் மூலத்தைக் கண்டுபிடிக்க முடியும். மூலம் இருக்கும் இடம், அளவு, நிலைமை இந்த மூன் றும் துல்லியமாகத் தெரிந்தால்தான் இதற்குச் சரியான சிகிச்சையைக் கொடுக்க முடியும். அத ற்கு 'பிராக்டாஸ்கோப்' என்ற கருவியை ஆசன வாய்க்குள் நுழைத்து மூலத்தை மருத்துவர் நேரில் பார்க்கவேண்டும். அதற்குப் பிறகுதான் சிகிச்சை!

### என்ன சிகிச்சை?

உள் மூலத்தை நான்கு நிலைகளாகப் பிரித்துள்ளது மருத்துவம். மலம் கழிக்கும்போது குருதி வருவது முதல்நிலை. ஆசனவாயில் சிறிய வீக்கம் தோன்றுவதும் உள்ளே மறைந்துகொள்வதும் இரண்டாம் நிலை. வீக்கம் நிரந்தரமாகிவிடுவது மூன்றாம் நிலை. வீக்கத்தில் புண், சீழ் ஏற்படுவது நான்காம் நிலை.

மூலத்தின் தொடக்கக் கட்டத்திலேயே சிகிச்சைக்கு வந்துவிட்டால் மருந்து, மாத்திரை, களிம்பு மூலமே சரிசெய்துவிடலாம். முக்கியமாக, மலச்சிக்கல் வராமல் பார்த்துக்கொண்டால், மூலநோயும் விடை பெற்றுவிடும். அடுத்தகட்ட பாதிப்பு இருந்தால் மட்டுமே பாண்டிங் (BANDING), ஸ்டேப்ளர், அறுவை சிகிச்சை என மற்ற சிகிச்சைகளை யோசிக்க வேண்டும்.

இந்த இடத்தில் நோயாளிகள் பலரும் செய்யும் தவறு ஒன்றை சுட்டிக்காட்ட வேண்டும். மலத்தில் குருதி வந்தால், உடனே 'மூலம்' என்று சுயமாக முடிவு கட்டாதீர்கள். இதற்குப் பெருங்குடலில் ஏற்படும் புண், புற்றுநோய் என ஆபத்தான காரணங்களும் இருக்கலாம்.

சமீபத்தில் என்னிடம் ஒரு நோயாளி வந்திருந்தார். 'எனக்கு மூலம் முத்திப்போச்சு! உள்ளூர் வைத்தியரிடம் மூணு மாசமா மருந்து சாப்பிட்டும் குருதி நிக்கலே!' என்றார். அந்த 'மருத்துவர்' அவரைப் பரிசோதிக்காமல், மலத்தில் குருதி போகும் அறிகுறியை மட்டும் வைத்துக்கொண்டு 'மூலம்' என்று முடிவுசெய்து மருந்து கொடுத்திருக்கிறார். நான் பரிசோதித்தபோது, அவருக்கு மலக்குடலில் புற்றுநோய் இருப்பது தெரியவந்தது.

நதிமூலத்தையும் ரிஷிமூலத்தையும்தான் பார்க்கக் கூடாது. ஆனால், ஆசனவாய் மூலத்தை நேரில் பார்த்துதான் சிகிச்சை கொடுக்க வேண்டும்!

### சிகிச்சைகள் என்னென்ன?

சுருங்க வைத்தல்: குருதி உறைய வைக்கும்

**சத்தியநாதன்**



# யார் அந்த ஞானாக்கா?

அரசுக்கு எதிரான போராட்டத்தில் அண்மையில் கலந்துகொண்டிருந்த சிறீலங்கா முஸ்லிம் காங்கிரசின் தலைவர் ரவூப் ஹக்கீம் கருத்தொன்றை வெளியிட்டார். ஞானாக்கா என்கிற அனுராதபுரத்துச் சூனியக் காரிக்குப் படைப் பாதுகாப்பு வழங்கும் அளவுக்குக் கோட்டாபய அரசு கேவலப்பட்டு விட்டது - என்றார்.

ஹக்கீம் குறிப்பிடுகின்ற சூனியக்காரி யார் என்று தேடிப் பார்த்தால் அனுராதபுர மருத்துவமனையில் சிற்றூழியராகக் கடமையாற்றிய அனுராதபுரத்தைச் சேர்ந்த ஞானாக்கா என்கிற பெண் குறித்துத் தெரியவந்தது.

கடந்த 8 ஆண்டுகளாகச் சிற்றூழியராகப் பார்த்துவந்த வேலையைக் கைவிட்டுக் காளிகோவில் ஒன்றை நடத்தி வருகிறார் அவர். குறி சொல்வது, சிவப்பு நூல் கட்டுவது, பரிகாரங்கள் செய்வது உள்ளிட்ட மாந்திரீக விடயங்கள் பலதையும் செய்கின்றார்.



இவரை 2015 ஆம் ஆண்டு அரச தலைவர் வேட்பாளராகக் களமிறங்கிய மைத்திரிபால சிறிசேனவே முதலில் அணுகினார். அப்போது அவருக்கு ஞானாக்கா தெரிவித்த விடயம் உங்களுக்கு ராஜயோகம் இருக்கிறது நம்பி இறங்கலாம் என்பதுதான். மைத்திரி அரச தலைவராக முடியும் என்கிற நம்பிக்கையை வழங்கியவர் அவர்தான். அதன்படியே மைத்திரிபால அரச தலைவரானதும் ஞானாக்காவின் புகழ் சிங்கள மக்கள் மத்தியில் ஓங்கிவிட்டது.

அதன் பின்னர் படைத்தளபதி சவேந்திரசில்வா, அரச தலைவர் கோட்டாபயவின் பாரியார், பவித்ரா வன்னியாராய்ச்சி, விமல் வீரவன்ச, தலதா மாளிகையின் தியவதன நிலமே (பொறுப்பாளர்) பிரதீப் நிலங்க தாயாள பண்டார, உதய கம்மன்பில, ரமேஷ் பத்திரண, லொகான் ரத்வத்த, முப்படைகளின் உயர் அதிகாரிகள், பிரபல வர்த்தகர்கள் எனப் பலரும் ஞானாக்காவை நாடிச்சென்றனர். இதனால் அவரைச் சந்திப்பதற்கான முற்கூடியே பதிவு செய்யவேண்டியளவுக்கு அவர் பிரபலமடைந்துவிட்டார் என்கிறார்கள்.

ஞானாக்காவின் கணவர் 1988-1989 காலப்பகுதியில் ஜே.வி.பியினரால் சுட்டுக்கொல்லப்பட்டார் என்றும் அதன் பின்னரே ஞானாக்கா காளி அம்மாவின் கடாட்சத்தைப் பெற்று படிப்படியாக முன்னேறித் தற்போது கோடீஸ்வரியாகியிருக்கிறார். அதைவிட நிராகரிக்க முடியாத ஒருவராகவும் காணப்படுகிறார். தலதா மாளிகையின் தியவதன நிலமே கூட அருள்வேண்டிக் காளி அம்மாவிடம் செல்கின்ற நிலை காணப்படுவது சிங்களமக்கள் மத்தியில் ஞானாக்காவின் முக்கியத்துவத்தை உணர்த்துவதாக உள்ளது.



**சிவப்பு நூல் குழுவினர்**

ஞானாக்காவின் அடிவருடிகளாகச் சென்று சிவப்பு நூல் கட்டிக்கொள்ளும் அரசியல்வாதிகள், வியாபாரிகள், முப்படை முக்கியஸ்தர்கள் ஆகியோர் ஞானாக்காவின் ஆலோசனைகைளக் கேட்டுத் தமது எதிர்காலத்தைத் தீர்மானித்துக் கொள்ளும் அளவுக்கு ஞானாக்கா இருப்பது என்பதுநம்ப முடியாத ஒன்றாகவே காணப்படுகிறது. ஞானாக்கா அனுராதபுர நகரில் உள்ள கட்டடங்கள் பலவற்றுக்குச் சொந்தக்காரி மட்டுமல்ல பெரிய சொகுசு விடுதி ஒன்றையும் கட்டியிருக்கிறார். அதைக் கட்டுவதற்கு 40 மேற்பட்ட படைச் சிப்பாய்கள் பயன்படுத்தப்பட்டனர் என்றும் கூறப்படுகிறது. நாட்டின் அரசியல்வாதிகள் தொடக்கம் பெரு முதலீட்டாளர்கள் வரை தமது எதிர்காலத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக நாடாளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் குறிப்பிடுவதுபோல ஒரு சூனியக்காரியிடம் சரணாகதி அடைந்திருப்பது அதிர்ச்சி தரும் யதார்த்தமாக இருக்கிறது.

இலங்கையையும் இனி ஞானாக்கா காப்பாற்றினால் நன்றாக இருக்கும்...!.

---

## மூலத்துக்கு...

மருந்தை மூலநோய் உள்ள இடத்தில் செலுத்தி, வீங்கியுள்ள குருதிக்குழாயைச் சுருங்க வைப்பது இதன் செயல்முறை. முதல்நிலை மூலநோயாளிக்கு இது உதவுகிறது.

வளையம் இடுதல்: இந்த முறையில், மூலநோய் உள்ள பகுதியைச் சுற்றி ஓர் இறுக்கமான ரப்பர் வளையத்தைப் பொருத்துகிறார்கள். இதனால் குருதிக் குழாய்க்கு குருதி வருவது தடைபட்டு, வீக்கம் சுருங்கிவிடுகிறது. இரண்டாம்நிலை மூலநோய்க்கான சிகிச்சை இது.

உறைய வைத்தல்: திரவ நைட்ரஜனை மூலநோயின் மேல் வைத்தால் அதில் உள்ள குருதிக் குழாய்கள் உறைந்து சுருங்கிவிடும். இதுவும் இரண்டாம் நிலை மூலத்துக்கு உதவுகிறது.

அறுவை சிகிச்சை: நாட்பட்ட மூலநோயில் வீக்கம் மிக அதிகமாக இருந்தால், அதை அறுவை சிகிச்சை செய்து அகற்றி விடுகிறார்கள். வெளி மூலம் மற்றும் 3, 4ஆம் நிலை உள் மூலத்துக்கு இது நல்ல பலன் தருகிறது.

கதிர்வீச்சு சிகிச்சை: ஐ.ஆர்.சி. (IRC - Infra Red Coagulation) என்ற கருவி மூலம் இது செய்யப்படுகிறது. இக்கருவி அகச்சிவப்புக் கதிர்களை உற்பத்தி செய்து, மூலநோய் உள்ள பகுதிக்கு அனுப்புகிறது. அப்போது அக்கதிர்கள் மூலத்துக்குச் செல்லும் குருதி ஓட்டத்தை நிறுத்தி விடுவதால் வீக்கம் சுருங்கிவிடும். முதல்நிலை மற்றும் இரண்டாம்நிலை மூலநோய் உள்ளவர் களுக்கு, இதயநோய் உள்ளவர்களுக்கு, கர்ப்பிணிகளுக்கு, மயக்க மருந்து கொடுக்க முடியாத நிலையில் உள்ளவர்களுக்கு இது உதவுகிறது.

லேசர் சிகிச்சை: லேசர் கதிர்களைச் செலுத்தி மூலநோயில் உள்ள திசுக்களை அழிப்பது இந்தச் சிகிச்சை செயல்முறை. ஆனால் இதற்கு ஆகும் பணச்செலவு அதிகம்.

ஸ்டேப்ளர் சிகிச்சை: ஸ்டேப்ளர் கருவி கொண்டு மூலநோயின் மேல்பகுதியை இறுக்கிவிட்டு, வீக்கமுள்ள பகுதியையும் அதை ஒட்டியுள்ள தசைப் பகுதியையும் வெட்டி எடுத்து தையல் போட்டு விடுகிறார்கள். மூலநோய் முற்றியநிலையில் உள்ளவர்களுக்கும், முதியோருக்கும் இது நல்ல பயனைத் தருகிறது. இதற்கான செலவும் அதிகம்தான்

ஆசனவாய் வெடிப்புக்கு சிகிச்சை: நோய் ஆரம் பக் கட்டத்தில் இருந்தால், ஆசனவாயை விரித்துவிட்டாலே போதும். பாதிப்பு அதிகம் என்றால், அறுவை சிகிச்சைதான் தீர்வு.

# கடற்படையினரின் தற்கொலைத் தாக்குதல்...?

**கமலநாதன்**

மாத்தறை கம்புறுகமவைச் சேர்ந்த வீரசிங்க என்பவர் 1983ஆம் ஆண்டு கடற்படையில் இணைந்தார். காரைநகர் கடற்படை முகாம் இரண்டு தடவைகள் தாக்குதலுக்கு உள்ளானபோது அங்கு கடமையாற்றியவர். முக்கிய தாக்குதல் ஒன்றின்போது தனித்து நின்று தாக்குதல் செய்தமையால் வீர பிரதாப விருது பெற்றவர். இலங்கைக் கடற்படையில் வீரசிங்கவுக்கு மட்டுமே இந்த விருது வழங்கப்பட்டது. இவர் தனது அனுபவங்களை வெனச யூரியூப் தளத்தில் பின்வருமாறு பகிர்ந்துகொண்டிருக்கிறார்.

மாத்தறை கம்புறுகமவைச் சேரந்த நான் 1983 ஆம் ஆண்டு இலங்கைக் கடற்படையில் சேர்ந்தேன். திருகோணமலை திஸ்ஸ கடற்படை முகாமிலும் பின்னர் கற்பிட்டிக் கடற்படை முகாமிலும் பயிற்சி பெற்றேன். சீமென் (கப்பலோட்டி) பதவியிலிருந்த போது காரைநகர் கடற்படை முகாமுக்கு மாற்றப்பட்டேன். எனக்குப் புலிகளுடன் நேரடித் தாக்குதல் அனுபவம் காரைநகரப் பகுதியிலேயே கிடைத்தது.

காரைநகர் கடற்படை முகாமுக்கு அருகில் நூறு மீற்றர் தூரத்தில் மக்கள் குடியிருப்பு இருந்தது. அந்த மக்களை மிகவும் இரகசியமாக அங்கிருந்து இரவிரவாக வெளியேற்றியிருந்தார்கள். அது கடற்படையினருக்குத் தெரிந்திருக்கவில்லை. இதன் பின்னர் காரைநகர் கடற்படை முகாமைச் சுற்றித் தாக்குதலைத் தொடங்கினார்கள். காரைநகர் முகாமில் கன்போட்டில் பொருத்தப்படுகின்ற 37 மில்லி மீற்றர் ரகத் துப்பாக்கியை கடற்படை முகாமைச் சுற்றிப் பொருத்தியிருந்தோம். அதை வைத்தே எதிர்த்தாக்குதல் செய்யவேண்டியிருந்தது. இந்தத் தாக்குதல் இரவு தொடங்கப்பட்டு விடியும் வரை நடந்தது. ஒரு சிப்பாய் சாவடைந்தார். 8 பேர் காயமடைந்தனர். மறுநாள் காலையில் புலிகளில் பலர் முகாமைச் சுற்றி இறந்து கிடந்ததைக் கண்டேன்.

காரைநகர் முகாம் 1991இல் தாக்கப்பட்ட பல சந்தர்ப்பங்கள் இரவு 9 மணிக்கே நிகழ்ந்தன. அந்த நேரத்தில் சிங்களத் தொலைக்காட்சி அலைவரிசையில் நந்தன விந்தன என்ற நிகழ்ச்சி ஒளிபரப்பப்படும். அப்போது தொலைக்காட்சிப் பெட்டி வைக்கப்பட்டிருக்கும் அறையில் அதிக சிப்பாய்கள் கூடியிருப்பது வழக்கம். இவ்வாறான தகவல்களை அங்கு பணிபுரிந்த தமிழ்க் கடற்படையினர் புலிகளுக்கு வழங்கியிருக்க வாய்ப்புண்டு. அந்த நேரத்தைப் பார்த்துப் புலிகள் மோட்டார் தாக்குதல் நடத்துவர்.

### காரைநகர் முகாமைப் புலிகள் ஏன் அழிக்க நினைத்தார்கள்...?


யாழ். குடாநாட்டில் படை முகாம்கள் பலவும் புலிகளால் முற்றுகைக்குட்பட்டிருந்ததால் அந்த முகாம்களுக்கான உணவு, ஆயதத் தளவாடங்கள், துருப்புகளை ஏற்றி இறக்குவது என எல்லாவற்றுக்குமான முக்கிய மையமாகக் காரைநகர் கடற்படை முகாம் இயங்கி வந்தது. இந்த முகாமை அழிப்பதன் மூலம் யாழ்.குடாநாட்டைத் தம் வசப்படுத்திவிட முடியும் என்று புலிகள் நம்பினர். கடற்படை முகாமுக்கு அருகில் சீநோர் பகுதி புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்தது.

புலிகள் 1991இல் திடீரெனத் தாக்குதலை தொடங்கியதால் கப்பல் கட்டும் துறையின் கொங்கிறீட் பகுதிகளுக்குள் புகுந்து தப்பினோம். நீண்ட நேரம் பாலத்தின் கீழ் இருந்தோம். 14 நாள்கள் வரை தொடர்ந்த இந்தப் போரின்போது கடலையை மட்டும் அவித்துச் சாப்பிட்டோம். பின்னர் எரிவாயு அடுப்பு இருந்த இடத்தில் எறிகணை விழுந்துவிட்டது. இதனால் சமைக்க முடியவில்லை.

### 1991 ஆணையிறவுத் தாக்குதல்

ஆணையிறவு முகாமில் ஆயிரம் வரையிலான சிப்பாய்கள் புலிகளால் சுற்றிவளைக்கப்பட்டிருந்தனர். அவர்களை மீட்கவும் முகாமைப் பலப்படுத்தவும் மேலதிக துருப்புகளைக் காரைநகர்க் கடற்படை முகாமிலிருந்து ஏற்றிச்சென்றோம். அதிகாலை 4 மணிக்கு ஆணையிறவுக்கு அருகில் கடற்கரையில் தரையிறக்க முயன்றபோது புலிகள் கடுமையாகத் தாக்கினார்கள். அதனால் உடனடியாக அங்கிருந்து பின்வாங்கவேண்டியிருந்தது. பல தடவைகள் முயற்சிகள் எடுத்தபோதும் துருப்புகளை இறக்க முடியவில்லை. பின்னர் ஆணையிறவு முகாமுக்கு வடக்காக 3 கிலோமீற்றர் தூரத்தில் தரையிறக்கினோம். புல்டோசர் போன்றவற்றை முதலில் இறக்கி உடனடியாகப் பங்கர்களை அமைத்தார்கள். புலிகள் 50 கலிபர், 37 மில்லி மீற்றர் ரக ஆயுதங்களைப் பயன்படுத்தித் தாக்கினர். புலிகள் தொடர்ந்து ஆணையிறவுப் பகுதியில் தாக்குதலை நடத்திக்கொண்டிருந்தார்கள். புதிதாகத் துருப்புகளை இறக்கிக் காயப்பட்டவர்களைக் கடற்படைக் கப்பல்களில் ஏற்றினோம்.

**அதிகாலை 4 மணிக்கு ஆணையிறவுக்கு அருகில் கடற்கரையில் தரையிறக்க முயன்றபோது புலிகள் கடுமையாகத் தாக்கினார்கள். அதனால் உடனடியாக அங்கிருந்து பின்வாங்கவேண்டியிருந்தது. பல தடவைகள் முயற்சிகள் எடுத்தபோதும் துருப்புகளை இறக்க முடியவில்லை**






### நயினாதீவுக் கடற்சண்டை

காரைநகர் கடற்படை முகாமிலிருந்து நயினாதீவு கடற்படை முகாம் பகுதிக்குத் தினமும் ரோந்து போய் வருவது வழக்கம். இவ்வாறு சென்ற கடற்படைப் படகு ஒன்றுக்குப் புலிகள் கடற்கண்ணித் தாக்குதல் நடத்தியதில் இரண்டு சிப்பாய்கள் மட்டும் தப்ப 8 பேர் கொல்லப்பட்டனர். இந்தக் கண்ணிவெடிகளைப் புலிகளே தயாரித்துக் கரையில் எங்காவது மறைந்திருந்து வயர் மூலம் வெடிக்க வைத்தார்கள். இதனால் நயினாதீவுக்கு ரோந்து செல்லும்போது இரண்டு படகுகளில் செல்வதுண்டு. அவற்றில் கடலுக்குள் போடப்பட்டிருக்கும் வயர்களைக் கண்டுபிடிப்பதற்காகக் கம்பியால் செய்யப்பட்ட பகுதியைப் படகுகளின் முற்பகுதியில் நீருக்கடியில் பொருத்தியிருந்தோம்.

ஒருநாள் மாலை 6 மணியளவில் இரண்டு படகுகளில் காரைநகர் முகாமிலிருந்து நயினாதீவுக்குப் புறப்பட்டோம். நான் சென்ற படகில் 50 குதிரை வலுவுள்ள இரண்டு இயந்திரங்கள் பொருத்தப்பட்டிருந்தன. இருளான நேரத்தில் புலிகள் கண்டுவிடாதபடி பயணித்தபோதிலும் நயினாதீவுக் கடற்படை முகாமுக்கு அருகில் சென்றதும் கடற்படையினர் போக்கஸ் லைற் போட்டு எமது படகு என்பதை உறுதிப்படுத்தினர். நாங்கள் கொண்டு சென்ற பொருள்களை இறக்கிவிட்டுத் திரும்பும்போது அந்த லைற்றை அணைப்பார்கள். இது புலிகளுக்கு நன்கு தெரியும்.

இவ்வாறு ரோந்து செல்லும்போது ஒவ்வொருவரும் கைக்குண்டுகள் 10 வரை எடுத்துச் செல்வது வழக்கம். ஏதாவது சந்தேகப்படும் படியாகக் கடலில் தெரிந்தால் புலிகளின் நீரடி நீச்சல் பிரிவினராக இருக்கலாம் என்ற சந்தேகத்தில் அந்த இலக்கை நோக்கிக் கைக்குண்டுகளைக் கழற்றி வீசுவது வழக்கம்.

அன்று நாம் பயணத்தைத் தொடங்கியபோது புலிகளின் உரையாடல்களை ஒட்டுக்கேட்டக் கடற்படைச் சிப்பாய் தெரிவுதீன் என்பவர் இன்று ஏதோ தாக்குதலுக்குப் புலிகள் திட்டமிடுவதாகத் தெரிகிறது என்றார்.

நாம் இருட்டில் பயணித்தபோது புங்குடுதீவுப் பக்கமிருந்து சில வெளிச்சங்கள் தெரிந்தன. அதேவேளை புலிகள் நடமாடும் சில பகுதிகளிலும் அவ்வாறான வெளிச்சங்கள் தெரிந்தன. நாம் நயினாதீவுக்குச் சென்று திரும்பும்போது போக்கஸ் லைற்றுகள் அணைக்கப்படுவதை அவதானித்துப் புலிகள் படகுகளின்

# சிறைக்குள்...

53



தர்மராசா

## போகாம்பரைச் சிறையில் பேணப்பட்டுவரும் மரபுகள்

பூசாச் சிறைக்குச் சென்றபின்பு மென்சன் பல தடவைகள் எனக்கு முடி வெட்டிவிட்டார். பொதுவாகச் சிறைகளில் முகம் பார்க்கும் கண்ணாடியை வைத்திருக்கத் தடை என்பதால் சின்னக் கண்ணாடியை மறைத்து வைத்துப் பார்க்கலாம். முடி வெட்டுபவர் தனது விருப்பத்துக்கு வெட்டிவிட்ட பின்னர் போய்ச் சுவரில் பொருத்தப்பட்டுள்ள பொதுக் கண்ணாடியில் தலையைப் பார்த்தால் பேசுவதற்கு எதுவும் இருக்காது. பூசாவில் கடைசி அறை சிகை அலங்கரிப்பு நிலையமாகப் பாவிக்கப்பட்டது.

போகம்பரையில் சில பாரம்பரிய விடயங்கள் பேணப்பட்டன. அங்கு பாபர் பாட்டியிலுள்ளவர்கள் ஒரு மரப்பெட்டிக்குள் தலைமயிர் வெட்டும், சவரம் செய்யும் எல்லாக் கருவிகளையும் கொண்டு வந்து வாட்டுக்கு முன் வாசலில் ஒரு சிறிய இருக்கையில் (ஸ்ரூல் - நான்கு கால்களுள்ள பலகையிலான இருக்கை) இருந்து வெட்டுவார்கள். அவர்களுக்கு பீடி, காசு, சவர்க்காரம் என ஏதாவது கையூட்டுக் கொடுத்தால் மாத்திரம் வெட்டு அம்சமாக இருக்கும். இல்லாவிட்டால் சும்மா கொய்து வெட்டுவார்கள். திட்டுத்திட்டாக மயிர்க் கட்டைகள் இருக்கும். சிறைச்சாலைக்குள் மொட்டை அடிப்பதற்குத் தடை. தலையில் புண், அல்லது தோல் வியாதி இருந்தால் சிறை நிர்வாகத்தின் அனுமதி பெற்றுத்தான் மொட்டை அடிக்க வேண்டும். மொட்டை அடித்தால் ஆள் மாறாட்டம் செய்வது இலகுவானது. அதைத் தவிர்க்கவே இந்த நடைமுறைகள் உண்டு.

கைதிகளுக்கிடையில் வாய்த்தர்க்கம், கைகலப்பு என எந்த நேரத்திலும் ஏற்பட வாய்ப்புண்டு. ஒரு பீடி, ஒரு காதல் கடிதம், கிரிக்கெட், கரம்போரட், குளித்தல், தண்ணி எடுத்தல் எனப் பிரச்சினை எங்கிருந்து தொடங்கும் என்பதைத் திடமாகச் சொல்லிவிட முடியாது. ஒரு நாள் பூசாச் சிறையில் ஏதோ ஒரு பிரச்சினையில் கைதிகள் இருவர் அடிபட்டனர். அவர்களின் அறைகளில் இருந்த ஏனைய கைதிகளும் இரு அணிகளாக அடிபடும் அளவுக்கு நிலைமை மோசமாக இருந்தது. சிறைச்சாலையில் சில கைதிகள் விறாந்தையில் அல்லது ஓரத்தில் தொடர்ந்து நடந்து கொண்டிருப்பார்கள். அறைகள் திறக்கப்பட்டு வெளியே நிற்கும்போது பெருமளவு நேரத்தை நடப்பதிலேயே செலவிடுவர். சிலர் தனியே நடப்பர். சிலர் சோடியாகக் கதைத்துக்கொண்டு நடப்பர். 4 அல்லது 5 பேர் வரிசையாகச் சேர்ந்து நடப்பார்கள். வானத்திலிருந்து பார்த்தால் சிறைச்சாலைக்குள் பல மனிதர்கள் அங்குமிங்கும் ஊர்ந்து திரிவதுபோல இருக்கும். இவ்வாறு நடப்பவர்களும் பிளாஸ்ரிக் பேனை மற்றும் கைவினைப் பொருள்களைச் செய்பவர்களும் 5 வருடங்களுக்குக் குறைவான காலத்துக்குள் சிறையை விட்டுப் போனதில்லை என்று ஒரு நண்பர் சொன்னார். பின்னர் அதுபற்றித் தேடிப்பார்த்தபோது அது சரியாகத்தான் இருந்தது. அது ஒரு விஞ்ஞானபூர்வமான விளக்கமாக இல்லாவிடினும் எழுமாற்றாகச் சரியாக இருந்தது. அவ்வாறான கைதிகளில் பலர் துப்பாக்கிகள், கைக்குண்டு, கிளைமோர், தற்கொலைத் தாக்குதலுக்கான உடைகள் எனச் சாட்சியமுள்ள ஆதாரங்களுடன் பிடிபட்டதால் அவர்களின் வழக்குகள் நீண்ட தவணைகள் போடப்பட்டு வேண்டுமென்றே இழுத்தடிக்கப்பட்டு வந்தன. இவர்களில் பலர் புலிகளுடன் நேரடியாகத் தொடர்புபட்டவர்கள் அல்லர். லொறிச் சாரதிகள், ஆயுதங்களை மாற்றி வைக்க உதவியவர்கள், தாக்குதலுக்கு வந்த நபர்களைத் தமது வீடுகளில் தங்க வைத்திருந்தவர்கள் எனப் புலிகளுக்கு உதவியவர்களாக இருந்தார்கள்.

தொடர்ந்து நீண்ட வழக்குத் தவணைபோடப்படுவதால் ஏற்படுகின்ற மனப்பாதிப்பு, சும்மா இருப்பதைவிட எதையாவது செய்வோம் என நினைப்பதால் நீண்ட காலக் கைதிகள் அப்படியாகிவிடுகின்றனர்.

(தொடரும்)

---

## கடற்படையினரின் ...

வந்து தாக்கினர். எனக்குப் பின்னால் வந்த படகு தாக்கப்பட்டுத் தீப்பிடித்து எரிந்தது. அதில் பயணித்த சிப்பாய்கள் இருவரும் கத்தினார்கள். படகு தீப்பந்தமாகத் தெரிந்தது. நாம் அங்கு செல்ல முடியாதவாறு எமது படகை நோக்கியும் 50 கலிபர் துப்பாக்கியால் தாக்கினார்கள். நானும் எனது ஓட்டியும் தலையை உயர்த்தாது குனிந்தவாறு பயணித்தோம். எனினும் புலிகளின் தாக்குதலால் ஓட்டி படகிலிருந்து தூக்கி வீசப்பட்டார். எனது தொடைப் பகுதியில் துப்பாக்கி ரவை தாக்கியது. கால் முறிந்து தொங்கியது. நான் மல்லாக்காக விழுந்து விட்டேன். முறிந்த கால் மற்றைய காலை அமத்தியது. எழும்பவோ எதிர்த் தாக்குதல் நடத்தவோ தப்பி ஓடவோ முடியவில்லை.

எனது கைக்குண்டு பை முதுகில் கொழுவியிருந்தது. எனது படகுக்குச் சுடுவதும் கத்தியபடி வருவதும் தெரிந்தது. நெஞ்சுப் பகுதியில் வைத் திருந்த கைக்குண்டுகளைக் கழற்றி கைகளில் வைத்திருந்தேன். புலிகள் 8 பேர் வரையில் படகில் ஏறினார்கள். படகில் பொருத்தப்பட்டிருந்த கலிபர் துப்பாக்கி மற்றும் பொருள் களை எடுத்தார்கள். நான் இறந்து விட்டேன் என்று நினைத்து எனது பக்கமாக 6 பேர் வரை நின்றபோது இனித் தப்ப முடியாது என்று முடி வெடுத்தேன். கையிலிருந்த கைக் குண்டுகளைக் கைவிட்டேன். சற்றும் எதிர்பாராமல் கப்பலில் நின்ற அனை வருக்கும் குண்டுகள் தாக்கியதால் கடலில் விழுந்தார்கள். எனது நாடிப் பகுதியில் காயம் ஏற்பட்டது. என க்கு அருகிலிருந்த புலி நபரின் உடலில் ஏற்பட்ட காயத்தால் எனது உடல் முழுதும் குருதியில் மூழ்கியது. அதைத் துடைக்கக் கூட முடியாமல் தண்ணீர்த் தாகத் தில் விழுங்கவேண்டியிருந்தது. எனக்கு அருகில் காயப்பட்ட புலியை இழுத்துப் பிடித்தேன். கைவிட்டதும் அவன் கடலுக்குள் விழுந்தான். அவன் வைத்திருந்த துப்பாக்கி எனக்குமேல் விழுந்தது. பின்னர் பார்த்தபோது அது சினைப்பர் ரகத் துப்பாக்கி. அதுபோன்ற நவீன ஆயுதம் படையினரிடம் இல்லை என்றும் தெரியவந்தது. விடிந்து கொண்டிருந்தபோது காரைநகர் முகாமிலிருந்து வந்து என்னைத் தூக்கி எடுத்தார்கள். கால்முறிந்தும் தாடை உடைந்தும் அதிக குருதி வெளியேறிய நிலையிலும் நான் காப்பாற்றப்பட்டேன்.

கடற்படையினரின் தற்கொலைத் தாக்குதலால் புலிகளின் பலர் கொல்லப்பட்டனர் என்று செய்திகள் வெளியாகியிருந்தன என்று பின்னர் அறிந்தேன். இதற்காக எனக்கு வீர பிரதாப' பட்டம் வழங்கப்பட்டது.

# மலையைக் கடந்து வந்த கரடி

ஆலிஸ் மன்ரோ
தமிழில் இல. சுபத்ரா



(கடந்த வார தொடர்ச்சி)

'இப்போது உங்கள் கணவர் எப்படி இருக்கிறார்?'

'நன்றாக இருக்கிறார்' என்றாள் அவள்.

'என் மனைவியும் அவரும் ஒரு நெருங்கிய நட்பிற்குள் விழுந்திருந்தனர்.'

'அதைப் பற்றிக் கேள்விப்பட்டேன்.'

'உங்களிடம் ஒருவிஷயம் பற்றிப் பேசலாமா, ஒரு நிமிடம் ஒதுக்க முடியுமா?'

'உங்கள் மனைவியுடனான எந்த உறவையும் என் கணவர் ஆரம்பிக்கவில்லை. நீங்கள் அதைப் பற்றியா பேச விரும்புகிறீர்கள்? அவர் அவளை ஏமாற்றவில்லை. அவரால் அது முடியவும் முடியாது, அவர் அதைச் செய்யவும் மாட்டார். நான் கேள்விப்பட்டதென்னவோ வேறு.'

'இல்லை. இது அதைப் பற்றியே அல்ல. நான் எந்தப் புகார்களுடனும் இங்கு வரவில்லை' என்றான் க்ராண்ட்.

'ஓ, என்னை மன்னியுங்கள். நான் அப்படி நினைத்துவிட்டேன். தயவுசெய்து வீட்டிற்குள் வாருங்கள். வாசல் வழியாகக் குளிர் உள்ளே அறைகிறது. வெளியே தெரிவது போல காலநிலை அப்படி ஒன்றும் இதமாயில்லை இன்று.'

வீட்டிற்குள் நுழைவதே ஒருவகையான வெற்றி போல் தோன்றியது அவனுக்கு.

'நாம் சமையலறையில்தான் அமர வேண்டும். அங்கேதான் ஆப்ரே பேசுவதை என்னால் கேட்க முடியும்' என்றபடி வரவேற்பறையைக் கடந்து அவனை உள்ளே அழைத்துச் சென்றாள்.

முன் ஜன்னல் திரையின் இரண்டு அடுக்குகளை க்ராண்ட் காண நேர்ந்தது - ஒன்று பட்டுத்துணி, மற்றொன்று நூல்துணி - இரண்டுமே நீலநிறம். அதற்குப் பொருத்தமாக நீல நிற ஸோஃபாவும் அடிக்கிற வெளிர்நிறத்தில் தரைவிரிப்பும், நிறைய வண்ணக்கண்ணாடிகளும் ஆபரணங்களும். இதுபோன்ற முகத்தில றைகிற திரைச்சீலைகளை ஃபியோனா என்னவோ சொல்லி அழைப்பாள். அந்த வார்த்தையை வழக்கமாகப் பிரயோகிக்கும் பெண்கள் அதற்கு மோசமான பொருள் கொண்டிருந்தபோதும் ஃபியோனா அதை ஒரு நகைச்சுவை போல் சொன்னாள். ஃபியோனா ஒழுங்குபடுத்துகிற அறைகள் வெறுமையாகவும் பளிச்சென்றும் இருக்கும். இவ்வளவு சிறிய இடத்தில் இவ்வளவு அலங்காரப் பொருட்கள் குவிந்திருப்பதைக் கண்டு அவள் மிகவும் வருந்தியிருப்பாள். சமையலறைக்கு அருகில் இருந்த- கண்ணாடி அறை போன்ற ஓர் இடத்தில் இருந்து (பின்மதிய வெயிலைத் திரைச்சீலை கொண்டு மறைத்திருந்தார்களெனினும்) - தொலைக்காட்சிச் சத்தம் கேட்டது.

ஃபியோனாவின் வேண்டுதல்களுக்கான பதில் சில அடிகளில் இருந்தது - ஏதோ ஒரு பந்து விளையாட்டைப் பார்த்தபடி. அவனது மனைவி அவனை உள்ளே எட்டிப் பார்த்தாள்.

'ஒன்றும் பிரச்சினை இல்லையே' என வினவியபடி கதவினைப் பாதி சாத்தினாள்.

'நீங்களும் ஒரு காஃபி அருந்துங்கள். ஒரு விளையாட்டுச் சேனலை கடந்த ஆண்டு கிறிஸ்துமஸ்ஸின் போது எங்கள் மகன் வாங்கித்தந்தான். அது இல்லாவிட்டால் நாங்கள் என்ன ஆவோம் எனத் தெரியவில்லை.'

காஃபி இயந்திரம், மிக்ஸி, சாணை பிடிக்கும் கருவி என சமையலறை அலமாரிகளில் எல்லா வகையான பொருட்களும் இருந்தன. வேறு சில பொருட்களையோ, இன்னும் சிலவற்றின் பயன்களையோகூட க்ராண்ட் அறிந்திருக்கவில்லை. அப்போதுதான் உறையிலிருந்து எடுக்கப்பட்டது போலவோ அல்லது தினமும் மெருகூட்டப்பட்டது போலவோ எல்லாமே புதிதாகவும் விலை உயர்ந்ததாகவும் தோன்றின.

இவையெல்லாவற்றையும் பாராட்டுவதுகூட சிறந்த வழிதான் என க்ராண்ட் எண்ணினான். அவள் உபயோகித்துக்கொண்டிருந்த காஃபி தயாரிக்கும் இயந்திரத்தைப் பாராட்டியவன் அவனும் ஃபியோனாவும்கூட அது போன்ற ஒன்றை வாங்க எண்ணியிருந்ததாகக் கூறினான். இது முற்றிலும் பொய் - ஒரு சமயத்தில் இரண்டே இரண்டு கோப்பைக் காஃபியினைத் தயாரிக்கும் ஒரு ஈரோப்பிய இயந்திரத்தினையே அவள் உபயோகித்தாள்.

'இதை எங்களுக்கு அவர்கள் தந்தார்கள்,' என்றாள் அவள். 'எங்களது மகனும் அவனது மனைவியும். அவர்கள் கம்லூப்ஸ் பி.சி.யில் வசிக்கிறார்கள். எங்களால் கையாள முடிவதைவிட அதிகமான பொருட்களை அவர்கள் எங்களுக்கு அனுப்புவார்கள். இதற்குப் பதிலாக எங்களை வந்து பார்த்துச் செல்வதற்கு அவர்கள் இந்தப் பணத்தைச் செலவழிக்கலாம்.'

க்ராண்ட் தத்துவார்த்தமாகப் பதிலளித்தான், 'தங்களது வாழ்க்கையை வாழ்வதற்கே அவர்களுக்கு நேரம் சரியாய் இருக்குமாய் இருக்கும்.'

'கடந்த பனிக்காலத்தில் ஹவாய்க்குச் செல்வதற்கெல்லாம் அவர்களுக்கு நேரம் இருந்ததே. வேறு யாரேனும் நெருங்கிய உறவு எங்களுக்கு இருந்தால் பரவாயில்லை. இவன் மட்டும்தான் இருக்கிறான்.'

மேஜை மேல் இருந்த பீங்கான் மரம் ஒன்றின் வெட்டப்பட்ட கிளையிலிருந்து எடுக்கப்பட்ட இரண்டு பழுப்பு-பச்சை வண்ண பீங்கான் கோப்பைகளில் காஃபியை ஊற்றினாள்.

'மனிதர்கள் தனிமையாக உணரத்தான் செய்கிறார்கள்.' இது அவனுக்கான நேரம் என க்ராண்ட் நினைத்தான். 'அவர்கள் விரும்புகிற யாரேனும் ஒருவரைக் காண முடியாமல் போகும்போது அவர்கள் துக்கம் அடைகிறார்கள். எடுத்துக்காட்டாக எனது மனைவி ஃபியோனா.'

'ஆனால் நீங்கள் அவளைச் சென்று பார்த்ததாகக் கூறினீர்களே?'

'ஆமாம், நான் போகிறேன்' என்றான் அவன். 'ஆனால் அது அல்ல விஷயம்.'

அடுத்து அவன் தான் கேட்க வந்த உதவியை தைரியமாகக் கேட்கத் துணிந்தான். வாரம் ஒருமுறை ஆப்ரேவை மெடோலேக்கிற்கு அவளால் அழைத்துச் செல்ல முடியுமா? அது இங்கிருந்து சில மைல்கள் தூரத்தில்தான் இருக்கிறது அல்லது அந்த நேரத்தில் அவள் ஓய்வெடுக்க விரும்பினால் - க்ராண்ட் இந்தச் சலுகையைத் திட்டமிட்டிருக்கவே இல்லை. அதை அவன் உச்சரிப்பதை அவனே அதிர்ச்சியுடன் கேட்டான் - இவனேகூட ஆப்ரேவை அங்கு அழைத்துச் செல்வான், அதில் அவனுக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. அவனால் அதைச் சமாளித்துக்கொள்ளவும் முடியும். அவன் பேசிக்கொண்டிருக்கும்போது தனது மூடிய வாயையும் அதனுள் ஒளிந்திருந்த நாக்கையும் எதோ ஒரு நம்ப முடியாத சுவையை அறிந்துகொள்ள முயல்வதுபோல அசைத்தாள். அவனது காஃபிக்காக பாலும் ஒரு தட்டில் இஞ்சி பிஸ்கட்டுகளும் கொணர்ந்தாள்.

தட்டை மேஜையில் வைத்தபடி, 'வீட்டிலேயே செய்தது' என்றாள். விருந்தோம்பலைவிட அதில் சவாலே தொனித்தது. இருக்கையில் அமர்ந்து தன் காஃபிக்கும் பால் ஊற்றிக் கலக்கிற வரை அவள் எதுவும் பேசவில்லை.

அதன் பிறகு அவள் முடியாதென்றாள்.

'என்னால் அதைச் செய்ய முடியாது. அவனைத் தொந்தரவுக்குள்ளாக்க நான் விரும்பவில்லை என்பதே அதற்குக் காரணம்.'

'அது அவனைத் தொந்தரவுக்குள்ளாக்குமா?' கபடமின்றிக் கேட்டான் க்ராண்ட்.

'ஆமாம், நிச்சயமாக. நிச்சயமாக. அதற்கு வாய்ப்பே இல்லை. வீட்டிற்கு அழைத்துவந்த பிறகு மீண்டும் அவனை அங்கே கூட்டிச் செல்வதாவது! அது அவனைக் குழப்பிவிடும்.'

'அது வெறுமனே பார்வையிடுவதற்காக என்பதை அவன் புரிந்துகொள்ள மாட்டானா? அதற்கு அவன் பழகிக்கொள்ள மாட்டானா?'

அவன் ஏதோ அப்ரேவை அவமானப்படுத்திவிட்டது போல் எடுத்துக்கொண்ட அவள், 'அவனுக்கு எல்லாமே புரியும். என்றாலுமே அது ஒரு தொந்தரவுதான். மட்டுமின்றி, நான் அவனைத் தயார்செய்து காருக்குள் ஏற்றவேண்டும். நீங்கள் நினைப்பது போல அது அவ்வளவு சுலபமானதல்ல. அவனது உருவம் மிகப் பெரியது. மிக மிகக் கவனமாக நான் அதைச் செய்ய வேண்டும். அவனது சக்கர நாற்காலியையும் எடுத்துக்கொள்ள வேண்டும். ஆனால் இவை எல்லாம் எதற்காக? இதையெல்லாம் செய்வதாய் இருந்தால் அவனை இன்னும் மகிழ்விக்கக்கூடிய வேறு எதோ ஒரு இடத்திற்குத்தான் நான் அவனை அழைத்துச் செல்வேன்.'

'ஆனால் இதையெல்லாம் நானே செய்வதாக ஒப்புக்கொண்டாலும் கூடவா? உண்மையாகத்தான் சொல்கிறேன். நீங்கள் எந்த சிரமமும் படவேண்டி இருக்காது.' நம்பிக்கையும் நியாயமும் தொனிக்கிற குரலில் வினவினான் க்ராண்ட்.

'உங்களால் முடியாது' என்றாள் அவள் தட்டையாக. 'உங்களுக்கு அவனைத் தெரியாது. நீங்கள் இதையெல்லாம் செய்வதை அவனால் பொறுத்துக்கொள்ள முடியாது. இந்த எல்லாச் சிரமங்களுக்கும் பலனாக அவனுக்கு என்ன கிடைக்கப் போகிறது?'

ஃபியோனா என்று மீண்டும் சொல்லவேண்டிய அவசியம் இருப்பதாக அவனுக்குத் தோன்றவில்லை.

'அவனை ஏதேனும் வணிக வளாகத்திற்கு அழைத்துச் சென்றால் அது இன்னும் பொருளுள்ளதாக இருக்கும்' என்றாள் அவள். 'அல்லது ஏரியில் இப்போது படகுச்சவாரிகள் ஆரம்பித்துவிட்டன. அதைச் சென்று பார்க்கிற வாய்ப்பேனும் அவனுக்குக் கிடைக்கும்.'

எழுந்துகொண்ட அவள் கை கழுவும் இடத்திற்கு மேலிருந்த ஜன்னலில் இருந்து சிகரெட்டையும் லைட்டரையும் எடுத்தாள்.

'நீங்கள் புகைப்பீர்களா?'

தனக்கு ஒன்று தருவதற்காகக் கேட்கிறாளா என்பது பற்றி யோசிக்காமலேயே 'வேண்டாம், நன்றி' என்றான்.

'எப்போதுமே புகைத்ததில்லையா? அல்லது விட்டுவிட்டீர்களா?'

'விட்டுவிட்டேன்.'

'எப்போதிருந்து?'

'முப்பது ஆண்டுகளுக்கு முன்பு. இல்லை, அதற்கும் மேலிருக்கும்.'

ஜாக்கியுடன் தொடர்பில் இருந்த காலத்தில் அவன் புகைப்பதை நிறுத்த முடிவுசெய்தான். முதலில் புகைப்பதை நிறுத்திவிட்டு அதற்கான பெரிய பரிசாக அவள் வந்ததை நினைத்தானா அல்லது இப்படி ஒரு வலிமையான வசீகரம் கிடைத்திருப்பதால் இதனைப் பயன்படுத்தி சிகரெட்டை விட்டுவிட நினைத்தானா என்பது அவனுக்கு நினைவில்லை.

சிகரெட்டைப் பற்றவைத்தவாறே, 'நான் நிறுத்துவதை நிறுத்திவிட்டேன்' என்றாள். 'நிறுத்துவதை நிறுத்துவதென உறுதிமொழி எடுத்துக் கொண்டுவிட்டேன், அவ்வளவுதான்.'

இந்த முகச்சுருக்கங்களுக்கு அதுவே காரணமாய் இருக்கலாம். யாரோ -ஒரு பெண் - அவனிடம் சொல்லியிருக்கிறார்கள்- புகை பிடிக்கும் பெண்களுக்கு ஒரு குறிப்பிட்ட அமைப்பில் முகச்சுருக்கங்கள் ஏற்படுகிறதென. ஆனால் அது வெறும் சூரியனால் இருக்கலாம், அல்லது அவளது தோலின் இயல்பாக இருக்கலாம் - அவளது கழுத்திலும் குறிப்பிடத்தக்க அளவு சுருக்கங்கள் இருந்தன. சுருக்கங்களுடைய கழுத்து, இளமை பொங்கும் நிமிர்ந்த பெருத்த முலைகள். இந்த வயதுப் பெண்களிடம் பொதுவாகவே இதுபோன்ற முரண்கள் காணப்படத்தான் செய்கின்றன. நல்ல அம்சங்களும் மோசமான அம்சங்களும், மரபுரீதியான கொடைகளும் குறைகளும் எல்லாமும் கலந்த கலவை. வெகு சிலரே முழுமையான, தன்மையான அழகினைக் கொண்டிருந்தார்கள் - ஃபியோனாவைப் போல. ஒருவேளை அதுவும் கூட பொய்யாக இருக்கலாம் - ஃபியோனாவை இளம் வயதிலிருந்தே அவன் பார்த்து வருவதால் அப்படித் தோன்றலாம். ஆப்ரே தன் மனைவியைக் கண்டபோது, இலேசாகச் சரிந்த நீலக்கண்களும் மறுக்கப்பட்ட சிகரெட் பொருத்தப்பட்ட மூடிய உதடுமாக துணிச்சலும் வெறுப்பும் நிரம்பிய ஒரு மேல்நிலைப்பள்ளி மாணவியா அவளில் தெரிந்திருப்பாள்?

'அப்படியாக, உங்கள் மனைவி சோர்வுற்றிருக்கிறார்... அவரது பெயர் என்ன? மறந்துவிட்டேன்' என்றாள் ஆப்ரேவின் மனைவி.

'ஃபியோனா.'

'ஃபியோனா. உங்களது பெயர் என்ன? அதை நீங்கள் சொல்லவேயில்லை என நினைக்கிறேன்.'

'க்ராண்ட்' என்றான் க்ராண்ட்.

'ஹலோ க்ராண்ட். நான் மரியன்.'

'இப்போது நாம் ஒருவர் பெயரை ஒருவர் அறிந்துகொண்டோம். நான் என்ன நினைக்கிறேன் என்பதைச் சொல்லாமல் மறைப்பதில் எந்த அர்த்தமுமில்லை. இன்னமும் அவன் உங்களது - ஃபியோனாவைக் காண்பதில் ஆர்வமாக இருக்கிறானா என எனக்குத் தெரியவில்லை. இல்லை. நான் அவனிடம் கேட்கவில்லை, அவன் சொல்லவுமில்லை. அது வெறும் ஒரு தற்காலிக மகிழ்ச்சியாக இருந்திருக்கலாம். அவனை மீண்டும் அங்கே அழைத்துச் சென்று அது அடுத்த கட்டத்திற்கு நகர்ந்தால்? என்னால் அப்படிப் பணயம் வைக்க முடியாது. ஏற்கெனவே நான் முழுமையாக ஆக்கிரமிக்கப்பட்டிருக்கிறேன். புதிதாக இந்தப் பிரச்சினையும் சேர்ந்து அவன் மோசமானால், எனக்கு வேறு உதவியும் இல்லை. நான் மட்டும்தான் இருக்கிறேன். நான் மட்டும்.'

'நீங்கள் எப்போதாவது நினைத்திருக்கிறீர்களா - அப்படி ஒரு முடிவு எடுப்பது உங்களுக்குச் சிரமம்தான் - அவரை முழுமையாக அந்த மையத்திலேயே விட்டுவிட எப்போதேனும் நினைத்திருக்கிறீர்களா?'

இரகசியம் பேசுகிற அளவிற்கு அவன் தன் குரலைத் தழைத்திருந்தான், ஆனால் அவள் அதற்கான தேவை இருப்பதாகக் கருதவில்லை.

'இல்லை, நான் அவனை இங்கேயேதான் வைத்திருக்கப் போகிறேன்.'

'ம்.. மிகவும் நல்லது, நீங்கள் மிகவும் உயர்வானவர்' என்றான் க்ராண்ட். 'உயர்வானவர்' என்ற தன் வார்த்தையில் எள்ளல் எதுவும் வெளிப்பட்டுவிடவில்லை என அவன் நம்பினான், அவனுக்கு அந்த நோக்கம் இருந்திருக்கவில்லை.

'அப்படியா நினைக்கிறீர்கள்?' என்றாள் அவள். 'உயர்வானவளாக இருப்பதற்கெல்லாம் நான் இதைச் செய்யவில்லை.'

'இருந்தாலும், அது அவ்வளவு சுலபமானதில்லை.'

'இல்லை, விஷயம் அது பற்றியில்லை. நான் இருக்கிற நிலையில் எனக்கு வேறு வழியில்லை. அவனை அந்த மையத்திலேயே விட்டுவிடுகிற அளவிற்கு என்னிடம் பணம் இல்லை, இந்த வீட்டை விற்றால்தான் ஆயிற்று. இந்த வீடு மட்டும்தான் எங்களுக்குச் சொந்தமாய் இருக்கிறது. பணத்திற்கு எனக்கு வேறு எந்த வழியும் இல்லை. அடுத்த ஆண்டு அவனது ஓய்வூதியமும் எனது ஓய்வூதியமும் எனக்குக் கிடைக்கும். அதற்குப் பிறகும்கூட அவனை அங்கே விட்டுவிட்டு நான் இங்கே வீட்டில் இருக்கிற அளவிற்கு என்னிடம் பணம் இருக்காது. அதோடு, இந்த வீடு எனக்கு மிக முக்கியம், பல வகைகளில் முக்கியம்.'

'இது ரொம்பவும் அழகாக இருக்கிறது' என்றான் க்ராண்ட்.

'ம், பரவாயில்லை. நான் இதில் நிறைய வேலை செய்திருக்கிறேன். நிறைய. அதைச் சரிசெய்வதற்கும் பராமரிப்பதற்கும். இதை இழக்க நான் விரும்பவில்லை.'

'சரிதான். எனக்குப் புரிகிறது.'

'அவனது அலுவலகம் எங்களை அம்போவென விட்டுவிட்டது. அதைப் பற்றி எனக்கு விளக்கமாகச் சொல்லத் தெரியவில்லை, ஆனால் அவர்கள் அவனை வெளியே துரத்திவிட்டார்கள். இவன்தான் அவர்களுக்குப் பணம் தர வேண்டியிருப்பதாக அவர்கள் இறுதியில் சொன்னபோது நான் அவற்றைப் பற்றி விசாரிக்க முயன்றேன். ஆனால் அவன் என்னை அதில் தலையிட வேண்டாம் என்று சொல்லிவிட்டான். ஏதோ முட்டாள்தனமாக இவன் செய்திருக்க வேண்டும். ஆனால் நான் அதையெல்லாம் கேட்கக்கூடாது, எனவே நான் அமைதியாகிவிட்டேன். நீங்களும் திருமண வாழ்வில் இருந்திருக்கிறீர்கள். இருக்கிறீர்கள். உங்களுக்கே தெரியும் அதைப் பற்றி. நாங்கள் ஒரு பயணத்திற்குச் சென்றிருந்த போதுதான் இடையில் இதையெல்லாம் நான் அறிய நேர்ந்தது. அதே பயணத்தில் இதுவரை கேள்விப்பட்டேயிராத ஒரு வைரஸால் தாக்கப்பட்டு இவன் கோமாவிற்கும் செல்கிறான். அப்படியாக அவன் அந்தப் பிரச்சினையிலிருந்து தப்பித்துவிட்டான்.'

'கெட்ட நேரம்தான்,' என்றான் க்ராண்ட்.

'அவன் வேண்டுமென்றே நோய்வாய்ப்பட்டான் என நான் சொல்லவில்லை. அது அப்படி நிகழ்ந்துவிட்டது. இப்போது அவனுக்கு என்மீது எந்த மோகமும் இல்லை, எனக்கும் அவன் மீது இல்லை. இதுதான் வாழ்க்கை. நம்மால் வாழ்க்கையை வெல்ல முடியாது.'

சட்டென நாக்கை ஒரு பூனை போல் வெளியே நீட்டி உதட்டின் மேலிருந்த பிஸ்கட் துகளை எடுத்துக்கொண்டாள். 'நான் ஒரு தத்துவவாதி போலப் பேசுகிறேன், இல்லையா? நான் ஒரு பல்கலைக் கழகப் பேராசிரியராய் இருந்திருக்க வேண்டும் என அவர்கள் சொன்னார்கள்.'

'கொஞ்ச நேரம் முன்பு,' என்றான் க்ராண்ட்.

'நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் என எனக்குத் தெரிந்துவிட்டது, நான் ஒரு காரியக்காரி என நினைக்கிறீர்கள்தானே?' என்றாள்.

'நான் யாரைப் பற்றியும் தீர்ப்பெழுதுவதில்லை. இது உங்கள் வாழ்க்கை.'

'நீங்கள் அப்படித்தான் நினைக்கிறீர்கள்.'

இன்னும் கொஞ்சம் சமாதானமாக இதை முடிக்க வேண்டும் என அவன் நினைத்தான். பள்ளிக் காலத்தில் அவளது கணவன் ஏதேனும் அடிசரக்குக் கடையில் கோடைகாலங்களில் வேலை பார்த்திருக்கிறானா எனக் கேட்டான்.

'அப்படி எதையும் நான் கேள்விப்படவேயில்லை,' என்றாள் அவள். ' நான் இந்த ஊரில் வளரவில்லை.'

ஆப்ரேவின் மனைவியிடம் தன் முயற்சி தோற்றுவிட்டதென்பதை க்ராண்ட் புரிந்து கொண்டான். ஒரு பெண்ணின் அடிப்படைப் பொறாமையை - ஆத்திரத்தை, பொறாமையின் எச்சமான பிடிவாதத்தை மட்டுமே அங்கு காண நேர்ந்ததாக திருப்திப்பட்டுக்கொள்ள வேண்டும் அவன். அவள் இந்த விஷயங்களை எப்படி அணுகுவாள் என்பது பற்றி முன்பு அவனுக்கு எந்த அனுமானமும் இருந்திருக்கவில்லை. என்றாலும் இந்த உரையாடல் அவன் முற்றிலும் எதிர்பாராத வகையிலும் இல்லை. அவனது வீட்டில் இதே போன்ற பல உரையாடல்களை ஏற்கெனவே கேட்டிருக்கிறான். அவனது சொந்தங்கள் - அம்மாவும்கூட - மரியனைப் போலத்தான் சிந்தித்திருப்பார்கள். பணம்தான் முக்கியம். அப்படி நினைக்காதவர்கள் யதார்த்தத்தினூடான தொடர்பிலிருந்து விலகிவிட்டார்கள் என்றே அவர்கள் கருதினார்கள். மரியனும் இவனை அப்படித்தான் நினைத்திருப்பாள். புத்திகெட்டவன், ஏதோ ஒரு அதிர்ஷ்டத்தினால் வாழ்வினைப் பற்றிய நிஜத்திலிருந்து பாதுகாக்கப்பட்ட, சலிப்பூட்டும் வியாக்கியானங்கள் கொண்ட ஒருவன். வீட்டினைப் பாதுகாக்க வேண்டிய அவசியமின்றி, இன்னொரு மனிதரை மகிழ்ச்சியூட்டும் என அவன் நம்புகிற பெருந்தன்மையான திட்டங்கள் குறித்து கனவு கண்டு கொண்டு திரிபவன். எப்படி ஒரு முட்டாள் என இப்போது அவள் நினைத்துக்கொண்டிருக்கக் கூடும்.

இதுபோன்ற ஒரு மனிதருக்கு எதிராக நிற்பது அவனை நம்பிக்கையிழக்கச் செய்வதாகவும் எரிச்சலூட்டுவதாகவும் இறுதியில் தனிமையில் தள்ளுவதாகவும் இருந்தது. ஏன்? இது போன்ற மனிதர்களுக்கு எதிராக தனது கருத்துகளில் உறுதியாக நிற்பதை அவன் சிரமமாக உணர்ந்ததாலா? இறுதியில் அவர்கள்தான் சரி என அவனுக்குத் தோன்றிவிடுவதாலா? அவன் தனது நிலையிலேயே இருந்திருந்தால் இவளையோ



இவளைப் போன்ற ஒரு பெண்ணையோதான் திருமணம் செய்திருப்பான். இவனை ஈர்க்கும்படியாகத்தான் அவளும் இருந்திருப்பாள். ஒரு சல்லா பக்காரியாகவேனும். அவளது புட்டத்தை சமையலறைச் நாற்காலியிலிருந்து நகர்த்தியதில் இருந்த பகட்டு, மூடிய அவளது வாய், செயற் கையாய்ச் சூட்டிக்கொண்ட சிறிய அதட்டல் - ஒரு சிறு நகரச் சல்லாபக்காரியின் வெகுளித் தனமான கவர்ச்சியில் இறுதியில் எஞ்சியிருப்பது அது ஒன்றுதான்.

ஆப்ரேவைத் தேர்ந்தெடுத்தபோது அவளுக்குச் சில நம்பிக்கைகள் இருந்திருக்கக்கூடும். அவனுடைய நல்ல தோற்றம், விற்பனைப் பிரதிநிதி வேலை, மேல்தட்டு வாழ்க்கை முறை. தற்போது இருப்பதைவிட நல்ல நிலைக்கு இந்தத் திருமணம் தன்னை எடுத்துச் செல்லும் என அவள் நம்பியிருப்பாள். ஆனால் இப்படியானவர்களுக்கு வாழ்க்கை இப்படித்தான் முடிந்துவிடுகிறது. அவர்களது கணக்கீடுகளையும், உள்ளுணர்வு களையும் தாண்டி அவர்கள் எதிர்பார்த்த அள விற்கு வாழ்க்கை அவர்களை எடுத்துச் செல்வ தில்லை. அது அநியாயம் என்பதில் எந்தச் சந் தேகமும் இல்லை.

சமையலறையில் அவனை முதலில் ஈர்த்தது தொலைபேசியில் பதிலளிக்கும் இயந்திரத்தில் மினுக்கிய ஒளிதான். எப்போதும் போலவேதான் இப்போதும் நினைத்தான் - ஃபியோனா. மேலங்கியைக் கழட்டும் முன்பாகவே பொத்தானை அழுத்தினான்.

'ஹலோ க்ராண்ட், நான் சரியான ஆளிடம்தான் பேசுகிறேன் என நினைக்கிறேன். எனக்கு ஒன்று தோன்றியது. இங்கே சனிக்கிழமை இரவு தனியர்களுக்கான ஒரு நடனக் கொண்டாட்டம் நடைபெற இருக்கிறது. அதன் மதிய உணவு ஏற்பாட்டுக் குழுவில் நானும் இருக்கிறேன். எனவே நான் இலவசமாக ஒரு விருந்தினரை அழைக்க முடியும். உங்களுக்கு ஒருவேளை அதில் கலந்து கொள்ள ஆர்வம் இருக்குமோ என எண்ணினேன். வாய்ப்பிருந்தால் திரும்ப அழையுங்கள்.'

ஒரு பெண்ணின் குரல் தொலைபேசி எண் ஒன்றைச் சொன்னது. அடுத்து ஒரு பீப் ஒலிக்குப் பிறகு மீண்டும் அதே குரல் ஒலிக்கத் தொடங்கியது.

'அது யார் என்பதைச் சொல்ல மறந்துவிட்டேன் என்பது இப்போதுதான் நினைவுக்கு வந்தது. குரலை நீங்கள் அடையாளம் கண்டிருக்கக்கூடும். நான் மரியன். நான் இன்னும் இதுபோன்ற இயந்திரங்களுக்குப் பழகவில்லை. நீங்கள் தனித்திருப்பவர் இல்லை என்பதை நான் அறிவேன், அப்படி நான் நினைக்கவும் இல்லை. நானும்கூட அப்படித்தான். ஆனால் எப்போதேனும் வெளியே செல்வதில் தவறேதும் இல்லை. உங்களுக்கு ஆர்வம் இருந்தால் நீங்கள் எனக்கு அழைக்கலாம், விருப்பம் இல்லையென்றால் விட்டுவிடுங்கள். வெளியே செல்வதற்கான வாய்ப்பை நீங்கள் விரும்பக்கூடும் என நான் நினைத்தேன். நான் மரியன் பேசுகிறேன். ஏற்கெனவே இதைச் சொல்லி விட்டேன் என நினைக்கிறேன். சரி, வைக்கிறேன்.'

வீட்டில் சற்று நேரம் முன்பு அவன் கேட்ட குரலிலிருந்து இப்போது கேட்கிற குரல் மாறுபட்டிருந்தது. முதல் செய்தியில் கொஞ்சமும் இரண்டாவது செய்தியில் நிறையவும் மாற்றம். குரலில் ஒரு நடுக்கம், போலியான அசட்டை, சீக்கிரம் அடைவதற்கான ஆர்வமும் விட்டுவிட மனமில்லாமையும்.

அவளுக்கு என்னவோ நேர்ந்திருக்கிறது. ஆனால் எப்போது? அது அவனைக் கண்ட உடனே தோன்றியிருந்ததெனில், அவன் உடன் இருந்த அவ்வளவு நேரமும் வெற்றிகரமாக அதை மறைத் திருந்திருக்கிறாள். கொஞ்சம் கொஞ்சமாகத்தான் இது தோன்றியிருக்க வேண்டும், அவன் கிளம்பிய பிறகு. பெரிய ஈர்ப்பு என்று சொல்லிவிடமுடியாது. இவனிடம் அதற்கான ஒரு வாய்ப்பிருக்கிறதென எண்ணியிருக்கலாம், தனியாக இருக்கிறான் என்பதால். கிட்டத்தட்ட தனியாக. இதைத் தொடர்வதற்கான சாத்தியம் அவளுக்கும் இருக்கிறதென்பதால்.

ஆனால் இந்த முயற்சியின் தொடக்கத்தில் அவளுக்கு ஒரு நடுக்கம் இருந்தது. அவள் தன்னை ஒரு ஆபத்திற்குள் இறக்குகிறாள். எவ்வளவு தூரத்திற்கு என்பதை அவளால் சொல்ல முடியவில்லை. பொதுவாகவே பெண்களது பலவீனம் நேரம் செல்லச் செல்ல, விஷயங்கள் வளர வளர அதிகரிக்கிறது. ஆரம்பத்தில் சொல்ல முடிவதெல்லாம், தொடக்கத்தில் அது கொஞ்சமேனும் இருந்தால் முடிவில் அது அதிகமாய் ஆகும் என்பது தான். அப்படி ஒரு உணர்வை அவளில் தோற்றுவித்ததில் அவனுக்குத் திருப்தி தோன்றியது - ஏன் மறுக்க வேண்டும்? அவளது ஆளுமையில் ஒரு மினுக்கத்தையும் பாதிப்பையும் ஏற்படுத்த முடிந்திருக்கிறது அவனால். அவளது அந்த விலாவாரியான பேச்சில் இந்த மறைமுக வேண்டுதலைக் கேட்டதில் மகிழ்ச்சி.

காளானும் முட்டையும் கலந்து ஒரு ஆம்லெட் இட்டுக்கொண்டான். கொஞ்சம் குடிக்கவும் செய்யலாம் என நினைத்தான்.

என்ன வேண்டுமானாலும் செய்யலாம். அது நிஜம்தானா - என்ன வேண்டுமானாலும் செய்யலாமா? உதாரணமாக - ஆப்ரேவை ஃபியோனாவிடம் அழைத்துச் செல்லுவது குறித்து இவன் பேசுவதை ஒப்புக்கொள்ளும் அளவிற்கு இவன் அவளை மாற்ற முடியுமா? வெறுமனே சென்று பார்த்து வருவதற்காக அல்ல - ஆப்ரேவின் எஞ்சிய வாழ்நாள் முழுமைக்கும். ஆப்ரேவை ஃபியோனாவிடம் ஒப்படைத்த பிறகு இவனும் மரியனும் என்ன ஆவார்கள்?

இவன் அழைப்பிற்காக மரியன் அவள் வீட்டில் இப்போது காத்துக்கொண்டிருப்பாள். தன்னை எதற்குள்ளேனும் மூழ்கடித்துக்கொள்வதற்காக, ஏதேனும் வேலையிலும் ஈடுபட்டிருக்கக்கூடும். க்ராண்ட் காளான்கள் வாங்கி வீட்டிற்கு வந்து கொண்டிருந்த நேரத்தில் அவள் ஆப்ரேவிற்கு உணவளித்திருக்க வேண்டும். இப்போது அவனைப் படுக்கைக்குத் தயார்படுத்திக் கொண்டிருப்பாளாயிருக்கும். ஆனால் இவை எல்லாவற்றின் போதும் அவள் தொலைபேசியிலேயே கவனமாய் இருப்பாள் - தொலைபேசியின் அமைதியில். வீட்டிற்குச் செல்வதற்கு க்ராண்டிற்கு எவ்வளவு நேரம் ஆகும் என அவள் கணக்கிட்டிருப்பாள், தொலைபேசிப் புத்தகத்தில் இருந்த அவனது முகவரி அவன் எங்கே வசிக்கிறான் என்பது பற்றி அவ ளுக்குச் சொல்லியிருக்கும். இரவுணவிற்குத் தேவை யான பொருட்களை வாங்க கடைக்குச் சென்றுவிட்டு (ஆண்கள் இதற்காகத் தினமும் கடைக்குச் செல்வார்கள் என்பதைக் கணித்து) வீட்டிற்குச் செல்ல ஆகும் நேரத்தைக் கணித்திருப்பாள். அதன்பிறகு அவனுக்கு வந்த செய்திகளைக் கேட்பதற்குக் கொஞ்ச நேரம் அல்லது வீட்டிற்குச் செல்லும் முன்பு முடிக்க வேண்டிய வேறு சில வேலைகள் அல்லது வெளியிலேயே இரவுணவும் சந்திப்புகளும் முடித்துவிட்டு வீட்டிற்குத் தாமதமாகச் செல்லக்கூடும்.

இவனுக்கு இதில் என்ன பெருமை. எல்லாவற்றையும் தாண்டி அவள் ஒரு விவேகமான பெண். அவன் இன்னும் செய்திகளைப் பார்த்திருக்கமாட்டான் எனவும் எப்படியாயினும் சிறப்பாக நடனமாடுவான் எனவும் நினைத்தபடி வழக்கமான நேரத்தில் உறங்கச் சென்றிருப்பாள். மிகவும் விறைப்பானவன், பேராசிரியருக்கான குணநலம் கொண்டவன். பத்திரிகைகளைப் பார்த்தபடி தொலைபேசிக்கு அருகே அமர்ந்திருந்த போதும் அது மறுபடி ஒலித்தபோது அவன் எடுத்துப் பேசவில்லை.

அவளுக்கு என்னவோ நேர்ந்திருக்கிறது. ஆனால் எப்போது? அது அவனைக் கண்ட உடனே தோன்றியிருந்ததெனில், அவன் உடன் இருந்த அவ்வளவு நேரமும் வெற்றிகரமாக அதை மறைத் திருந்திருக்கிறாள்

'க்ராண்ட். இது மரியன். கீழே தரைத்தளத்தில் துணிகளை உலர்ப்பானில் இட்டுக்கொண்டிருந்த போது இங்கே மேலே தொலைபேசி ஒலித்தது போல் இருந்தது. மேலே வருவதற்குள் நின்று விட்டது. ஒரு வேளை அது நீங்களாய் இருந்தால், ஒருவேளை நீங்கள் வீட்டிற்குச் சென்றிருந்தால், நான் கீழே போயிருந்தேன் என்பதைச் சொல்ல நினைத்தேன். செய்திகளைச் சேமித்துவைக்கிற வசதி என்னிடம் இல்லாததால் உங்களால் செய்தி அனுப்பியிருக்க முடியாது. அதனால்தான், இதை உங்களுக்குச் சொல்லிவிட விரும்பினேன். வைக்கிறேன்.' மணி இப்போது பத்து இருபத்தைந்தாகி இருந்தது.

எடுத்திருந்தால், இப்போதுதான் வீடுவந்ததாகச் சொல்லியிருப்பான். விஷயத்தின் சாதக பாதகங்களை யோசித்தபடி அவன் இங்கே அமர்ந்திருப்பதைப் பற்றி அவளுக்குச் சொல்வதில் எந்தப் பயனும் இல்லை.

மறைப்பு. அந்த நீலத்திரைச்சீலைகளை மறைப்பு என்றுதான் ஃபியோனா அழைத்திருப்பாள். ஏன் அழைக்கக்கூடாது? அந்த இஞ்சி பிஸ்கட்டுகளின் கச்சிதமான வட்ட வடிவத்தை நினைத்துப் பார்த்தான். அது வீட்டில் செய்ததென பிரகடனப்படுத்த வேண்டியிருந்தது அவளுக்கு, பீங்கான் மரத்தின் மேல் பீங்கான் கோப்பைகள், தரைவிரிப்பைப் பாதுகாக்கும் பொருட்டு அதன் மேல் ஒரு பிளாஸ்டிக் விரிப்பு. அவளது அம்மா ஒருபோதும் அடைய முடிந்திராத, ஆனால் இரசித்திருக்கக்கூடிய, உயர்ரக பளபளப்பு. ஒரு வேளை அதனால்தான் அவனுக்கு அங்கிருந்த அன்பில் செயற்கைத்தன்மை தோன்றுகிறதா? அல்லது முதல் பானத்திற்குப் பிறகு மேலும் இரண்டு அருந்தியதாலா?

அந்த முகத்திலும் கழுத்திலும் இருந்த வால்நட் நிற பழுப்பு - அது வெயிலின் பாதிப்பு என இப்போது அவன் முடிவுசெய்திருந்தான் - நிறைந்த வாசமும் கவர்ச்சியும் மிக்க மார்புப் பிளவுக்குள்ளும் அவளது ஆழ்ந்த சுருக்கங்கள் நீண்டிருக்கலாம். ஏற்கெனவே எழுதி வைத்திருந்த அவளது எண்ணை டயல் செய்தபடி இதையெல்லாம் அவன் யோசித்தான். அதையும் உணர்ச்சிமிகுந்த அவளது பூனை நாக்கையும். இரத்தினக்கல் போன்ற அவளது கண்கள்.

ஃபியோனா அவளது அறையில் இருந்தாள், ஆனால் படுக்கையில் அல்ல. வழக்கமாக அணிகிற வகையிலான, ஆனால் பளீர் நிறம் கொண்ட குட்டையான ஆடை அணிந்தபடி திறந்த ஜன்னல் அருகே அமர்ந்திருந்தாள். வெளியில் மொத்தமாகப் பூத்திருந்த லைலாக்கும் நிலமெல்லாம் விரவப்பட்டிருந்த வசந்தகால எருவும் அதன் வழியாக அறைக்குள் வாசமாய்ப் படர்ந்தன.

அவளது மடியில் திறந்த புத்தகம் ஒன்று இருந்தது.

'என்னிடம் இருக்கும் இந்த அருமையான புத்தகத்தைப் பாரேன். இது ஐஸ்லாந்தைப் பற்றியது. இதுபோன்ற மதிப்புமிக்க புத்தகங்களை நமது அறையில் வைப்பார்களென நாம் நினைத்திருக்கவே மாட்டோம். ஆனால் ஆடைகளையெல்லாம் குழப்பி வைத்திருக்கிறார்கள் - நான் ஒருபோதும் மஞ்சள் அணிந்ததேயில்லை.'

'ஃபியோனா' என்றான்.

'கிளம்பத் தயாராக எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு விட்டோமா நாம்?' என்றாள். அவளது குரலின் பிரகாசம் சிறிது தடுமாறுவதாகத் தோன்றியது அவனுக்கு. 'உன்னை நெடுநாட்களாகக் காணவேயில்லை.'

'ஃபியோனா, நான் உனக்கு ஒரு ஆச்சரியம் கொணர்ந்திருக்கிறேன். உனக்கு ஆப்ரேவை நினைவிருக்கிறதா?'

காற்றலைகள் அவள் முகத்தில் வலுவாக மோதியது போல க்ராண்டை ஒரு நொடி வெறித்தாள். அவள் முகத்தில், அவள் தலைக்குள் எல்லாவற்றையும் கலைத்துப்போடும் விதமாக. தளர்ந்த பின்னல்களும் கந்தல் துணிகளுமாக.

'பெயர்கள் என் நினைவில் நிற்பதில்லை,' என்றாள் கோபமாக.

பின் அந்தப் பார்வை, முயன்று எதையோ மீட்டெடுத்து கேலி கலந்த நளினத்துடன் பின்வாங்கியது. புத்தகத்தைக் கவனமாகக் கீழே வைத்துவிட்டு எழுந்தவள் கைகளை உயர்த்தி அவனைச் சுற்றி வளைத்துக்கொண்டாள். அவளது சருமமோ சுவாசமோ இலேசானதொரு புதிய மணத்தை வெளிப்படுத்தியது- அது அவனுக்கு நீருக்குள்ளிருக்கும் ஒரு பச்சைத்தாவரத்தின் வாசனையை நினைவூட்டியது.

'உன்னைப் பார்த்ததில் எனக்கு மிக்க மகிழ்ச்சி' என்ற அவளது குரல் ஒரே நேரத்தில் அன்பானதாகவும் சம்பிரதாயமானதாகவும் ஒலித்தது. அவனது காதுமடலை அழுத்திக் கிள்ளினாள்.

'நீ அப்படியே திரும்பிச் சென்றிருக்கலாம்,' என்றாள் அவள். 'எதைப் பற்றியும் யாரைப் பற்றியும் கவலைப்படாமல் என்னை அப்படியே விட்டுச் சென்றிருக்கலாம். என்னைவிட்டுப் போயிருந்திருக்கலாம். போயிருக்கலாம்.'

அவளது வெண்முடியின் மேல், வெளிர்சிவப்பு உச்சியில், இனிமையான வடிவம் கொண்ட தலையில் தன் முகத்தை வைத்துக்கொண்டான்.

'வாய்ப்பே இல்லை,' என்றான். ■

# நம்மவூர்ச் சுத்துமாத்து

பருத்தித்துறை - நடராசா

## கோவில் கணக்குக் கேட்பது தெய்வ குற்றமா?

தமிழர் மத்தியில் இலங்கையிலும் வெளி நாடுகளிலும் உள்ள மிகப் பெரிய பிரச்சினை கோவில் கணக்குக் கேட்டு அதன் மூலம் ஏற்படு கின்ற சண்டைகளே. கோவிலுக்கு எவ்வளவு பணம் கொடுத்தாலும் வாங்கிக் கொள்கிறார்கள். ஆனால் அந்தப் பணத்துக்கு என்ன நடந்தது என்று கேட்டால் பணத்தைக் கையாண்டவர்கள் ஏதோ காரணங்களைக் காட்டிச் சுத்துமாத்துப் பண்ணுகிறார்கள். இதனால் கோவில்கள் தற் போது பிரச்சினைக்குரிய மையங்களாக மாறி யுள்ளன. அதிகமான கோவில்கள் நீதிமன்ற வழங் குகளில் இருப்பதால் பிரதேச செயலர்களின் பொறுப்பில் இயங்கி வருகின்றன.

புதிய நிர்வாகம் ஒன்றைத் தெரிவு செய்தாலும் ஏற்கனவே கணக்குக் காட்டுவதில் பிரச்சினைப் பட்டவர்களின் கைகளே அதிலும் ஓங்கியிருக் கிறது. அல்லது கணக்குக் கேட்பவர்களைப் பொறுப்பெடுத்து நடத்துமாறு சண்டித்தனம் செய்கின்றனர்.

இந்தக் கணக்குக் கேட்கும் விடயத்தில் வட மராட்சியில் உள்ள ஒரு கோவில் நிர்வாகத்தி லிருந்த ஒரு விரிவுரையாளர் நிலாவரைக் கிணற் றில் குதித்து உயிரை மாய்த்தார் என்று சொல் லப்படுகின்றது. கோவில் கணக்குக் கேட்டு வாக்கு வாதப்பட்ட பேராசிரியர் ஒருவர் கோவிலிலேயே சாவடைந்தார். கோவில்களில் கணக்குக் காட் டாது வெளிநாட்டுக் காரரின் பணத்தைக் கையா ளும் ஒரு கூட்டம் தமிழ்ச் சமூகத்தில் ஒரு மாபி யாவாக உருவெடுத்திருக்கிறது. கோவிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்பது முது மொழி. தற்போது கோவிலுள்ள இடங்களைவிட் டுப் பலர் ஒதுங்கி ஓடும் நிலை ஏற்பட்டுவிட்டது. வெறும் பூவை வைத்துக் கும்பிடும் மிகச் சாதா ரண இந்துச் சைவ வணக்க முறைகள் இன்று பல கோடி ரூபா கோவில்கள், நடைமுறைகள் எனப் பெரு வர்த்தக மையங்களாக உருவெடுத்து நிற்கின்றன.

உண்டியலில்லாத தங்க நகைகள் இல்லாத



கோவில்களை உருவாக்குவதன் மூலமே பணத் துக்காகக் கோவில்களில் காத்திருக்கும் அடாவ டிக்கும்பலை கோவிலுக்குள் போகவிடாது செய்ய முடியும். கோவிலில் கடவுள் சந்நிதானத் தில் நின்றுகொண்டு ஊழலும் சுத்துமாத்தும் செய்ய முடிகிறதென்றால் கடவுளின் தீர்ப்புத்தான் என்ன?

---



இந்த வார சமையல்

## கொள்ளு இட்லி



இளைத்தவனுக்கு எள்ளு கொளுத்தவ னுக்குக் கொள்ளு என்றொரு முதுமொழி எம்மிடத்தே உண்டு. உடல்வாகு குறைந்து நலிந் திருப்பவருக்கு எள்ளு சிறந்த ஆகாரம் என்றும் பருத்த தேக முள்ளவர்களுக்குக் கொள்ளுச் சிறந்த ஆகாரம் என்பதும் அதன் அர்த்தம். எள்ளும் கொள்ளும் எதிர் எதிர்த் திசைகளில் வைத்துப்பார்க்கக்கூடிய ஆகாரங்கள் என்பதும் இதன் மூலம் தெரியவரும். எள்ளுவை எள்ளுருண்டை, எள்ளுப்பாகு, எள்ளில் இருந்து எடுக்கப்படுகின்ற நல்லெண்ணெய் எனப்ப டுகின்ற எள்ளு எணணெய் எனப் பல வழிகளில் நாம் அன் றாடம் உள்ளெடுக்கிறோம். ஆனால், கொள்ளுவைத் தொட் டும் பார்ப்பதில்லை. கொள்ளு என்பது ஒரு வகையான பயறே ஆகும். உடலிலுள்ள கெட்ட கொழுப்பை அகற்றும் ஆற்றல் அதற் கிருப்பதால் தான் அதிகரித்த கொழுப்பால் அவதிப்படுகின்ற பருத்தவர்களுக்கு - கொளுத்தவர்களுக்குக் கொள்ளு அரு மருந்தாக முன்வைக்கப்படுகிறது. அத்த கைய கொள்ளுவில் இட்லி செய்தால் எப்படியிருக்கும். அது குறித்து இந்த முறை பார்ப்போம்.

### தேவையான பொருள்கள்

கொள்ளு - ஒரு கப், இட்லிக்குப் பயன் படுத்தும் அரிசி - 3 கப், வெந்தயம் - 2 கர ண்டி, உப்பு - தேவைக்கு.

### எப்படிச் சமைப்பது?

முதலில் கொள்ளு மற்றும் இட்லி அரிசியைத் தனித் தனியாக 6 மணிநேரம் வரை நீரில் ஊற வைக்க வேண்டும். அரிசி ஒரு மணி ஊறியதும் அதனுடன் வெந்தயம் சேருங்கள். பின்னர் அரிசியையும், கொள்ளுவையும் தனித்தனியாக வடித்தெடுத்து மென்மையாக அரைத்துக்கொள்ளுங்கள். உப்புச் சேர்த்து கலவைகளை ஒன்றாக்கி 6 மணிநேரம் புளிக்க வையுங்கள். பின்னர் இட்லியாக அவித்தெடுத்துப் பரிமாறுங் கள்.

நட்சத்திரா

# ஏன்...? எப்படி...?

15



# கலவரங்களின்போது தமிழரின் சொத்துகள் ஏன் அழிக்கப்பட்டன...?

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தமிழ் வியாபாரிகள் சிங்களவர்கள் மத்தியில் நிலைகொண்டு மிக நீண்ட காலமாகத் தமது வியாபார நடவடிக்கைகளை மேற்கொண்டனர். பெரும்பாலான சிங்கள ஊர்களில் சுருட்டுக்கடை என்ற பெயரிலாவது யாழ்ப்பாணத் தமிழரின் கடைகள் இருந்தன. அவ்வூர் மக்களும் இந்தக் கடைகளில் பொருள் களை வாங்குவதில் ஆர்வம் காட்டினர். அவ்வாறு நல்லுறவு பேணிய சிங்கள மக்கள் அடுத்தடுத்து நடந்த கலவரங்களின்போது ஏன் அந்தக் கடைகளைக் குறிவைத்து உடைத்தார்கள்? கொள்ளையடித்தார்கள்? தீயிட்டுக்கொளுத்தினார்கள்?

இந்தக் கடைகளில் சாதாரண சிங்கள மக்கள் கடன் வாங்குவது வழக்கம். அவர்களின் வறுமை காரணமாக அந்தக் கடன்களைத் திருப்பிச் செலுத்த முடியாத நிலை ஏற்படும்போது அவர்களுடன் நேரடியாகச் சண்டை பிடிக்க விரும்பாத தமிழ் முதலாளிமார் அங்குள்ள காவல்துறையினர் மற்றும் ஊர்ச் சண்டியர்களுக்குச் சாராயம் வாங்கிக் கொடுத்துக் கடன் மீளளிப்புச் செய்யாதவர்களை அச்சுறுத்தினர். இதனால் அந்த மக்கள் தம்மிடமிருந்த ஆடு, மாடு, வேறு வாழ்வாதாரப் பொருள்கள் எனப் பலதையும் அறாவிலைக்கு விற்றுச் சிங்களச் சண்டியர்களுக்கும் காவல்துறையினருக்கும் பயந்து கடனை மீளளிப்புச் செய்யவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

இதில் தமிழ் முதலாளிகளுடன் நேரடியாகச் சண்டை பிடிக்கும் வாய்ப்பு அவர்களுக்கு இருக்கவில்லை. அதனால் தமது ஆத்திரத்தைத் தீர்ப்பதற்குத் தருணம் பார்த்துக் காத்திருந்தார்கள்.

இந்தச் சூழலில் 1977, 1983 இனக்கலவரங்கள் அரங்கேறின. இதன்போது தமது ஆத்திரத்தைத் தமிழ் வியாபாரிகள் மீது காட்டியதே இனக்கலவரத்தில் தமிழரின் சொத்துகள் அழிக்கப்படக் காரணமாகியது. அவ்வாறு மக்கள் திரண்டு எழுந்தபோது ஏற்கனவே தமிழ் முதலாளிகளுக்குப் பக்க பலமாக நின்ற சண்டியர்களோ காவல்துறையினரோ தமிழ் முதலாளிகளைக் காப்பாற்ற வரவில்லை. ஏன் சிங்கள மக்கள் அப்படிச் செய்தார்கள் என்ற காரணம் பலருக்குத் தெரிவதில்லை. இந்த விடயங்களைத் தமிழ் முதலாளிகளும் வெளியே சொல்வதில்லை. இந்த இனக்கலவரங்களில் தமிழருக்கு ஏற்பட்ட பாதிப்புகளைத் தமிழ் அரசியல்வாதிகள் தமது பரப்புரைக்கு முக்கியமான மூலதனமாக்கிக் கொண்டார்கள்.



# ஜெயமோகனை உலகறியச் செய்யவேண்டும்

அ.முத்துலிங்கம்

சில வருடங்களுக்கு முன்னர் ஜெயமோகன் கனடா வந்திருந்தபோது நான் அவரை 'ஜகர்னட்' (JUGGERNAUT) எனக் குறிப்பிட்டேன். பிரம்மாண்டமான, நிறுத்த முடியாத விசை என்று பொருள். ஜெகந்நாதர் என்ற வார்த்தையிலிருந்து ஆங்கிலத்துக்குப் போன சொல் இது. பூரி ஜெகந்நாதருடைய ரத யாத்திரை 12ஆம் நூற்றாண்டிலிருந்து பிரபலமானது. தேர் புறப்பட்டால் பெரும் விசையுடன் நிற்காமல் செல்லும். அதைக் குறித்துத்தான் அந்தச் சொல் உருவானது என ஆங்கில அகராதி சொல்கிறது.

தொடக்கத்திலிருந்து ஜெயமோகனின் எழுத்து அப்படித்தான் இருக்கிறது. அவர் 'வெண்முரசு' நாவலைத் தொடங்கியபோது பலர் அந்த முயற்சி பாதியில் நின்றுவிடும் என்றே எதிர்பார்த்தார்கள். ஆனால், ரதம் நிற்கவில்லை. தொடர்ந்து 6 வருடம் 7 மாதங்கள் எழுதப்பட்டு 26.000 பக்கங்கள் எட்டப்பட்ட பின்னர், அனைத்துலகிலும் படைக்கப்பட்ட ஆகப் பெரிய நாவலாக வெண்முரசு, நிறைவுக்கு வந்தது. இந்த நீண்ட ஓட்டத்திற்கு பின்னர் ஜெயமோகன் ஓய்வெடுப்பார் எனப் பலர் நினைத்தார்கள். ஆனால், தொடர்ந்து ஒரு நாளைக்கு ஒன்று, இரண்டு என நூறு சிறுகதைகள் எழுதினார். பின்னர் நாவல்கள், குறுநாவல்கள் என ஓயாமல் எழுதிய வண்ணமே இருக்கிறார்.

ஜெயமோகனை நான் அறிந்தது கடிதம் மூலம்தான். நான் அப்பொழுது ஆப்கானிஸ்தானில் வேலை பார்த்துக்கொண்டிருந்தேன். என்னுடைய கதை ஒன்று அந்த நாட்டின் பின்னணியில் 'இந்தியா டுடே'யில் பிரசுரமானது. ஜெயமோகன் அதுபற்றி எழுதினார். அவருடைய கதைகள் வெளியானால் நான் அவருக்கு எழுதுவேன். ஒரு வித்தியாசம், அவருடைய கடிதம் நாலு பக்கத்துக்குக் குறையாமல் இருக்கும். என்னுடையது அரைப் பக்கத்தைத் தாண்டாது. அவை ஆனந்தமான நாட்கள்.

அப்பொழுதுதான் மின்னஞ்சல் வசதி தமிழில் வந்திருந்தது. ஒரே கொண்டாட்டம். தமிழில் 'இ' எழுத்து வராது. ஆகவே அந்த எழுத்து வராத வார்த்தைகளாகப் பார்த்து ஒருவருக்கு ஒருவர் எழுதுவோம். எனக்கு பகல், அவருக்கு இரவு ஒரு மணி, இரண்டு மணியாக இருக்கும். அவர் எழுப்பிய ஒரு கேள்வி நினைவுக்கு வருகிறது. 'கடைசியாக கூட்டுக்கு வரும் பறவை வென்றதா? தோற்றதா?' இந்த விவாதம் தொடர்ந்தது. கடைசி வரை விடை கிடைக்கவில்லை. ஒருகட்டத்தில் அருண்மொழி அவரிடம் 'போய்த் தூங்குங்கள்' என்று கடைசி எச்சரிக்கை விடுவார். அப்பொழுது ஜெயமோகனுக்கு வாசகர்கள் குறைவு. ஆகவே முழு ராச்சியத்தையும் நான் கைப்பற்றியிருந்தேன். ஒருமுறை கடிதத்தில் அவர் முழுச் சிறுகதை ஒன்றை எழுதி அனுப்பிவிட்டார். உண்மைக் கதை. தேவ கடாட்சம் என்ற ரவுடி பற்றியது. அந்தக் கதை இன்றுவரை பிரசுரமாகவில்லை என்றே நினைக்கிறேன்.

**வெண்முரசில் 1000 பக்கங்களாக விரிந்திருக்கும். நூற்றுக்கணக்கான புது உவமைகள். ஓர் உவமை மீண்டும் பயன்படுத்தப்பட்டது கிடையாது. பல நூறு புதிய சொற்களும், சொல் தொடர்களும் உருவாக்கப்பட்டிருக்கின்றன. பிறவிநூல், தீச்சொல், அறப்புதல்வி, பிழையீடு, மொழி மீட்சி, நீராட்டறை, மணத்தன்னேற்பு என்று சொல்லிக்கொண்டே போகலாம்.**

வெண்முரசு கொடுத்த ஆச்சரியங்கள் கணக்கில் அடங்கா. வியாச மகாபாரதத்தில் 50 பக்கம் வரும் பகுதி, வெண்முரசில் 1000 பக்கங்களாக விரிந்திருக்கும். நூற்றுக்கணக்கான புது உவமைகள். ஓர் உவமை மீண்டும் பயன்படுத்தப்பட்டது கிடையாது. பல நூறு புதிய சொற்களும், சொல் தொடர்களும் உருவாக்கப்பட்டிருக்கின்றன. பிறவிநூல், தீச்சொல், அறப்புதல்வி, பிழையீடு, மொழி மீட்சி, நீராட்டறை, மணத்தன்னேற்பு என்று சொல்லிக்கொண்டே போகலாம். வியாசர் சொல்லாமல்விட்ட பல தகவல்கள் கிடைக்கின்றன. திருதராஷ்டிரன் என்ன உணவருந்தினான்? கோதுமை அப்பமும், பருப்பு மாமிசம் சேர்த்த கூட்டும். எப்படிப்பட்ட படைக்கலன்களை பயன்படுத்தினார்கள்? 12,000 அம்புகளை நொடியில் செலுத்தக்கூடிய பொறிவிற்கள் தயார் நிலையில் இருந்திருக்கின்றன. இளமையிலேயே வளைத்துக் கட்டப்பட்டு வளர்ந்த மூங்கில் விற்கள் மேல் அமைக்கப்பட்ட வண்டிகள். சாலையில் சக்கரங்கள் ஏற்படுத்தும் அதிர்வுகள் வண்டியில் பயணிப்பவர்களை அடைவதே இல்லை. இப்படி பலவிதமான தொழில்நுட்ப உச்சங்களைப் பற்றிய விவரங்கள் வெண்முரசில் கிடைக்கின்றன.

நான் பாகிஸ்தானிலும் பின்னர் கென்யாவிலும் அவருடன் தொடர்பில் இருந்தேன். 'விஷ்ணுபுரம்' வெளிவந்த பிறகு அவர் வாழ்க்கையில் பெரும் திருப்புமுனை ஏற்பட்டது. முதல் 20 பக்கத்தைப் படித்துவிட்டு புத்தகத்தைக் கீழே வைத்துவிடுவேன்.

## ஜெயமோகனை ...

பிரமிப்பு தாங்க முடியவில்லை. முடிந்துவிடுமோ எனப் பயந்துகொண்டு மெதுமெதுவாக வாசித்தேன். அற்புதமான நாவல் என்று கண்டுபிடித்த முதல் பத்துப் பேர்களில் நானும் ஒருவனாக இருப்பேன். கனடாவில் இருந்து கடிதம் எழுதினேன். அவர் ஒரு கேள்வி கேட்டார் 'கென்யா முத்துலிங்கமும் நீங்களும் ஒருவரா?' 'ஓம்' என்றேன். பின்னர் கனடாவுக்கு வந்தார். அவருடைய முதல் வெளிநாட்டுப் பயணம் என்பதால் இருவருக்கும் மறக்க முடியாத நாட்கள். நயாகரா அருவியையும், இலைகள் நிறம் மாறும் அதிசயத்தையும் பார்த்து சிறு குழந்தைபோல ரசித்தார். அப்பொழுது மீசை வைத்து இளம் நடிகர்போலவே இருப்பார். வெளிநாட்டவர்களுக்கு அறிமுகம் செய்யும்பொது 'தமிழில் நோபல் பரிசு பெறப்போகும் எழுத்தாளர்' என்று அப்போதே கூறினேன். அவர் வருகை ஞாபகமாக தபால் தலை ஒன்று வெளியிட்டு அதை ஒட்டி பல கடிதங்களை இந்தியாவுக்கும் வெளி நாட்டு நண்பர்களுக்கும் அனுப்பிவைத்தோம்.

மாபெரும் படைப்பான வெண்முரசின் தொடக்கத்திலும் நிறைவிலும் எனக்கு ஒரு தொடர்பு உண்டு. 2013 மார்கழியில் வெண்முரசு அறிவித்தல் வந்தபோது நான் ஜெயமோகனுக்கு கடிதம் எழுதினேன். 'இது நியாயமா? இதை முடிக்கும்போது நான் உயிருடன் இருப்பேனா தெரியாது.' ஆறு வருடம் 7 மாதம் தொடர்ந்து எழுதினார். கடைசி அத்தியாயம் எழுதி அவர் ஓய்ந்த நாள் 13 ஜுலை 2020. தொலைபேசியில் அவரை அழைத்து வாழ்த்தினேன். அன்றுதான் கண்ணன் பிள்ளைத் தமிழ் எழுதி வெண்முரசை அழகான நிறைவுக்குக் கொண்டுவந்திருந்தார். அவர் மனதிலே பூரண திருப்தியும் அமைதியும் நிலவிய நேரம்.

வியாசர் பாரதம் சொல்லச் சொல்ல, விநாயகர் ஒரு தந்தத்தை முறித்து கையை எடுக்காமல் மேரு மலையில் எழுதினார் என்பது ஐதீகம். நாளுக்கு ஒரு அத்தியாயம் என்ற முறையில் நிறுத்தாமல் எழுதி முடித்தது சாதனை இல்லாமல் வேறு என்ன? அது மாத்திரமல்ல, வியாச பாரதத்தை நீட்டியும் அகலித்தும் ஆழமாக்கியும் எழுதப்பட்டது இது. பல மடங்கு பெரியது. வியாசரே பிரமித்துப்போகும் அளவுக்குப் புதிய தகவல்களைக் கொண்டது.

இதிலே உள்ள அற்புதம் என நான் நினைப்பது முன்னரே அறிவித்துவிட்டு விண்கலம் அனுப்புவதுபோல 10,000 வாசகர்கள் வாசித்து அதன் பாதையைத் தொடர தினமும் எழுதிப் பதிவிட்டது தான். கம்பருக்கோ, வால்மீகிக்கோ, வியாசருக்கோ எழுதியதை மீண்டும் சரிபார்த்து திருத்தும் வாய்ப்பு இருந்தது. இங்கே அது கிடையாது. எழுதியது எழுதியதுதான். முன்னர் எழுதியதைப் பின்னர் புத்தகமாக்குவதுதான் மரபு. இது புத்தகமாகவே எழுதப்பட்டது. முன்னுக்குப் பின் முரண் இல்லை. அசுர சாதனை, மனிதப் பிரயத்தனத்துக்கு அப்பாற்பட்டது என்றுதான் சொல்ல வேண்டும்.

கனடாவில் நோபல் பரிசு பெற்ற எழுத்தாளர் அலிஸ் மன்றோவை நான் நேர்காணல் செய்திருக்கிறேன். இவரை 'சிறுகதைகளின் அரசி' என்று சொல்வார்கள். நாவல்களுக்கு நோபல் பரிசு கொடுப்பார்கள். ஆனால் சிறுகதைகள் மட்டுமே எழுதி நோபல் பரிசு பெற்ற ஒரே எழுத்தாளர் இவர்தான். ஒரு சிறுகதை எழுத 6 - 8 வாரங்கள் எடுப்பதாக இவர் என்னிடம் சொல்லியிருக்கிறார். ஒருமுறை ஆறு மாதம் தொடர்ந்து எழுதிய சிறுகதை ஒன்றை அப்படியே தூக்கி வீசிவிட்டார். அதனுடைய அடிநாதம் சரியாக அமையவில்லையாம். சில சிறுகதைகளை முடிக்க முடியாமல் துண்டு துண்டாக வெட்டி வேறு சிறுகதைகளுக்குப் பயன்படுத்தியிருக்கிறார். 'சிறுகதை அரசி' 15 தடவைக்கு மேல் தன் படைப்பைத் திருத்தியிருக்கிறார். இந்தப் பின்னணியில் பார்த்தால் நாளுக்கு ஒன்று என தொடர்ந்து 100 சிறுகதைகள் படைத்த ஜெயமோகனுடைய சாதனையை எதனுடன் ஒப்பிடுவது? இவருடைய சிறுகதைகள் சாதாரணமானவை அல்ல. அவை எல்லாமே உலகத் தரத்தை மேலும் ஒரு படி உயர்த்தக் கூடியவைதான்.

இங்கேதான் நாம் பாரதி சொன்னதை நினைத்துப் பார்க்கவேண்டும். 'மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள் சொல்வதிலோர் மகிமை இல்லை; திறமான புலமையெனில் வெளிநாட்டோர் அதை வணக்கஞ் செய்தல் வேண்டும்.' பாரதிக்கு இருந்த பெரும் ஆதங்கம் இதுதான். அவருடைய எழுத்து வெளி உலகத்திற்குப் போய்ச் சேரவில்லை. புதுமைப்பித்தனின் படைப்புகளை உலகம் அறியவில்லை. அதற்கான முயற்சிகளையும் பெரிதாக ஒருவரும் முன்னெடுக்கவில்லை என்பதுதான் துயரமான உண்மை.

700 வருடங்களாக கல்கத்தா நூலகம் ஒன்றில் கவனிப்பாரற்று கிடந்த பாரசீக கவிதைப் புத்தகம் ஒன்றை எட்வார்டு ஃபிட்ஸ்ஜெரால்டு என்பவர் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். இன்று உமர் கயாம் உலகம் முழுக்க கொண்டாடப்படுவதற்கான காரணம் அந்த மொழிபெயர்ப்புதான். இஸ்மெயில் காதரே எனும் அல்பேனிய எழுத்தாளர் அந்த மொழியில் ஒரு நாவல் எழுதினார். அல்பேனிய மொழி பேசுவோர் உலகத்தில் முப்பது லட்சம் மக்கள்தான். நாவலை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்க ஆள் கிடைக்கவில்லை. ஆகவே நாவலை முதலில் பிரெஞ்சில் மொழிபெயர்த்து பின்னர் ஆங்கிலத்தில் மொழிமாற்றினார்கள். அந்த நூலுக்கு சர்வதேச 'புக்கர் விருது' வழங்கப்பட்டது. நோபல் விருதுக்கு அடுத்தபடியாகக் கொண்டாடப்படும் விருது அது.

ஜெயமோகன் இனி என்ன செய்ய வேண்டும் என்று பலரும் பல கருத்துகளைச் சொல்கிறார்கள். விவாதிக்கிறார்கள். அவர் பல தலைமுறை வேலையைச் செய்துவிட்டார். 10 பேராசிரியர்கள், 20 எழுத்தாளர்கள், 30 பல்கலைக்கழகங்கள் செய்ய வேண்டிய பணியை அவர் தனியொருவராக செய்து முடித்திருக்கிறார். பாரதியார் சொன்னார், திறமான புலமையெனில் வெளிநாட்டோர் அதை வணக்கம் செய்தல் வேண்டும் என்று. இன்னமும் உலகம் இலியட்டையும், ஒடிசியையும், ஏனிட்டையும் சேக்ஸ்பியரையும் கொண்டாடுகிறது. ஜெயமோகனின் படைப்புகளுக்கு முன்னர் இவை எல்லாம் மங்கிப்போய் நிற்கின்றன. இவருடைய படைப்புகளை வெளிநாட்டோர் கொண்டாடவேண்டிய நாள் வர வேண்டும். அப்பொழுதுதான் தமிழுக்கு வெற்றி.

'வில்லாளரை எண்ணில் விரற்கு முன் நிற்கும் வீரன்' என்று இந்திரஜித்தைக் கம்பர் வர்ணிக்கிறார். ஒன்று, இரண்டு, மூன்று என விரல்களை எண்ணும்போது வரும் முதலாவது என்ற அர்த்தமில்லை. விரற்கு முன் நிற்பவர், அதாவது ஒன்று, இரண்டு என எண்ணத் தொடங்கு முன்பே நிற்பவர் ஜெயமோகன். உலகப் படைப்பாளிகளில் விரற்கு முன் நிற்பவர்.

பிரம்மாண்டமான நிறுத்த முடியாத விசையாக ஜெயமோகன் தமிழுக்குக் கிடைத்திருப்பது பெரும் வரம். உலக மகா படைப்பான வெண் முரசை நிறைவேற்றிய பின்னரும் தொடர்ந்து எழுதியபடியே இருக்கிறார். எத்தனை விசையோடும் வீச்சோடும் எழுதியும் என்ன பிரயோசனம்? அவருக்கு மலர் வெளியிடுவதோடு கடமை முடிந்ததா? அவரது படைப்புகளை வெளியுலகத்துக்கு எடுத்துச் செல்ல வேண்டிய கடமை உள்ளது. வேறு யாரும் செய்யப்போவதில்லை. நாம்தான் செய்ய வேண் டும். அது நாம் தமிழுக்கு செய்யும் சேவை அல்ல. உலகத்துக்கு செய்யும் தொண்டு!

ஏப்ரல் 22, ஜெயமோகன் பிறந்த நாள். ஜெயமோகனின் 60வது வயது தருணத்தை ஒட்டி வெளிக்கொண்டுவரப்படும் சிறப்பிதழுக்காக அ.முத்துலிங்கத்தால் எழுதப்பட்ட கட்டுரை இது. ஜெயமோகன் பிறந்த நாளை ஒட்டி வெளியிடப்படுகிறது.

---

# எமையறிதல் 55

### ஐயங்கொண்டான் சுவாமிகள்

உண்மையில் ஒன்றுமே தெரியாது என்பதுதான் தெரிந்து வைத்திருக்கிற ஒரே உண்மை. தெரியாது என்பதைத் தரக்குறைவாக எண்ணுவதை விடவும் தெரியும் என்பது அதிகம் தரக்குறைவானது என்பதை ஏற்றுக்கொள்ளும் வரை அலைவதைத் தடுக்கவே முடியாது. உண்மையை ஏற்றேயாக வேண்டும். மனம் என்கிற குழப்பவாதிதான் அதையும் தடுத்துக்கொண்டிருக்கிறது.

ஏற்றுக்கொள்ளுதல் என்பது எமக்கு பிரச்சினையாகத்தான் இருந்துவருகிறது. சாதகமான அல்லது பாராட்டுப்பெற்ற அல்லது பெறக்கூடிய விடயங்களை ஏற்றுக்கொள்கிறோம். அதையே சலிப்பின்றிச் சொல்லியும் (புழுகியும்) திரிகிறோம். நான் திட்டமிட்டேன். நான் செய்தேன். நானே முடித்தேன் என்றவாறாக எனக்கானதாகவே ஆக்கிக்கொள்கிறேன். எனது திட்டமிடல் எனது உழைப்பு எனது வெற்றி என்றவாறானவை எனதா கவே இருக்கட்டும். அவை வெறுமனே என்னால் மட்டுமே சாத்தியமாகிற்றா? அவ்வாறானதொன்றோ பலவோ பிறரால் சாத்தியமாக்கப்படவே இல்லையா? முடியாதா?

இதுவே எமக்கு பிரச்சினைகளை ஏற்படுத்துகின்றது. நாம் பிறரது கவனத்தைப் பெறவிழைகிறோம். பாராட்டைப் பெற முயல்கிறோம். எம்மை அதிதிறமைசாலிகளாகக் காட்ட விரும்புகிறோம். இப்போது எமது தூக்கம் தொலையத் தொடங்குகிறது. எமது வேலையை பிறர் எவ்வாறு மதிப்பிடுவர்? எவ்வாறு பார்ப்பர்? என்ற ஐயம் எழுவது தவிர்க்க முடியாததாகிறது. எம் மீது அல்லது என் மீது சந்தேகம் எழும்போது எப்படி நிம்மதி என்கிற ஒன்று கிட்டும்? திருப்தி என்கிற ஒன்று எட்டாக்கனியாகவே இருந்துவிடுகிறது.

மாறாகப் பாதகமான விளைவுகள் அல்லது பொருத்தமற்ற விளைவுகள் கிட்டும்போது நானே அல்லது நாமே என்கிற உரிமைகோரல் நிகழ்கிறதா? முயல்கிறோமா? இப்போதும் பிறர் என்ன நினைப்பார்கள் என்கிற ஒரு உறுத்தல் தவிர்க்கவியலாதபடி எழவே செய்கிறது. இது உள்ளே குடையத் தொடங்குகிறது. இப்போது தவறுக்கான காரணத்தை அறிவதைவிட அது கிரகக் கோளாறா? சகுனப் பிழையா? காலப்பிழையா? முன்பிறவிப் பயனா? என்பன போன்ற கற்பிதங்களிலும் கூட இருந்தோரிலும் ஐயமுறத் தொடங்கிப் புலம்பித் தவிக்கிறோம்.

வெற்றியைக் கண்களை மூடிக்கொண்டு உரிமைகோரி ஏற்றுக்கொள்ள முடிந்த எம்மால் தோல்வியை மட்டும் அவ்வாறு செய்ய முடிவதில்லை. ஏன்? வெற்றி எமக்கானதெனில் தோல்வியும் எமக்கானதே என்கிற பக்குவம் கைவரவேண்டும். அவ்வாறு கைவராமைக்கான காரணம் என்ன? வெற்றி எதிர் தோல்வி என்பதைவிட சாத்தியப்பட்டது எதிர் சாத்தியப்படாதது என்று கொள்ளுதல் சிறப்பாக இருக்கலாம். வெற்றி தோல்வி என்பவை கூட வெறும் கற்பனையான எல்லைப் பரப்புகள் தான் என்பதை கவனத்தில் கொள்ளவேண்டும்.

சாத்தியமானது என்னால்தான் என்றால் சாத்தியமற்றதும் என்னாலேயே என்பதுதான் யதார்த்தமானது. அந்த யதார்த்தத்தை ஏற்றுக்கொள்ளத் தயங்குகின்றோம் என்பதுதான் பிரச்சினையே. நடந்து முடிந்ததை கடந்து போகவோ ஏற்றுக்கொள்ளவோ முடியாதவொரு மனமே எம்மிடமிருக்கிறது. அதுவே தானும் குழம்பி எமது செயலொழுங்குகளையும் குழப்பி தத்தளிக்கிறது. அலைபாய்கிறது. நாம் துவண்டுபோகிறோம்.

சாத்தியப்படாதது போலவே பிறரது எண்ணம் அபிப்பிராயம் கருத்து போற்றுதல் தூற்றுதல் என எல்லாவற்றையும் சாத்தியமானவற்றிற்கும் பொருத்துகிறோம். அதிலிருந்து எம் மீதான அதீத சந்தேகத்தை நாமாகவே ஏற்படுத்துகிறோம். அது எம்மிடமிருந்து நிம்மதியை திருப்தியை எல்லாம் களவாடிப்போகிறது. ஆகமொத்தம் எமது சமநிலை குழம்பிப்போகிறது. காரணம் எமது மனமேயன்றி வேறில்லை.

மனம்தான் எல்லாவிதமான பாத்திரத்தையும் ஏற்கிறது. அதனது திருப்திதான் வெற்றி என்கிற மாயை. அதனது திருப்தியீனம்தான் தோல்வி என்கிற மாயை. மாயைதான் பிரச்சினைகளுக்குக் காரணமாகிறது. மாயையைத் தோற்றுவித்தது மனம்தான். மனமே பிரச்சினையின் ஊற்று. பாதிக்கப்படுவதும் மனம்தான். சிக்கல்களை உருவாக்கிச் சிக்குப்படுவதும் மனம்தான். எப்படித் தீர்வு காண்பது? சிந்திப்போம்.



# சித்திரைக் கஞ்சி

கோபிநாத்

சித்திரை பிறந்ததைக் கொண்டாடுவதைக் காட்டிலும் சித்திரையில் வருகின்ற முழுநிலவைக் கொண்டாடும் தமிழர்களே அதிகம். கொண்டாட்டம் என்று சொல்வதைவிட தமிழர்களின் மரபுவழி வரும் கடைப்பிடிப்பு என்று சொல்லலாம். வருடப் பிறப்பாக தை முதல் நாளை - தைத்திருநாளைச் சொல்வதே பொருத்தமாக இருக்கும். சிங்கள - தமிழ்ப் புத்தாண்டு என்று கூறப்படுகின்ற சித்திரைப் புது வருடத்தைவிடவும் பொங்கலுடன் தொடங்குகின்ற ஆண்டையே தமிழர்கள் தமது புதிய ஆண்டின் தொடக்கமாக அதிகம் கருதுகிறார்கள். இறந்த தமது தாயை நினைவுகூர்ந்து சித்திரை முழுநிலவன்று விரதம் பிடிப்பதால்தான் சித்திரை பிரபலம் அடைகிறது.

### முழுநிலா விரதம்

இறந்த தந்தையரை நினைவுகூரும் முகமாக ஆடி மாதத்தில் வருகின்ற அமாவாசை தினத்தன்று விரதம் பிடிப்பதைப்போல இறந்த தமது தாயை நினைவுகூர்ந்து சித்திரை மாதத்தில் வருகின்ற முழுநிலவன்று விரதம் இருக்கிறார்கள் தமிழர்கள். இதைப் பன்னெடுங்காலமாகக் கடைப்பிடித்து வருகிறார்கள். மூதாதையரை வழிபடும் - நினைந்துருகும் நாளாகக் கருதப்படத்தக்க சித்திரைப் பௌர்ணமியன்று தம்மை ஈன்று இறந்த தாயை நினைத்து காலையில் விரதம் இருந்து மதியத்தில் பலவித மரக்கறி உணவுகளையும் சமைத்துத் தாய்க்கு (உருவப்படத்துக்கு - உருவப்படம் இல்லாதவர்கள் வெறுமனேயும், தெய்வப் படங்களுக்கு முன்னாலும்) படையல் செய்து, காக்கைக்கு அன்னமிட்டுப் பின்னர் தாமும் தமது குடும்பத்தினருமாகச் சேர்ந்து உணவுண்கிறார்கள். தமது முன்னோரை - மூதாதையரை நினைந்துருகும் பட்டியலுக்குள் கொள்ளத்தக்க இந்த விரத தினத்தன்று அதற்குச் சமதையாக ஆலயங்களில் கஞ்சி காய்ச்சிப் பரிமாறும் - பருகும் வைபவம் ஒன்றும் நடப்பது சிறப்பு.

### சித்திரைக் கஞ்சி

சித்திரைக் கஞ்சி என்று சொல்லப்படுகின்ற இந்த வைபவம் தீவுப்பகுதி வாழ் மக்கள் மத்தியில் தற்போதும் பிரபலமாக நடந்தேறி வருவது கவனிக்கத்தக்கது. இந்த நாளில் இந்து ஆலயங்களில் சிவப்புப் பச்சை அரிசியில் காய்ச்சப்பட்ட பாற் கஞ்சியைப் பரிமாறி மகிழ்வார்கள். இந்தத் தினத்தன்று ஆலயம் வித்தியாசமாக அலங்கலரிக்கப்பட்டுமிருக்கும். அதாவது சித்திரையில் பூத்துக் காய்க்கின்ற நுங்கு, ஈஞ்சு ஆகியவற்றைக் குலை குலையாக வெட்டி வந்து ஆலயத் துண்களை அலங்கரித்துக் கட்டியிருப்பார்கள்.

அதைவிட பாற் கஞ்சி என்றில்லாது குழந்தைகள், சிறுவர்கள் விரும்பும் விதத்தில் இனிப்பான (சீனி, கற்கண்டு, சர்க்கரை சேர்த்த) கஞ்சியையும் பெரியவர்கள் விரும்பும் விதத்திலான உறைப்பு (வெங்காயம், பச்சை மிளகாய்) சேர்த்த கஞ்சியையும் காய்ச்சிப் பரிமாறி மகிழ்வார்கள். சித்திரைக் கஞ்சியைப் பருகுவதற்குச் சிறியோர் முதல் பெரியவர்கள் வரை மாலைவேளையில் ஆலயத்தில் கிண்ணங்கள், பாத்திரங்கள், பிளாக்களுடன் (பனை யோலையில் பிடிக்கப்படும் பாத்திரம்) கூடியிருப்பார்கள். சித்திரை மாதத்தில் வருகின்ற சித்திரைக்கஞ்சி வைபவம் இப்படியாகச் சிறுவர் முதல் பெரியவர்வரை ஓரிடத்தில் ஒன்றுகூடி அகமகிழும் நாளாகத் தீவுகளில் இன்றும் தொடர்வது சிறப்பான பாரம்பரியமாக இருக்கிறது.

**பாற்கஞ்சி என்றில்லாது குழந்தைகள், சிறுவர்கள் விரும்பும் விதத்தில் இனிப்பான (சீனி, கற்கண்டு, சர்க்கரை சேர்த்த) கஞ்சியையும் பெரியவர்கள் விரும்பும் விதத்திலான உறைப்பு (வெங்காயம், பச்சை மிளகாய்) சேர்த்த கஞ்சியையும் காய்ச்சிப் பரிமாறி மகிழ்வார்கள். சித்திரைக் கஞ்சியைப் பருகுவதற்குச் சிறியோர் முதல் பெரியவர்கள் வரை மாலைவேளையில் ஆலயத்தில் கிண்ணங் கள், பாத்திரங்கள், பிளாக்களுடன் (பனை யோலையில் பிடிக்கப்படும் பாத்திரம்) கூடியிருப்பார்கள்.**

## மின்சார...

பூர்த்தி செய்யப்படுகின்றது. தற்போது இந்த மூன்று நிலையங்களுமே உதிரிப்பாகப் பற்றாக்குறையால் பெரும் ஆபத்தை எதிர்கொண்டுள்ளன.

நிலையம் 2 மற்றும் 3 ஆகியவற்றில் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டிய பராமரிப்புப் பணிகள் கடந்த இரண்டு வருடங்களாக மேற்கொள்ளப்படவில்லை. நிலையம் ஒன்றின் பராமரிப்பு உடனடியாக மேற்கொள்ளப்படவேண்டும். இன்னும் ஒரு வருட காலத்திற்கு அதனையும் தள்ளிப் போட்டால் மூன்று நிலையங்களுமே ஒரே நேரத்தில் பாராமரிப்புக்கு உட்படுத்தப்படவேண்டியதாக இருக்கும். ஒரு நிலையத்தின் பராமரிப்பு வேலைக்கு மட்டும் 80 நாள்கள் தேவைப்படும் என்று நிலைய எந்திரிகள் இலங்கை மின்சார சபைக்கு எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

நாடு ஏற்கனவே டொலருக்குத் திண்டாடிக் கொண்டிருக்கும் நிலையில் போதிய அந்நியச் செலாவணி இல்லாமல் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள முடியாது என்றும் எந்திரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். உதிரிப்பாகங்களை இறக்குமதி செய்வதற்கும் பாராமரிப்புப் பணிகளுக்கான ஒப்பந்தங்களுக்கும் டொலர் அவசியம் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

நிலையம் 2இன் பராமரிப்புப் பணிகளுக்கான உதிரிப்பாகக் கொள்வனவுக்கும் பராமரிப்பு ஒப்பந்தச் செலவுக்கும் அமைச்சரவை ஏற்கனவே அனுமதி வழங்கிவிட்டபோதும் போதிய டொலர் அரசின் கையிருப்பில் இல்லாத காரணத்தால் அதனைச் செய்ய முடியாத இக்கட்டு நிலை ஏற்பட்டுள்ளது.

இதுவரை பெரும் உதிரிப் பாகங்களை மாற்ற வேண்டிய நிலையிலும் வழமையான பராமரிப்புக்கு ஊடாக இந்த நிலையங்கள் தொடர்ந்து இயக்கப்பட்டுக்கொண்டே இருக்கின்றன. இப்போது அந்த வழக்கமான பராமரிப்புக்கான உதிரிப் பாகங்களைக் கொள்வனவு செய்யக்கூட முடியாத நிலைமை ஏற்பட்டிருப்பதால் நிலையங்கள் எந்த நேரத்திலும் செயலிழந்து போகக்கூடிய ஆபத்து அதிகரித்திருக்கின்றது என்றும் எந்திரிகளின் எச்சரிக்கையில் கூறப்பட்டுள்ளது.

உதிரிப்பாகக் கொள்வனவுக்கு மட்டும் ஒரு கோடி 20 லட்சம் டொலர்கள் மற்றும் 2 லட்சத்து 70 ஆயிரம் யூரோக்கள் தேவையாக இருக்கின்றது. 91 லட்சம் டொலர்கள் தேவையாக இருக்கின்றது பராமரிப்பு ஒப்பந்தங்களைப் பூர்த்தி செய்வதற்கு.

"தேவையான உதிரிப்பாகங்கள் வந்து சேரவில்லை என்றால் மின் உற்பத்தி நிலையங்களின் செயற்பாடுகளை நிறுத்துவதைத் தவிர வேறு வழியில்லை" என்றும் எந்திரிகள் தெரிவித்தனர்.

## ரம்புக்கண...

அப்போது உறுதியளித்தார்.

சமிந்த குடும்பத்தின் அத்தியாவசிய எதிர்காலச் செயற்பாடுகளுக்காக ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் ஒரு தொகை நிதியையும் திருமதி சமிந்த விடம் வழங்கினார் சஜித். தேவைப்படும் எந்நேரத்திலும் ஐக்கிய மக்கள் சக்தியாகவும், எதிர்க்கட்சித் தலைவராகவும் அவர்களுக்காக முன்நிற்பார் எனவும் உறுதியளித்தார்.

இதேவேளை, சமிந்த சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்தின்போது காவல்துறையினரால் 35 ரவைகள் சுடப்பட்டுள்ளன என்றும் நான்கு ரி-56 துப்பாக்கிகளில் இருந்து இந்த ரவைகள் சுடப்பட்டுள்ளன என்றும் கேகாலை நீதிமன்றத்திற்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. ரம்புக்கன சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்தும் காவல்துறையின் சிறப்பு அணி இந்த அறிக்கையை நீதிவானிடம் முன்வைத்துள்ளது.

சம்பவம் தொடர்பில் வெள்ளிக்கிழமை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் விசாரணைக்கு முகம் கொடுத்த காவல் மா அதிபர் சி.டிவிக்ரமரட்னே, போராட்டக்காரர்களைக் கட்டுப்படுத்தத் துப்பாக்கிச் சூடு நடத்தும்படியான உத்தரவைத் தான் வழங்கவில்லை என்று தெரிவித்தார்.

செவ்வாய்க்கிழமை நடந்த ரம்புக்கண சம்பவத்தின்போது மக்கள் மீது சுடுவதற்கான உத்தரவை உதவிக் காவல் அத்தியட்சகர் சி.டபிள்யூ.சி.தர் மரத்னே மற்றும் மூத்த காவல் அத்தியட்சகர் கே.பி.கீர்த்தி ரட்னே ஆகியோரே துப்பாக்கிச் சூடு நடத்துவதற்கான உத்தரவை வழங்கியுள்ளார்கள் என்று பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் நாடா ளுமன்றத்தில் தெரிவித்திருக்கிறார்.

சம்பவத்தில் உயிரிழந்தவரான சமிந்தவின் இறுதிக் கிரியைகள் சனிக்கிழமை இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## கண்டறியாத கதைகள்

03



## சிறுவர்

யசோ மாமி

வணக்கம் மருமக்களே!

எல்லோரும் நன்றாகப் படிக்கிறீர்களா? பெற்றோரும் ஆசிரியர்களும் சொல்வதைக் கேட்டு நல்ல பிள்ளைகளாக இருக்கிறீர்களா? மகிழ்ச்சி.

இன்றைக்கு நாங்கள் காலநிலைகள் பற்றி அறிய இருக்கிறோம். நீங்கள் இருக்கும் நாட்டில் என்னவிதமான காலநிலை இருக்கிறது? மழைகாலம், கோடைகாலம் என்று நீங்கள் சொல்வது எனக்குக் கேட்கிறது. ஆம், அது உண்மைதான்.

சூரியன் எத்தனை மணிக்கு உதயமாகி எத்தனை மணிக்கு மறைகிறது? இலவசமாகப் பார்க்கக் கிடைக்கும் அந்தக் காட்சிகளை எல்லாம் எப்போதாவது நீங்கள் பார்த்திருக்கிறீர்களா? வானம் அப்போது மிக அழகாக இருக்கும். குறிப்பாக கடற்கரையில் நின்று இக்காட்சியினைப் பார்த்தால் வானம் மிக அழகாகத் தோன்றும்.




நீங்கள் பார்க்கும் அதே சூரியனைத் தான் உலகத்தில் இருக்கும் எல்லோரும் வெவ்வேறு நேரங்களில் பார்க்கிறபோதும் ஏன் பல்வேறு நாடுகளில் பல்வேறு விதமாகக் காலநிலைகளில் மாற்றங்கள் ஏற்படுகின்றன? இது பற்றி எங்களோடு நீங்கள் அறிந்தவற்றைப் பகிர்ந்துகொள்ளுங்கள்.

இன்றைக்கு நான் வாழும் பகுதியான சிட்னி நகரில் இருக்கும் கால நிலைகள் பற்றி அறிவோம். இங்கு நான்கு விதமான காலநிலைகள் உள்ளன. அவை இளவேனிற்காலம், கோடைகாலம், இலையுதிர்காலம், குளிர்காலம் என்பவையாகும்.

புரட்டாதி (செப்ரெம்பர்) தொடக்கம் கார்த்திகை (நவம்பர்) வரையுள்ள காலம் இளவேனில் (வசந்தகாலம்) அப்போது அளவான மழையும் அளவான குளிரும் அளவான வெய்யிலும் இருப்பதால் அப்போது மரங்கள் தளிர்க்கும், பூக்கள் பூக்கும், பறவைகள் முட்டையிட்டு குஞ்சு பொரிக்கும், வசந்தகால விழாக்கள் பல நடக்கும்.

அதன் பிறகு வருவது கோடை காலம். அது மார்கழி (டிசெம்பர்) தொடக்கம் மாசி (பெப்பிரவரி) வரையான காலம். அப்போது சூரியனின் சூடு அதிகமாக இருக்கும். மண் வரண்டு போயிருக்கும். மாலை நேரம் இரவு ஏழு மணி என்றாலும் பகலைப் போல வெளிச்சமாக இருக்கும். அதனால் இங்கு கடிகாரத்தை ஒரு மணிநேரம் பின்புறமாக நகர்த்தி வைத்துக் கொள்வார்கள். அதனால் இந்தக் காலத்தில் நமக்கு பகல் பொழுது அதிகமாக இருக்கும்.

அதன் பிறகு பங்குனி (மார்ச்) மாதத்தில் இருந்து வைகாசி (மே) மாதம் வரை இலை உதிர்காலமாகும். இந்தக் காலத்தில் மரங்களில் இருந்து இலைகள் வரண்டு உதிரத் தொடங்கும். இலைகளை நீங்கள் பச்சை அல்லது மஞ்சள் நிறங்களில்தான் அதிகம் பார்த்திருப்பீர்கள் அல்லவா? ஆனால் இங்கு இக்காலங்களில் இலைகள் பச்சையிலிருந்து மஞ்சள், செம்மஞ்சள், சிவப்பு என அழகழகான நிறங்களுக்கு மாறி நிலத்தில் உதிரத் தொடங்கும். மரங்களின் கீழே பல வண்ணங்களில் இலைகள் உதிர்ந்து கிடப்பதைப் பார்க்க மிக அழகாக இருக்கும்.

அதன் பிறகு ஆனி (ஜூன்) மாதத்தில் இருந்து ஆவணி (ஓகஸ்ட்) மாதம் வரை வருவது குளிர்காலம். இக்காலங்களில் சூரியன் வெளியே தெரிவது குறைவாக இருக்கும். மிகவும் குளிராக இருக்கும். விரைவில் இருட்டிவிடும். அதனால் எங்களுக்குப் பகல் நேரம் குறைவாக இருக்கும். நேரத்தை முன்னால் ஒரு மணி நேரம் நகர்த்தி வைத்து விடுவார்கள். அதனால் எங்களுக்கு உறங்கும் நேரம் அதிகமாகவும் பகல் பொழுது குறைவாகவும் இருக்கும். இக்காலங்களில் மரங்கள் எல்லாம் தம் இலைகளை உதிர்த்துவிட்டு கிளைகள் மட்டும் தெரியும் வண்ணம் காட்சி அளிக்கும். பெரும்பாலான உயிரினங்கள் தங்கள் கூட்டுக்குள்ளே அடங்கிக் கிடக்கும்.

சில நாடுகளில் குளிர்காலம் அதிகமாகவும் கோடைகாலம் குறைவாகவும் இருக்கும். சில நாடுகளில் கோடைகாலம் அதிகமாகவும் குளிர்காலம் மிகக் குறைவாகவும் இருக்கும்.

ஆனால் நீங்கள் வாழும் இலங்கை திருநாட்டில் காலை ஆறுமணிக்கு சூரியன் உதயமாகி மாலை ஆறுமணிக்கு சூரியன் மறையும் மழைக்காலமும் கோடைகாலமுமாக இருக்கும் அல்லவா.

இன்றைக்கு நான் உங்களிடம் ஒரு கேள்வி கேட்கப் போகிறேன். குளிர் அதிகமாக இருக்கும் 5 நாடுகளின் பெயரையும் வெப்பம் அதிகமாக இருக்கும் 5 நாடுகளின் பெயரையும், மழையும் வெய்யிலும் அதிகமாக இருக்கும் 5 நாடுகளின் பெயரையும் எழுதி அத்தோடு ஏன் அவ்வாறான மாற்றங்கள் ஏற்படுகின்றன என்றும் எழுதி நீங்கள் படிக்கும் பாடசாலை, உங்கள் வகுப்பு, வயது விவரங்களையும் குறிப்பிட்டு இந்த மாதம் முடிவதற்கு முன்பாக 0763983858 என்ற வட்ஸ்அப் இலக்கத்திற்கு அனுப்பி வைக்கிறீர்களா?

சரியான விடையைத் தரும் மருமக்களில் அதிஸ்ரசாலி ஒருவரின் பதில் பத்திரிகையில் பிரசுரமாவதோடு அதிஸ்ட சாலிகளில் ஒருவருக்கு ஒரு பரிசுப்பொருளும் காத்திருக்கிறது.

சிட்னிக் கரையிலிருந்து யசோமாமி.

# ஷெபாஸ் ஷெரீப்: அரசியல் ஆயுள் எதுவரைக்கும்?

ச.கோ.கிருஷ்ணன்

பாகிஸ்தானின் புதிய தலைமை அமைச்சராக சித்திரை (ஏப்ரல்) 11 அன்று பதவியேற்றுக்கொண்டார் பாகிஸ்தான் முஸ்லிம் லீக் (நவாஸ்) கட்சியின் ஷெபாஸ் ஷெரீப். நாடாளுமன்றத்தில் இம்ரான் கான் தலைமையிலான ஆட்சி பெரும்பான்மையை இழந்ததை அடுத்து அவருக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் வெற்றியடைந்தது. இதையடுத்து, 342 உறுப்பினர்களைக் கொண்ட பாகிஸ்தான் நாடாளுமன்றத்தில் 174 உறுப்பினர்களின் ஆதரவுடன் தலைமை அமைச்சராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார் ஷெபாஸ் ஷெரீப்.

**இரண்டாம் 'தலை'**

பாகிஸ்தானில் எஃகு வணிகத்தில் மிகப் பெரிய ஜாம்பவானான முகமது ஷெரீபின் இளைய மகன் ஷெபாஸ் ஷெரீப். பாகிஸ்தான் முஸ்லிம் லீக் கட்சியைத் தொடங்கியவரும் மூன்று முறை அந்த நாட்டின் தலைமை அமைச்சராகப் பதவி வகித்தவருமான நவாஸ் ஷெரீப் இவருடைய அண்ணன். லாகூரில் உள்ள அரசுக் கல்லூரியில் பட்டப் படிப்பை முடித்தவுடன் குடும்ப வணிகத்துக்குள் நுழை ந்து, அண்ணனின் வழியில் அரசியலிலும் தடம்பதித்தார். 1988இல் பஞ்சாப் மாகாண சட்டமன்றத் தேர்தலில் முஸ்லிம் லீக் கட்சி வேட்பாளராகப் போட்டியிட்டு வெற்றிபெற்றார்.

1997இல் பஞ்சாபின் முதல்வராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1999இல் தரைப் படைத் தளபதி ஜெனரல் பர்வேஸ் முஷரஃப் தொடங்கிய படைத்துறைப் புரட்சியின் மூலம், நவாஸ் ஷெரீப் அரசு கவிழ்க்கப்பட்டு, ஷெரீப் குடும்பம் சவுதி அரேபியாவில் தஞ்சம் புகுந்தது. 2007இல் தங்கள் மீது சுமத்தப்பட்ட ஊழல் குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படாததை அடுத்து, ஷெரீப் குடும்பம் மீண்டும் தாய் மண் திரும்பியது.

அடுத்த ஆண்டே மீண்டும் பஞ்சாப் முதல்வராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஷெபாஸ், தொடர்ந்து இரண்டு பதவிக் காலங்களை முழுமையாக நிறைவுசெய்தார். 2017இல் ஊழல் குற்றச்சாட்டுகளின் காரணமாகத் தலைமை அமைச்சர் பதவியை இழந்த நவாஸ் ஷெரீப், எந்த ஓர் அரசமைப்புப் பதவியிலும் நீடிக்கக் கூடாது என்று, அந்நாட்டு உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது. இதையடுத்து, பாகிஸ்தான் முஸ்லிம் லீக் கட்சியின் தலைவரானார் ஷெபாஸ் ஷெரீப்.

**அண்ணனின் விசுவாசி**

இதற்கு முன்பே பாகிஸ்தானின் தலைமை அமைச்சராவதற்கான வாய்ப்புகளை இரண்டு முறை நிராகரித்தவர் ஷெபாஸ் ஷெரீப். 1999இல் கார்கில் தோல்வியின் காரணமாகத் தரைப் படைத் தலைவர் பர்வேஸ் முஷரஃபை நீக்க அப்போதைய தலைமை அமைச்சரான நவாஸ் ஷெரீப் முயன்றுகொண்டிருந்தார். அப்போது ஷெபாஸைச் சந்தித்து, படையினரின் உதவியுடன் அவரைத் தலைமை அமைச்சராக்குவார் என்று கூறினார் முஷரஃப். அதற்கும் முன்பு 1992இல் ஷெபாஸ் நாடாளுமன்ற உறுப்பினரான புதிதில், நவாஸை நீக்கிவிட்டு அவரைத் தலைமை அமைச்சராக்க முயன்றார் அன்றைய அரச தலைவர் குலாம் இஷக் கான். தரைப் படை, அரச தலைவர் ஆகிய இரண்டு அதிகார மையங்களின் ஆசை வார்த்தைக்கும் அழுத்தத்துக்கும் அடிபணிய மறுத்துவிட்டார் ஷெபாஸ்.

அத்தோடு, 1995இல் ஷெபாஸைக் கைது செய்து, நவாஸுக்கு எதிரான ஊழல் வழக்கில் அவருக்கு எதிராகச் சாட்சி சொல்ல ஷெபாஸை வற்புறுத்தியது பெனாசிர் புட்டோ அரசு. அப்போதும் அண்ணனுக்குத் துரோகம் செய்ய மறுத்துவிட்டார் ஷெபாஸ் ஷெரீப்.

அண்ணன் - தம்பி முரண்பாடு எளிதில் வளர்ந்துவிடக்கூடிய அரசியல் களத்தில், முப்பதாண்டுகள் நீடித்தபோதிலும் எப்போதும் அண்ணனின் விசுவாசியாகவே நீடித்துவருகிறார் ஷெபாஸ் ஷெரீப். 2018இல் கட்சியின் தலைவர் பதவியை ஏற்கும்போது, “முகமது அலி ஜின்னாவின் வாரிசு என்று கருதத்தக்க ஒரே அரசியல் தலைவர்' என்று நவாஸை வானளாவப் புகழ்ந்தார்.

அதேநேரம், அரசியல் அணுகுமுறையில் அண்ணனை அப்படியே பின்பற்றுகிறவர் இல்லை என்பது அவரது முக்கியமான குணாம்சம். பாகிஸ்தானில், அரசுக்கு இணையான செல்வாக்கு மிக்க அதிகார மையம் படைத்துறை. தரைப்படையால் ஆட்சியை இழந்துள்ள நவாஸ், எப்போதும் படையினருடன் கடுமையான மோதல் போக்கையே கடைப்பிடித்து வந்துள்ளார். ஆனால், ஷெபாஸ் படையினரை எதிர்கொள்வதில் எப்போதும் மிதவாதப் போக்கை வெளிப்படுத்திவந்துள்ளார்.

**ஆட்சியில் விவேகி**

ஷெபாஸ் நடைமுறைவாத அணுகுமுறை கொண்ட, அதிரடியான நிர்வாகியாக அறியப்படுகிறார். லாகூர் மெட்ரோ பேருந்தை உள்ளடக்கிய பன்னடுக்குப் போக்குவரத்துத் திட்டம், மேம்பாலங்கள் என பஞ்சாப் மாகாணத்தின் உள்கட்டமைப்பு வளர்ச்சிக்கான மிகப் பெரிய திட்டங்கள் அவருடைய ஆட்சிக் காலத்தில் செயல்படுத்தப்பட்டவை. அரசுப் பாடசாலைகள், மருத்துவமனைகளுக்குத் திடீர் வருகை தருவது, அதிகாலை நேரத்தில் அதிகாரிகளு டனான கூட்டத்தை நடத்துவது, பின்னிரவு நேரத்தில் சமூக வலைதளங்களின் மூலம் அதிகாரிகளுக்குச் செய்தி அனுப்புவது என சுறுசுறுப்புடனும் நவீன அணுகுமுறையுடனும் செயல்படுகிறவராக அறியப்படுகிறார்.

ஆட்சிப் பொறுப்பேற்று அலுவலகத்துக்கு வந்த முதல் நாளே, அரசு அலுவலகங்களின் வார விடுமுறை நாட்களை இரண்டிலிருந்து ஒன்றாகக் குறைத்தும், காலை 10 மணிக்குப் பதிலாக காலை 8 மணியிலிருந்தே அரசு அலுவலகங்கள் தொடங்கும் என்றும் உத்தரவிட்டுத் தன் அதிரடி பிம்பத்தைத் தக்க வைத்துக்கொண்டுள்ளார். பொது இடங்களில் புரட்சிகரக் கவிதைகளைச் சொல்வது, மைக்குகள் கீழே விழும் அளவுக்குக் கைகால்களை அசைத்து உணர்ச்சிப் பெருக்குடன் பேசுவது உள்ளிட்ட நடவடிக்கைகள் ஷெபாஸ் மீதான நக்கல்களுக்கும் எள்ளல்களுக்கும் சமூக ஊடகங்களுக்கு வழிவகுத்துள்ளன.

அந்நிய நாடுகளுடன் ஒப்பீட்டளவில் நட்பார்ந்த

**அண்ணன் - தம்பி முரண்பாடு எளிதில் வளர்ந்துவிடக்கூடிய அரசியல் களத்தில், முப்பதாண்டுகள் நீடித்தபோதிலும் எப்போதும் அண்ணனின் விசுவாசியாகவே நீடித்துவருகிறார் ஷெபாஸ் ஷெரீப். 2018இல் கட்சியின் தலைவர் பதவியை ஏற்கும்போது, “முகமது அலி ஜின்னாவின் வாரிசு என்று கருதத்தக்க ஒரே அரசியல் தலைவர்' என்று நவாஸை வானளாவப் புகழ்ந்தார்**





சிந்தாமணி


# வாய் பிசகா...? தரக் குறைவா...?

பாணும் பருப்பும்...! பருப்புக்கறியுடன் பாணைச் சாப்பிடும்போது கிடைக்கின்ற ருசி எவ்வளவு அலாதியானது...? இதை இப்போது சொல்ல உங்களுக்குச் சிரிப்பு வரலாம்....! ஆனால் 20 வருடங்களுக்கு முன்பு இந்த நிலை இருக்கவே செய்தது. பருப்புக் கறியை விடுங்கள் சீனியு டன் பாணைச் சாப்பிட்டபோது...? சீனியையும் விடுங்கள், தேயிலைத் தேநீரில் பாணைத் தொட்டுச் சாப்பிட்டபோது கிடைத்த சுவை எவ் வளவு மேலானது...? இதுவும் 20 வருடங்களுக்கு முன்புதான். இப் போது நிலமை அப்படியில்லை. பர்கரும் பீட் சாவும் என்ற வடிவத்தில் பாணை உண்டால்தான் சுவை என்கிற நிலைக்கு நாம் வந்துவிட்டோம். ஏன்....? நமது நாக்கு ருசிக்குப் பழக்கப்பட்டு மரத்துப்போய்விட்டதா? பாண் ருசி சலிப்ப டைந்து விட்டதா? வாய் பிசகா...? அல்லது தற் காலத்துப் பாண் முன்னர்போன்று தரமில்லாமல் போய் ருசி குன்றிவிட்டதா...? இப்படிப் பல கேள் விகள் மூளையைக் குடையவே செய்கின்றன. பாண் மாத்திரமல்ல பாணைப்போல பல பொருள் பண்டங்களில் கடந்த 20 ஆண்டுகளுக்குள் பல மாற்றங்கள். காரணம்தான் என்ன?



**மணங்குன்றித் தரம் குறைந்த ரின்மீன்**

பேணியில் அடைத்துச் சந்தைக்கு வருகின்ற மீன் ரின்னை வாங்கி உடைத்தால் அன்று வீடு முழுதும் அதன் மணம் பரவியிருக்கும். கறியின் மணமும் அப்படித் தான். அதில் அடைக்கப்பட்டுவருகின்ற மீன்களும் நல்ல தசைப்பிடிப்பு டன் இருக்கும். ஆனால் இன்றோ மீன்ரின்களுக்குள் இருக்கின்ற நீர் வெறும் திரவமாக மணங் குன்றியதாகத் தெரிகிறது. அதற் குள் அடைத்துவரும் மீன் துண் டங்கள் கண்ணாடிக் கீலங்களாக நாவுடன் ஒட்டமுடியாத சுவை யில் இருக்கின்றன.




**நெல்லிப் பாணம், பனங்குட்டான்களின் நிலை**

பனங்குட்டானைக் கடித்துக்கொண்டு தேநீர் குடித்த காலத்தில் அதன் ருசியும் மண மும் நம்முடன் ஒட்டிக்கொண்டுவிட இப் போது போய்ப் பனங்குட்டானை வாங்கி முகர்ந்து பார்த்தாலோ நுகர்ந்து பார்த்தாலே அதில் சலிப்பே வருகிறது. கண்ணாடிப் போத்தல்களில் அடைக்கப்பட்ட நிலையில் தாத்தா வாங்கி வந்து கரைத்துத் தந்த நெல்லிக்கிறஸ் பானத்துக்கும் இப்போதைய நெல்லிக் கோடியல்களுக்கும் எவ்வளவு மாறுபாடுகள். இப்படியாக அந்தக் காலத் தில் (ஆகத் தூரமல்ல கிட்டத்தட்ட 20 வருடங்களுக்கு முன்பென்று வைத்துக் கொண்டாலே...) கிடைத்த சுவையும் தரமும் இல்லாது போனதாகவே உணர்வு மேலோங்கியிருக்கிறதே... ஏனிந்த மாற்றம்...? எதிலிந்த மாற்றம்? பொருள் பண்டங்களிலா...? நமது நாக்கிலா...? வாய் பிசகா? தரக் குறைவா?

---

## ஷெபாஸ் ஷெரீப்...

அணுகுமுறையை ஷெபாஸ் வெளிப்படுத்தி வந்துள்ளார். சீனா-பாகிஸ்தான் பொருளாதார வழித்தடத் திட்டத்தை அவர் தீவிரமாக ஆத ரித்தார். இந்தியாவிலும் அவருக்குத் தனிப்பட்ட தொடர்புகள் உள்ளன. பாகிஸ்தான் தலைமை



அமைச்சராகப் பதவியேற்றுள்ள ஷெபாஸ் ஷெரீ புக்குப் இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடி ட்விட்டரில் வாழ்த் துத் தெரிவித்துள்ளார். இதற்கு நன்றி கூறும் போது, இந்தியாவுடன் அமைதியான உறவை நாடுவதாகத் தெரிவித்துள்ள ஷெபாஸ், அதற்கு முன் காஷ்மீர் பிரச்சினை பேசித் தீர்க்கப்படவேண்டும் என்று ஒரு முட்டுக் கட்டையையும் போட்டுள்ளார்.

ஜம்மு காஷ்மீருக்கு சிறப்பு அதிகாரம் வழங் கிய அரசமைப்பின் 370ஆவது பிரிவை இந்திய அரசு நீக்கியதை எதிர்த்ததோடு, அதைத் தன் தலைமை அமைச்சர் பதவியேற்பு உரையிலும் குறிப்பிட்டுள்ளார். எனவே இந்தியாவை அவர் நட்புறவோடு பார்த்தாலும் பாகிஸ்தானியர்களின் அடிப்படை அரசியலில் இருந்து வெகுதூரம் விலகிச் செல்லமாட்டார் என்பதை யும் அவர் உறுதிப்படுத்தியி ருக்கிறார்.

**பல்முனை நெருக்கடிகள்**

பாகிஸ்தானின் பொருளா தாரம் மிக மோசமான சரி வைச் சந்தித்துள்ளது. வேலை வாய்ப்பின்மை அதிகரித்துள்ளது, கொரோனா பெருந் தொற்றால் ஏற்பட்ட பொருளாதாரச் சீரழிவுகளி லிருந்து அந்த நாடு மீண்டு விடவில்லை. பயங்கர வாதக் குற்றச்சாட்டுகள், இம்ரான் கானின் தாலி பான் ஆதரவுப் போக்கு என சர்வதேச அரசியல் சூழலிலும் பாகிஸ்தான் நல்ல நிலையில் இல்லை. இத்தகைய நெருக்கடி யான சூழலில், ஷெபாஸ் ஷெரீப் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுள் ளார். இம்ரான்கானை பிரதமர் பதவியிலிருந்து நீக்கு வதற்காகக் கை கோத்த பாகிஸ்தான் எதிர்கட்சி களின் ஒற்றுமை 2023 ஒகஸ்ட் அல்லது அதற்கு முன்பாகவே நடத்தப்படட சாத்தியமுள்ள நாடாளு மன்றத் தேர்தல் வரை அப்படியே நீடிக் கும் என்று சொல்ல முடியாது.

அதுவும் பாகிஸ்தானின் வரலாற்றில் அதிக காலம் மாறி மாறி ஆட்சி செய்துவந்துள்ள ஷெரீப் குடும்பத்தின் பாகிஸ்தான் முஸ்லிம் லீகுக் கும் பூட்டோ குடும்பத்தின் பாகிஸ்தான் மக்கள் கட்சிக்கும் இடையிலான அதிகாரப் போட்டி யானது, பொது எதிரி நீங்கிவிட்டால் மீண்டும் தலைதூக்கிவிடும். நாடாளுமன்றத்தில் பெரும் பான்மையை நிரூபிக்கத் தவறியுள்ள இம்ரான் கான், தன் கட்சிக்கு இளைஞர்களிடையே இருக் கும் செல்வாக்கைப் பயன்படுத்திக்கொண்டு, புதி தாகப் பொறுப்பேற்ற அரசுக்கு எதிராகப் போராட் டங்களை முன்னெடுக்கத் தொடங்கியுள்ளார்.

மத அடிப்படைவாதத்துடன் அமெரிக்கா உள்ளிட்ட வல்லரசுகளை பாகிஸ்தானின் எதிரிக ளாகச் சித்தரிக்கும் அவருடைய அரசியல் பரப்பு ரைகளுக்கு இளைஞர்களிடையே செல் வாக்கு உள்ளது. மேலும், ஷெரீபின் கட்சியிலும் நவா ஸின் மகள் மரியத்துக்கும் ஷெபாஸின் மகனும் பஞ்சாப் மாகாண சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான ஹம்ஸாவுக்கும் இடையிலான அதிகாரப் போட்டி ஷெபாஸுக்குத் தலைவலியாக உருவெடுக்கக்கூடும். இந்தச் சவால்களை யெல் லாம் தாண்டி, ஷெபாஸ் ஷெரீப் எவ்வளவு காலம் தலைமை அமைச்சர் பதவியில் தாக்குப் பிடிப்பார் என்பது யாருக்கும் விடை தெரியாத கேள்விதான்.



# மழை பிடிக்காத மனிதன்: விஜய் ஆன்டனிக்கு ஏற்ற கதை

## இயக்குநர் விஜய் மில்டன் பேட்டி

'எல்லோருமே மழை பிடிக்கும் என்றுதான் சொல்வாங்க. ஒருத்தருக்கு மழை பிடிக்கவில்லை என்றால், என்னவோ இருக்கு என்றும் தோன்றுமில்லையா, அதுக்காகத்தான் 'மழை பிடிக்காத மனிதன்' என்று தலைப்பு வச்சேன். இவனுக்கு ஏன், மழை பிடிக்காமப் போனது என்று படத்துலயும் அந்தக் கேள்விதான் வரும். அதுக்கு பின்கதை (பிளாஷ்பேக்) ஏதும் இருக்குமா என்று பார்த்தா, இருக்காது. ஆனா, புரிஞ்சுக்க முடியும். இதற்காகத்தான் பிடிக்காமப் போயிருக்குமோ என்று யோசிக்க முடியும்' என்கிறார் இயக்குநர் விஜய் மில்டன். விஜய் ஆண்டனி நடித்துள்ள படத்தின் இறுதிக்கட்டப் பணிகளில் இருப்பவரிடம் பேசினோம்.

**எதைப் பற்றிய கதை இந்தப் படம்?**

ஒருத்தரைப் பற்றி நமக்குத் தெரியாத பக்கங்கள் நிறைய இருக்கு. தினமும் எங்கயோ



ஒருத்தரைச் சந்திக்கிறோம், அவர் யார், என்ன செய்கிறார் என்கிற விவரம் ஓரளவுக்குத்தான் தெரியும். மிஞ்சிப்போனால் அவர் வீடு எங்கே இருக்கென்று தெரிந்து வைத்திருப்போம். ஆனா, யாருக்குமே தெரியாத ஓர் இடத்துல நாயகன் வந்து நிற்கிறான். அங்க அவன் என்ன செய்கிறான், அவனுக்கு கிடைக்கிற விஷயங்கள், பிரச்சினைகள் என்று கதைபோகும். அதாவது எதுவும் இல்லாத ஒருத்தனை, எல்லாம் இருக்கிறவன் என்ன வேண்டுமானாலும் செய்யலாம் என்று நினைக்கும்போது, அவன் அவர்களை எப்படி எதிர்க்கிறான், என்ன செய்கிறார் என்பதுதான் கதை. இதுவரை நான் எடுத்த படங்கள்ல இருந்து மாறுபட்டு இந்தத் திரைக்கதையை உருவாக்கி இருக்கிறேன்.

**விஜயகாந்த் நடிப்பது என்று இறுதியாகி விட்டதா?**

இன்னும் எனக்குத் தெரியலை. அவரோடு பேசினது உண்மைதான். கதை சொன்னேன், பிடிச்சிருந்தது. ஷூட்டிங் முடிச்சுட்டு ரிலீஸ் ஆகற நேரத்துல, உடல் நிலை சரியா இருந்து, முடிந்தால் செய்யலாம் என்று சொன்னார் கள். இப்ப படத்தை அவருக்கு போட்டுக் காட்ட வேண்டும். விருப்பம் இருந்தால் நடிப்பார். அது முழுக்க முழுக்க அவருடைய முடிவு தான். ஒரு ரசிகனா அவர் நடிச்சா நல்லாயி ருக்கும் என்பது என் எண்ணம். கண்டிப்பா நடிப்பார் என்று நம்பறேன்.

**அப்படி என்ன கதாபாத்திரம் அவருக்கு?**

படத்துல விஜய் ஆண்டனிக்கு மேல ஒரு பாத்திரம் இருக்கும். அவர்தான், சரத் குமார். இவங்க இரண்டு பேருக்கும் மேல, சக்திமிக்கவராக ஒருத்தர் தேவைப்பட்டது. அதுக்கு விஜய்காந்த் நடித்தால் சிறப்பா இருக்கும் என்று நினைத்தேன். அவருக்கும் கதை பிடித்திருந்தது. இரண்டு அல்லது மூன்று நாள் படப்பிடிப்புதான். பார்ப்போம். அவர் உடல் நிலையையும் முக்கியமில் லையா!

**அதிரடி கலந்த கதைதானா?**

நீங்க நினைக்கிற மாதிரியான அதிரடி இல்லை. படம் தொடங்கும்போதே அதிரடி தொடங்கி விடும். அதாவது வெடிகுண்டு வெடிக்கறது, லொறி, கார்கள் பறக்கிற மாதிரியான அதிரடி இருக்காது. உணர்வுபூர்வமான அதிரடி இருக்கும். விஜய் ஆண்டனிக்கு மிகப் பொருத்தமான கதை. அவரே, "என்னைக் காமெடியும் காதலும் பண்ணச் சொல்லாதீங்க, மத்த என்ன வேணாலும் பண்ணுவேன்" னு கிண்டலா சொல்வார். அதனால அதிரடிக் காட்சிகளில் சிறப்பாக நடிச்சிருக்கார். ஆனால், படத்தில அவருக்கு காதல் காட்சிகளும் இருக்கிறது.

**கன்னடக் கதாநாயகர்கும் நடிக்கிறாங்களாமே?**

இந்தக் கதை, இந்தியாவுல எங்கோ ஓர் இடத்துல, மூணு பக்கம் தண்ணி, ஒரு பக்கம் நிலம் இருக்கிற பகுதியில நடக்கும். அப்படி ஓர் இடம் எங்கேயும் கிடைக்கவேயில்லை. பிறகு கோவா, டையூ டாமன், அந்தமான் இப்படி எல்லா இடத்தையும் சேர்த்து, ஓர் இடத்தை உருவாக்கி இருக்கோம். இதற்கு கொஞ்சம் புதிய முகங்கள் தேவைப்பட்டன. அதனால கன்னட கதாநாயகர்களான டாலி தனஞ்செயா, பிருத்வி அம்பாரை நடிக்கக் கேட்டேன். உடனே சம்மதிச்சாங்க. மேகா ஆகாஷ் நாயகி. அவருக்கு முக்கியமான பாத்திரம். விஜய் ஆண்டனிக்கு இணையாக அவர் நடிக்கவில்லை.

**'கோலிசோடா'வை இணையத் தொடரா எடுக்கப் போறீங்களாமே?**

ஆமா. ஹாட் ஸ்டார் தளத்துக்காகச் செய்யப்போகிறேன். 'கோலிசோடா 1.5' என்பது தலைப்பு. 'கோலிசோடா' முதல் பாகத்துக்குப் பின்னர், கோலி 'சோடா 2'க்கு முன்னாடி நடக்கிற மாதிரி ஒரு கதையை எழுதினேன். மிக சுவாரஸ்யமா வந்தது. அதை ஒரு இரண்டரை மணி நேரப் படத்துக்குள்ள அடக்க முடியாது என்று தோன்றியதால் இணையத் தொடர் பக்கம் போனேன். கோலிசோடா படங்கள்ல நடிச்சவங்க நடிக்கிறாங்க. கூடவே, சேரன் சார், பாபி சிம்ஹா முக்கிய வேடங்கள்ல நடிக்கிறார்கள்.

*இவ்விதழ் யாழ்ப்பாணம் இல. 551ஏ கஸ்தூரியார் வீதியிலுள்ள கிறீன் மீடியா கவுஸ் பிரை. லிமிட்டட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 23.04.2022 அன்று வெளியிடப்பட்டது. தொடர்பு :0214927781*